

எல் சல்வடோரில் கருக்கலைப்புக்கு 50 ஆண்டுகள் சிறை

விரிவு. பக். 14

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 237 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 05, புதன்கிழமை 20.07.2016



## மாணவர்கள் கைது செய்யப்படார்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும்

*கூட்டமைப்பிடம் தெரிவித்தார் பொலிஸ்மா அதிபர்*

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது. ஆனால் அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் கேட்டுள்ளனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் இடம்பெற்றமோத லில் காயமடைந்த பக்.29

# விடாப்பிடியாக நின்றால் நல்லிணக்கம் ஏற்படாது

*சிவசிதம்பரத்தின் பிறந்ததின நினைவு நிகழ்வில் இப்படித் தெரிவித்தார் அமைச்சர் ஹக்கீம்*



யாழ்ப்பாணம், ஜூலை 20
நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் இருதரப்பினரும் மத்திய நிலைக்கு வரவேண்டும். நடந்து முடிந்த சம்பவங்களுக்குத் தீர்வுவேண்டும் என்று அடம்பிடிப்பது சாத்தியமில்லை. இலங்கை இராணுவத்துக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை அவசியமில்லை. சேதமில்லாத விட்டுக்கொடுப்புடன் செயற்பட அனைத்துத்தரப்பினரும் முன் வரவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம்.
அமரர் மு.சிவசிதம்பரத்தின் 93ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வு கரவெட்டி தச்சை ஐங்கரன் முன்பள்ளி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் சிறப்பு உரையாற்றிய அமைச்சர் ரவூக் ஹக்கீம் தெரிவித்ததாவது:
இந்த நாடு மனிதநேயமும் புரிந்துணர்வுகொண்ட சகவாழ்வு நோக்கிப் பயணிக்க வேண்டும். அதற்கான மனப்பாங்கை வளர்ப்பதற்கு அனைத்துத்தரப்பினரும் பக்.27

## ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தவேண்டும்

*கனேடிய அரசு உறுதியாகவுள்ளது என்கிறார் ஹரி ஆனந்தசங்கரி எம்.பி*



யாழ்ப்பாணம், ஜூலை 20
இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்தில் கனேடிய அரசு மாறவில்லை. இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதற்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே கனேடிய வெளி விவகார அமைச்சர் இந்த மாதம் இலங்கைக்கு வருகை தருகின் பக்.29

# கொக்கிளாயில் மீன்பாடுகள் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை

*உரிமையை மீளப் பெறச் சென்ற தமிழ் மீனவர் வெளியேற்றம்*



முல்லைத்தீவு, ஜூலை 20
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட உறுதிக்கு அமைவாக, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தி வழங்கப்பட்ட பிரதேசத்தில் நாம் வாடி அமைக்க முற்பட்டோம். இதற்கு சிங்கள மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொலிஸாரும், கொக்கிளாய் விகாராதிபதியும் இந்த விடயத்தில் தலையிட்டு எங்களை அங்கிருந்து வெளியேற்றினர்.
இவ்வாறு தெரிவித்தார் கொக்கிளாய் மீனவ சங்கத் தலைவர் ஜூட்.
இது தொடர்பில் சிங்கள மீனவர்களினால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து வாடிகள் அமைக்கச் சென்ற 19 கொக்கிளாய் மீனவர்கள் மற்றும் அவர்களுடன் சென்ற இரண்டு கிறிஸ்தவ மதகுருமாரையும் இன்றைய தினம் விசாரணைக்கு வருமாறு பொலிஸார் அழைத்துள்ளனர்.
இது தொடர்பில் கொக்கிளாய் மீனவ சங்கத் தலைவர் ஜூட் தெரிவித்ததாவது:
நாம், கொக்கிளாய் கடல் நீரேரியில் மீள்குடியமர்வின் பின்னர் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். பெருங்கடலில் தொழில் செய்வதற்கு படகுகள், என்ஜின்கள் எம்மிடம் உள்ளன. எனினும் படகு நிறுத்தும் துறை, பக்.29

### முச்சந்தி முரளி



அனுபவிச்சவனுக்குத் தான் அதன் வலி தெரியும்...

## ரூ.16 கோடி வெளிநாட்டு பணத்துடன் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 20
பதினாறரைக் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களை இலங்கையிலிருந்து கடத்துவதற்கு முயன்ற குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாகக் கட்டுநாயக்க விமானநிலைய சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்களில் பெண்ணொருவர், தமது பயணப் பொதியில் சூட்சுமமான முறையில் இந்தப் பணத்தை மறைத்துக் கொண்டு செல்வதற்கு முயற்சித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாகக் கிடைத்த தகவலின் பிரகாரம், அதிகாலை பக்.28

## யாழ். பல்கலை. மாணவர்கள் புரிந்துணர்வுடன் உள்ளனர்

**யாழ்ப்பாணம் வந்த அமைச்சர்கள் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் புரிந்துணர்வுடனேயே உள்ளனர். தங்களுடைய கல்விச் செயற்பாடுகளை எந்தவித இடையூறுகளும் இன்றித் தொடர்வதற்கு பக்.27




Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பல்கலைக்கழகங்களில் சகல இனங்களின் நிகழ்வுகளுக்குமெனத் தேசிய கொள்கை

## யாழ். பல்கலைக்கழக சமூகம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் சகல இனத்தவர்களின் நிகழ்வுகளும் இடம்பெறும் வகையில் தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர், நடுவண் அரசின் அமைச்சர்களிடம் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர், மாணவர்கள் மற்றும் நடுவண் அரசின் 3 அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர் குழுக்களிற்கிடையிலான மோதல், இன ரீதியிலானதே என மாணவர் ஒன்றியமும், நிர்வாகத்தின் கருத்துக்களிலிருந்தும் புலனாகின்றது.

இந்த நிலையில்பல்கலைச் சூழலில் எதிர்காலத்தில் சகல இன நிகழ்வுகளையும் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான முரண்பாடுகளைத் தடுக்க முடியும் என அமைச்சர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை முன்னெடுப்பதற்கு தேசிய கொள்கைஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று பல்கலைக்கழக சமூகத்தினர் கேட்டுக் கொண்டனர். அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக அமைச்சர்கள் தெரிவித்தனர்.

“மாணவர்களைத் தூண்டி குழப்பங்களை விளைவிப்பவர்கள் அந்தச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும். சிங்களவர்கள் தமிழர்கள் என்ற வேற்றுமை யாழ்.பல்கலைக்கழகத்தில் இல்லை. அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வருவோம் என்றும் மாணவர்கள் உறுதியளித்தனர். யாழ். பல்கலைக்கழகத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றே மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். சிலரின் தூண்டுதலின் பேரிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளதென்றும் மாணவர்கள் தெரிவித்தனர்”-என்றார் மீள்குடியேற்றம் மற்றும் சிறைச்சாலைகள் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன். (வ-4,101,106)

# புதிதாகத் தெரிவான அதிபர்களுக்கு பாடசாலை வழங்கப்படவேண்டும்

## வலியுறுத்தி வெள்ளியன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கை அதிபர் சேவைக்கான பரீட்சையில்சித்தியடையாதகடமை நிறைவேற்று அதிபர்களுக்கு எந்தக்காரணம் கொண்டும் அதிபர் பதவி வழங்கக் கூடாது. அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளவர்களுக்கு உடனடியாகப் பாடசாலைவழங்கப்படவேண்டும். இவற்றை வலியுறுத்தி கொழும்பு விகாரமாதேவி பூங்கா அருகில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில்சங்கத்தின்பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்ததாவது:

பரீட்சையில் சித்திபெற்று இலங்கை அதிபர் சேவை தரம் 3இற்கு தெரிவானவர்களுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினருக்குமான சந்திப்பு யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியிலுள்ள ஈ-சிற்றி ஆங்கில பாடசாலையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 150 க்கும் மேற்பட்ட புதிய அதிபர்கள் கலந்து கொண்டனர். புதிதாக அதிபர் சேவைக்குள் உள்ளீர்கப்பட்டவர்களுக்கு இது வரை பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்படாமை தொடர்பாக அதிபர்கள் கவலை வெளியிட்டனர். தமது கோரிக்கையை வென்றெடுப்பதற்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது என்று அதிபர்கள் தமது ஆர்வத்தைத் தெரிவித் தனர்.

அதிபர் தரப் பரீட்சைக்கு 21 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர். 19 ஆயிரம்பேர்தோற்றியிருந்தனர். அவர்களில் சித்தியடைந்தவர்களுக்கு இந்தவருடம் 3 ஆயிரத்து 856 பேர் அதிபர் பதவி பெற்றனர். ஆனால் அவர்களுக்கென பாடசாலைகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்த இழுத்தடிப்பை ஏற்றுக் கொள்ளமுடியாது. சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட அதிபர்களுக்கு உடனடியாகப் பாசடாலைகள் வழங்கப்படவேண்டும்.

நேற்றைய கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (வ-4)

# போதைப்பொருள் சந்தேகநபர்கள் யாழ். சிறையில் உணவு தவிர்ப்பு

## பிணை வழங்கக் கோரி

யாழ்ப்பாணம், ஜூலை 20

சமூகவிரோதமானதும் சட்டவிரோதமானதுமான செயலான கஞ்சா போதைப் பொருள்களைக் கடத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ளவர்கள் தம்மைப் பிணையில் விடுவிக்குமாறுகோரி நேற்றுமுன்தினம் தொடக்கம் யாழ்.சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில்பலர்நேற்றுஉணவை உட்கொண்டு போராட்டத்தை நிறைவு செய்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. போராட்டத்தில்ஈடுபட்டுள்ளவர்கள சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில் 36 பேர் நேற்றுமுன்தினம் தொடக்கம் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். அவர்களில் 18 பேர் வரையில் நேற்று உணவு தவிர்ப்பை நிறைவு செய்துவிட்டனர்.

அவர்கள் பல கிலோகிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கடத்திய - விற்பனை செய்த, வைத்திருந்த குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்கள். அவர்களிடம் பல கிலோகிராம் நிறையுடைய கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதனால், நீதிவான் மன்றினால் பிணை வழங்க முடியாது. அதனால் யாழ். மேல் நீதிமன்றம் தம்மைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டதாக யாழ்ப்பாணச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதை ஒழிப்பு நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நிலையில் பிணை வழங்குவது சிந்திக்க வேண்டிய விடயம். பிணை வழங்கலில் உள்ள நிலைமை தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் பேசப்படும் என உணவுதவிர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்களிடம் அமைச்சர் சுவாமிநாதன் தெரவித்தார். (வ-4,ரி4)

# வைத்தியசாலையில் பசில் ராஜபக்ச

கொழும்பு, ஜூலை 20

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டார்.

திடீரென .ஏற்பட்ட முதுகுவலி காரணமாகவே அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச சொத்துக்களை தனது தனிப்பட்ட தேவைக்காக தவறாக பயன்படுத்தியமை, கமநெகுமதிட்டத்தின் நிதியை மோசடி செய்தமை, உள்நாட்டு பயணாங்களின் விமானச் சேவைக்காக 150 மில்லியன் ரூபாவை மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ச, கடுவெல நீதிவான் மன்றின் உத்தரவில் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் . (வ-5)

# வடக்கில் போரால் பாதிப்புற்றோருக்கு உளசமூக மேம்பாட்டு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

போரினாலும், ஏனைய காரணிகளாலும், உளசமூக ரீதியாகப் பாதிப்புற்ற மக்களுக்கு உதவும் பொருட்டு, உளசமூக பயிற்றுனருக்கான இரண்டு மாத காலப் பயிற்சி நெறியை வழங்குவதற்கு--

உளசமூக செயலணி, தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் ஏற்பாடுகளைச் செய்ய உள்ளது.

இந்தப் பயிற்சி நெறியை பயில்வதற்கு, இத்துறையில் ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் சேர்க்கப்படுவர். அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களை அழைத்து முழுமையான விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம் - 0776621811, வவுனியா மாவட்டம் - 077 2494271, கிளிநொச்சி மாவட்டம் - 0774539215, மன்னார் மாவட்டம் - 0776411591, முல்லைத்தீவு மாவட்டம் - 077 7487334 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முழுவிவரங்களையும் அறிந்து கொள்ள இயலும். (அ)

# இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி வெள்ளி முதல் தொடர் போராட்டங்கள்

## இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு

இராமநாதபுரம், ஜூலை 20

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 77 இந்திய மீனவர்களையும் 111 விசைப்படகுகளையும்விடுவிக்குமாறு கோரி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளதாக, இராமேஸ்வரம் மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் மீனவப் பிரதிநிதிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இராமேஸ்வரம் மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தாவது:

இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் எமது மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனை கண்டிக்கின்றோம். இதுவரையில் 77 மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். 111 விசைப் படகுகள் இலங்கை கடற்படையினால் கைப்பற்றப்பட்டன. இவற்றை விடுவிக்க வேண்டும்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் காலவரையற்ற தொழில் புறக்கணிப்பில் ஈடுப்படுவது. 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தின் எதிரே கண்டனப் போராட்டம் நடத்துவது. இந்த இரண்டுக்கும் தீர்வு கிடைக்கவில்லை என்றால், 28 ஆம் திகதி தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர் போராட்டங்களுக்கு தமிழுத்திலுள்ள விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகு மீனவர்களின் ஆதரவைப் பெற்று தமிழகம் முழுவதும் தொடர் போராட்டங்களை நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது - என்றனர். (வ-5)

# யாழ். பல்கலைக்கழகம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும்

## மாணவர் ஒன்றியம் நம்பிக்கை

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு முரணான எந்தச் செயற்பாட்டையும் மாணவர்கள் மேற்கொள்வதில்லை. எனவே அசம்பாவிதத்துக்கு உடனடியாக தீர்வு எடுக்கப்பட்டு, அடுத்தவாரம் அனைத்துப் பீடங்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் யாழ். பல்கலைக் கழகமாணவர்ஒன்றியத்தலைவர் சி.சிசிதரன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் ஆராய்வதற்காக நடுவண் அரசின் அமைச்சர்கள் குழு நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்தது. அவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்ததாவது:

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த வாரம் நடைபெற்ற சம்பவம் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டினால் ஏற்பட்டது என்பதே உண்மை. பல்கலைக்கழக நிர்வாகம் சரியான புரிதலுடன் இந்தப்பிரச்சினைக்கு அணுகி தீர்வை வழங்க முன்வந்துள்ளது.

அமைச்சர்களுடனான இன்றைய (நேற்றைய) கலந்துரையாடலில் இந்தக் குழப்பத்துக்கான காரணத்தை தெரியப்படுத்தி னோம். அதில்எமது நிலைப்பாட்டை தெளிவாக தெரிவித்தோம். எமது கல்வி நடவடிக்கைகள் உடன டியாக ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கேட்டுள்ளோம். யாழ். பல்கலைக் கழகம் என்ற ரீதியில் எமக்கென தனி யான கலாச்சாரம், பண்பாடு உள்ளன. அதை எந்தவகையிலும் தணிக்கை செய்யவோ விட்டுக்கொடுக்கவோ முடியாது. அதே போல் பிற இன, மத மாணவர்களுக்கும் மதிப்பளிப்பும் வழங்கி வருகிறோம்.- என்றார். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கு கரவலைத் தொழில் செய்ய அனுமதி

## மாவட்டச் செயலாளரின் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜூலை 20

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்பரப்பில் கரைவலை தொழிலை மேற்கொள்வதற்கு மீண்டும் அந்தப் பகுதி தமிழ் மீனவர்களுக்கு அனுமதி உண்டு என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொக்கிளாயில் கரை வலைத் தொழிலில் ஈடுபடும் சிங்கள மீனவர்களின் நட வடிக்கைகளைப் பாதிக்காத வகையில், அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதாகவும் தீர்மானத்தில் கூறப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மீனவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட இடப் பெயர்வுகளுக்குப் பின்னர் முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் குடியேறிய சிங்கள மீனவர்கள் கொக்கிளாய் கடற்பரப்பில் கரவலைத் தொழிலை மேற்கொண்டுவந்தனர். எனினும் அங்கு தமிழ் மீனவர்களுக்கு கரைவலைத் தொழிலுக்கு அனுமதி வழங்கப்படவில்லை இதனால் இரு இன மீனவர்களுக்கும் இடையே பாடுகளின் உரிமம் தொடர்பாக நீண்டகாலமாகச் சிக்கல்கள் நிலவிவந்தன.

1965ஆம் ஆண்டு வெளியான வர்த்தமானி அடிப்படையில் தீர்வுகள் எடுக்கப்படவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவரால் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த அதிகாரிகள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் கரைவலை தொழில் உட்பட மீன்பிடியில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டும் வகையில் ஏகமனதாக பல தீர்மானங்களை நிறைவேற்றினர். மாவட்டத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ள தென்னிலங்கை மீனவர்களில் முறையான அனுமதி வழங்கப்பட்ட மீனவர்கள் மட்டுமே தொடர்ந்தும் தொழில் செய்ய அனுமதிக் கப்படவேண்டும் . ஏனையவர்களின் அனுமதி இரத்துச் செய்யப்படும். இதன் பிரகாரம் முறையான அனுமதியைக் கொண்ட 72 படகுகளும் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட முடியும். ஒருவர் ஒரு படகில் மட்டுமே தொழில் செய்ய முடியும். இருப்பினும் இங்கு 40 படகினை வைத்து தொழில் புரிபவருக்கு 5 படகுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

கரைவலைத் தொழிலை 1965ஆம் ஆண்டு இருந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உடன் அனுமதி வழங்கப்பட வேண்டும். இதனைவிடவும் மேலதிக தொழி லில் ஈடுபடுபவர்களுக்கு பொருத்தமான இடங்கள் இருந்தால் மட்டுமே வழங்கப்படலாம்.

கொக்கிளாய்ப் பிரதேச மீனவர்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் ஓர் இறங்குதுறை அமைக்கப்பட வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ-21,101,ரி7)

வேலையாள்கள் தேவை
தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிவதற்கு செய்தி ஆசிரியர்கள், செய்தி வாசிப்பாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 0098336
(சிவன் தொலைக்காட்சி)

தேவை
1).அலுவலக உதவியாளர் (பெண்கள்) தகைமை, கணினி அறிவு,ஆங்கிலம்,முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2).மேசன்,கூலியாள்கள்
தொடர்பு.R.S.ஞானப்பிரகாசம் கட்டட ஒப்பந்த நிறுவனம்
32 றக்கா வீதி யாழ்ப்பாணம்
0773549625. 0773551631

கடை வாடகைக்கு
யாழ் நகரில் கஸ்தூரியார் வீதியில் (லிங்கன் கிறீம் ஹவுஸ் முன்பாக) புதிய கட்டட தொகுதி (500 சதுர அடி) கீழ் தளம் வாடகைக்கு உண்டு.
(நகைக்கடைக்கு உகந்தது)
தொடர்புகளுக்கு:077 3604011

K.K.S வீதி பண்டிக்குட்டி பிள்ளையார் கோயில் முன்பாக (2400 சதுர அடி) கடைகள் வாடகைக்கு உண்டு. மேல்தளம் 8 அறைகளுடன் கூடிய வீடும் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) (யாழ் நகரிலிருந்து 1Km தொலைவில்)
தொடர்புகளுக்கு:077 3604011

வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
ஆண்: (18-40) அடிப்படை சம்பளம் 15000/-
பெண்: (18-25) அடிப்படை சம்பளம் 10000/-
தொடர்புகளுக்கு:
021 2224332.021 2226807

நியத்த ஜய
480
19.07.2016
மஞ்சள்
14 20 42 60 Z
ரூ.1,21,18,140/=
Tel: 011 4 824 824
2016.07.22

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.8,78,42,360/-
029
2016-07-19
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
E 23 40 65 77
கோடிபதி ஷனிதா
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
19.07.2016 2006 நீலம்
01 13 28 30
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 22,03,260 /-
Web: www.dlb.lk

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும்
க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 7 வது முன்னோடிப் பரீட்சை - 2016

MORA TAMILS 2018

# முன்னிலைப் பெறுபேறுகள்

### கணிதப் பிரிவு

| # | Name | District | Maths | Physics | Chemistry | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kajaroganan Kajanan | Jaffna | A | A | A | 2.9034 | 1 |
| 2. | Raveendran Banupriyan | Jaffna | A | A | A | 2.8988 | 2 |
| 3. | Sivanantharasa Vithakan | Jaffna | A | A | A | 2.7933 | 3 |
| 4. | Kanagalingam Shanggeeth | Jaffna | A | A | A | 2.7867 | 4 |
| 5. | Ravikkumar Thiruparan | Jaffna | A | A | A | 2.755 | 5 |
| 6. | Sivapalan Shankeerthan | Jaffna | A | A | A | 2.727 | 6 |
| 7. | M.A.M.Afham | Trincomalee | A | A | A | 2.6411 | 7 |
| 8. | T.Luheerathan | Jaffna | A | A | A | 2.5866 | 8 |
| 9. | Rajenthirakumar Subakaran | Jaffna | A | A | A | 2.5372 | 9 |
| 10. | Sivaraasan Thaarmekan | Jaffna | A | A | A | 2.4651 | 10 |
| 11. | S.Thenusan | Vavuniya | A | A | B | 2.4570 | 11 |
| 12. | Sivapathasundaram Mathurikan | Jaffna | A | A | A | 2.4131 | 12 |
| 13. | Arutshankar Kaneshalingam | Jaffna | B | A | A | 2.4089 | 13 |
| 14. | Lingaratnam Subakaran | Jaffna | A | A | A | 2.4060 | 14 |
| 15. | Thilakaraj Prakanth | Jaffna | A | A | A | 2.3920 | 15 |

### உயிரியற் பிரிவு

| # | Name | District | Biology | Physics | Chemistry | Z-Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Thirumaran Elamaran | Jaffna | A | A | A | 2.6980 | 1 |
| 2. | Hamsha Thananshajan | Jaffna | A | A | A | 2.6359 | 2 |
| 3. | Mahthi Roshan Akthar | Trincomalee | A | A | A | 2.5977 | 3 |
| 4. | Gnenachelvam Kiruthikan | Trincomalee | A | A | A | 2.4866 | 4 |
| 5. | Thanusiya Karunakaran | Jaffna | A | A | A | 2.4054 | 5 |
| 6. | P. Clearein dilujan | Ampara | B | A | A | 2.3911 | 6 |
| 7. | Yalini Kailayapathy | Jaffna | A | A | A | 2.3291 | 7 |
| 8. | T . Mathura | Vavuniya | A | A | A | 2.3260 | 8 |
| 9. | T . Agashan | Jaffna | A | A | A | 2.3108 | 9 |
| 10. | Niluja Mahadevan | Jaffna | A | A | A | 2.3036 | 10 |
| 11. | Srinagasheyini Sooriyakumar | Jaffna | A | A | A | 2.1921 | 11 |
| 12. | Suganya Suganthan | Jaffna | B | A | A | 2.1813 | 12 |
| 13. | Yosenthirarajah Shahithiyan | Jaffna | A | A | B | 2.1565 | 13 |
| 14. | Jastiha Ragunathan | Jaffna | A | A | B | 2.1338 | 14 |
| 15. | Pathmanathan Mesigan | Jaffna | A | B | A | 2.1166 | 15 |

### உயிர்முறைமைகள் தொழினுட்பம்

| # | Name | District | BIO.TEC | SCI.TEC | ICT | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Manchika Inparasa | Jaffna | B | B | A | 2.1723 | 1 |
| 2. | Maheer Fathima Minasa | Batticola | B | A | B | 2.0288 | 2 |
| 3. | Ranganathan Agimsha | Jaffna | B | B | B | 1.8302 | 3 |
| 4. | Saraha Kaneshakumaran | Jaffna | A | S | A | 1.6575 | 4 |
| 5 | Balakrishnan Pirashanthi | Jaffna | C | B | B | 1.6350 | 5 |

### பொறியியற் தொழினுட்பம்

| # | Name | District | ENG.TEC | SCI.TEC | ICT | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kanakasuntharam Jathursayan | Jaffna | A | A | A | 2.3416 | 1 |
| 2. | Thanabalaratham Athavan | Jaffna | A | B | B | 1.7349 | 2 |
| 3. | Kirishalini Sellathurai | Jaffna | A | B | B | 1.4497 | 3 |
| 4. | Sanmugaraj Naresh | Jaffna | A | B | C | 1.3828 | 5 |
| 5. | Thayaparan Luxmy | Jaffna | C | A | A | 1.3688 | 6 |

Exam Results Send mexam M019876 to 77100 via Dialog Mobile

பரீட்சை மதிப்பீட்டுப் பெறுபேறுகள் மற்றும் தரவரிசைகளை பெற்றுக் கொள்ள www.moraetamils.com நாடவும்.

பரீட்சை பெறுபேறுகளை Dialog Mobile மூலம் பெற்றுக் கொள்ள 77100 இற்கு mexam<space>(your index no) என type செய்து SMS அனுப்பவும்.

MEDIA SPONSOR உதயன் | PRINTING PARTNERS Harikanan printers of the north | MAIN SPONSOR INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

www.moraetamils.com
morae2018@gmail.com 0773534782

Brought to you by
ICBT Campus, Biritish Council, Harihanan Printers, BCAS, SCOT
Thanks to
HNB Bank(Medro), Sampath Bank(Jaffna), Pirahanth, Kiruba Lerners, New Nelson Lerners

MORATUWA ENGINEERING FACULTY TAMIL STUDENTS 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம் ஒடியலுக்கு பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜூன் 20
பனம் ஒடியலின் பாவனை அதிகரித்துள்ளதால் அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.
குடாநாட்டில் பனம் ஒடியலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கூடுதலான பனம் ஒடியல்களை நுகர்வோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் கொள்வனவு செய்வதால் அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அதனைவிட கடந்த கால போகத்தின்போது அதிகமான பனங்கிழங்குகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பனங்கிழங்கையும் கூடுதலான மக்கள் தமது உணவுக்குப் பயன்படுத்தியதால் அவற்றை ஒடியலாக குறைந்த பட்சமே மாற்ற முடிந்தது- என்று அவர் தெரிவித்தார்.

(ற-17)

## விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றல்

தென்மராட்சி, , ஜூன் 20
வரணிப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து இன்று புதன்கிழமை தொடக்கம் ஏற்றப்படவுள்ளது.
பிரதேசத்தில் உள்ள வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன், தாவளை - இயற்றாலை, வரணி - இயற்றாலை ஆகிய எட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.
தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் அலுவலக வாகனம் மூலம் அறிவிக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்தனர்.

(ற-9)

# வடக்கு மீன்பிடி அமைச்சின் பங்குபற்றலோடே பேச்சுகள்

### வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் வலியுறுத்துகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 20
வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் பங்குபற்றுதலுடனேயே இந்திய – இலங்கை மீனவர் பேச்சு எதிர்காலத்தில் இடம்பெற வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நான்கு மாவட்ட மீனவ சமாசங்களின் தலைவர்களும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையமும் இணைந்து கடந்த 12ஆம் திகதி மாகாண சபைமுன்பாகமுன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் வடக்கு மாகாணத்தில் அவ்வாறானபிரச்சினைகள்எதுவுமில்லை என்று மீனவ அமைப்புக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் அறிக்கை விட்டனர்.
வடமாகாண மீனவர்களின் போராட்டத்தின்நியாயத்தன்மையை புரிந்து கொண்ட வடமாகாண அரசும் மத்திய அரசின் மீன்பிடி அமைச்சும் நியாயமான தீர்வை வழங்க முன்வந்திருக்கின்றன.
இந்த நிலையில் தாங்களே இதனைப் பெற்றுத் தந்தார்கள் என்று வடமாகாண மீனவர்களிடம் மார்தட்டிக் கொள்ள சிலர் முனைப்புக் காட்டுகின்றனர். கடந்த காலங்களில் இவர்களின் செயற்பாடுகளை வடமாகாண மீனவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.
மத்திய அரசின் அமைச்சர்களுக்கு அவர்களின் விசுவாசிகள் என்று தங்களைக் காட்டிக் கொள்ளும் இவர்கள் தாங்கள்தான் வடபகுதி மீனவர்களின் தலைவர்கள் என்று கூறிக் கொண்டு அமைச்சு வழங்கும் கட்டளைகளை வடபகுதியில் திணிப்பதற்கும் வடபகுதியில் உள்ள மீனவர் பிரச்சினைகளை அமைச்சுக்கு தெரியப்படுத்தினால் எங்கே தமது பதவிகள் பறிபோய்விடும் என்று மௌனிகளாயிருந்த இவ்வாறானவர்களின் பிரசன்னம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைத் தராது.
இந்தியத் தரப்புடனான மூன்று கட்டப் பேச்சுகளில் கலந்து கொண்ட இவர்கள் உருப்படியாக எதனையும் செய்யவில்லை. மீனவர் பிரச்சினை தொடர்பான உறுதியான தீர்வுத் திட்டம் ஏதும் இவர்களிடமில்லை.
இதற்கான தீர்வாக இரு வாரங்களுக்கு முன்னர் பிரதமர் நாடாளுமன்றத்தில் கூறியது போல், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தை வர்த்தமானி ஊடாக வெளியிட உடன் நடவடிக்கை எடுக்க வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சு பரிந்துரை செய்ய வேண்டும். எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் வடபகுதி மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இலங்கை இந்திய மீனவர்களின் பேச்சு வடமாகாண மீன்பிடி அமைச்சின் பங்குபற்றலுடனேயே நடைபெற வேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது.(ற-5-56)

**UNIVERSITY OF JAFFNA**
**NOTICE**

1. All the academic activities of Vavuniya Campus, Faculty of Medicine, Faculty of Engineering, Faculty of Agriculture and the Unit of Siddha Medicine will commence on 20.07.2016.
2. The examinations of Faculty of Arts and the Ramanathan Academy of Fine Arts will commence on 25.07.2016.

The students are requested to contact the Faculty of Arts for the examination time table.

**Registrar.**

(C/2438) (11,17,18)

# புங்குடுதீவு மாணவி கொலை; சந்தேகநபர்களின் தாய் சாவு

### விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது

யாழ்ப்பாணம், ஜூலை 20
புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட மாணவியின் தாயாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் வசிக்கும் மகாலிங்கம் தவநிதி (வயது -65) என்பவரே உயிரிழந்தார்.
இவர் புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 2 சந்தேக நபர்களின் தாயாவார்.
மாணவியின் தாயாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். உடல்நலக் குறைவு காரணமாகக் கடந்த சனிக்கிழமை இரவு 10.20 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது கடந்த சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் உயிரிழந்தார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
இவர், மாணவியைக் கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் முதலில் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களில், 9 ஆவது சந்தேகநபரான புங்குடுதீவைச் சேர்ந்த மகாலிங்கம் சசிகுமார் (சுவிஸ் குமார்), 6 ஆவது சந்தேகநபரான மகாலிங்கம் சசீந்திரன் ஆகியோரின் தாயாவார்.
மாணவி கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணையில் இருந்து வரும் நிலையில், நீதிமன்றுக்கு வந்து செல்லும்போது சந்தேக நபர்களின் உறவினர்கள் தன்னை இழிவாகப் பேசுகின்றனர் என்றும் அச்சுறுத்துவதாகவும் கொல்லப்பட்ட மாணவியின் தாய் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தார். அவ்வாறு ஏதாவது இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்ய முடியும் என்று நீதிமன்று அறிவுறுத்தியிருந்தது.
பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த குற்றச்சாட்டில் கடந்த மே மாதம் தவநிதி, செல்வராணி ஆகிய இருவரைக் கைதுசெய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர். இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.
சில தவணைக்கு முன்னர் அவரைப் பிணையில் விடுமாறு நீதிமன்றில் கோரியபோது இந்த வழக்கில் இத்தகைய குற்றச்சாட்டுக்கு நீதிவான் மன்றால் பிணை வழங்க முடியாது. சமர்ப்பணம் செய்தால் பிணைக்கான வாய்ப்பு உள்ளதா என்று ஆராயலாம் என்று தெரிவித்த நீதிமன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணைவிண்ணப்பம் செய்யுமாறும் கூறியிருந்தது. அதனால் அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
இருவரினது வழக்கின் அடுத்த தவணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. தவநிதி சனிக்கிழமை உயிரிழந்தார். அவருடன் மறியலில் உள்ளவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. மாணவி கொலை வழக்கில் மறியலில் உள்ள 9 பேருக்கு அடுத்த மாதம் வரை விளக்கமறியல் யாழ்.மேல்நீதிமன்றால் ஏற்கனவே நீடிக்கப்பட்டது. அவர்களுக்கும் அவர்களின் பின்னர் கைது செய்யப்பட்ட 3 பேருமாக 12 பேரின் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ற-4)

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தின்
ஆடி மாதம் முடியும் வரை என்றும் எங்கும் இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்
அசத்தலான ஆடித்தள்ளுபடி



| | | |
|---|---|---|
| * சாறி (பட்டு கல்லுவைத்தது) | 2500/= | |
| * நெற்சாறிகள் | 1000/= | 2000/= |
| * ஸ்கேட் வகைகள் | 500/= | 750/= |
| * பிளவுஸ் வகைகள் | 250/= | |
| * T. சேட் வகைகள் | 250/= | |
| * பஞ்சாபி வகைகள் | 500/= | 750/= |
| * ஜீன்ஸ்வகைகள் | 500/= | |
| * சேட் வகைகள் | 500/= | 750/= |
| * கொட்டன் சாறிவகைகள் | 500/= | |
| * 01 M சலஞ்சர்துணி 44" | 100/= | |

மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்
44, 42 பெரியகடை , யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் மாறி விட்டனர் தமிழர்கள் மாறாதுள்ளனராம்

## ஜாதிக ஹெல உறுமய கட்சி கூறுகின்றது

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் சிங்கள மக்களின் எண்ணம் - சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழ் மக்களினதும் - தமிழ்த் தலைமைகளினதும் எண்ணம் - சிந்தனை மாறவில்லை. வடக்கிலுள்ள தமிழ் மக்கள், சிங்கள மக்களை இன்னமும் ஆக்கிரமிப்பாளர்களாகவே கருதுகின்றனர்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதான காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேல் மாகாண சபை உறுப்பினரும், கட்சியின் ஊடகப் பேச்சாளருமான நிசாந்த சிறி வர்ண சிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது :-

தெற்கிலுள்ள கொழும்பு மற்றும் பெரதெனிய பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் பரதநாட்டியம் அரங்கேற்றம் செய்வதற்காக இவ்வாறான தாக்குதல்களை நாம் முன்னெடுக்கவில்லை. சமவுரிமை மற்றும் நல்லிணக்கம் யாழ்ப்பாணத்தில் உள்ளதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களுக்கே இந்த நிலமை காணப்படும் என்றால் மீள்குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் நிலமை எவ்வாறு காணப்படும்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் சிங்கள மக்களின் எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிங்கள மக்களின் மனநிலமை தொடர்ந்து ஒரே மாதிரியாக இருந்திருப்பின் பௌத்தர்களின் புனித தலமாக போற்றப்படும் கண்டி தலதா மாளிகைக்கு தாக்குதல் நடத்தப்பட்ட போது சிங்கள மக்கள் நினைத்திருந்தால் கண்டியிலுள்ள தமிழ் வியாபார தளங்களைத் தாக்குதலுக்கு உள்ளாக்கியிருக்க முடியும். பெரதெனிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

வடக்கிலுள்ள தமிழ் மக்கள் இன்னும் சிங்கள மக்களை ஆக்கிரமிப்பாளர்களாவே கருதுகின்றனர். நல்லிணக்க செயற்பாடுகளை மையப்படுத்தி மாற்றங்களை நாம் ஏற்படுத்தியுள்ளோம். யாழ். பல்கலைக் கழகச் சம்பவத்துக்கு தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

சிங்களவர்களாகிய நாம் மாறி விட்டோம். ஆனால் தமிழ் தலைமைகளும் பல்கலைக் கழகமும் இன்னும் மாறவில்லை என்றே தோன்றுகின்றது. வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் மற்றும் எதிர்க் கட்சி தலைவர் இரா.சம்பந்தன் என்ன பதிலளிக்க போகின்றார்கள் என்பதனை நாம் அவதானித்துக் கொண்டுள்ளோம். அவர்களது அறிவிப்பிலேயே எதிர்கால நடவடிக்கைகள் தங்கியுள்ளது. இவ்வாறான நிலமை தொடர்ந்து கொண்டே இருக்குமேயானால் இன நல்லிணக்கம் கேள்விக் குறியாக மாறிவிடும்.

இந்தச் சம்பவம் பிரபாகரனின் நோக்கங்களை பிரதிபலிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இதனை நல்லிணக்கம், சமாதானம் என்ற போர்வையில் மூடி மறைப்பதற்கு இடமளிக்க முடியாது. குற்றம் இழைக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். இராணுவத்தின் மீது பழி சுமத்துவதற்கு புலம்பெயர்ந்த அமைப்பினர்களும் தமிழ்த் தலைமைகளும் முயற்சித்து வருகின்றனர். இனவாதம் தூண்டப்படும் என்பதைக் கொண்டு இந்தச் சம்பவத்தை மூடிமறைக்கப் பார்க்கின்றனர். அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இனவாதிகளுக்கு பெரும் அதிர்ஷ்டமாக மாறிவிடும். சம்பவத்தை மூடிமறைத்தால் இன ரீதியான பிரச்சினை என்றுமே தீராது.

யாழ்ப்பாணத்தில் இனவாத பிரவேசத்துக்கு நாம் இடமளிக்கக்கூடாது. இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தெற்கு இனவாத தூண்டுதல் செயற்பாடுகளுக்கும் இடமளிக்கக் கூடாது. தமிழ் அரசியல் தலைமைகள் சிலர் இன்னும் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று கூறுகின்றனர். இனிமேல் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் தலைமைகளும் பல்கலைக்கழக மாணவர்களுமே மாறவேண்டும். பயங்கரவாதத்திலிருந்து யாழ்ப்பாணத்தை மீட்டாலும் பயங்கரவாத சிந்தனைகளை எம்மால் மாற்ற முடியாதுள்ளது - என்றார். (ற-5)

### இலங்கையில் முதலிடவுள்ள இந்திய பன்னாட்டு நிறுவனம்

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பன்னாட்டு இந்திய நிறுவனம் ஒன்று இலங்கை அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

இலங்கை முழுவதும் 2 ஆயிரத்து 400 வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு அந்த நிறுவனம் எதிர்பார்த்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மக்களுக்கு பற்றாக்குறை இல்லாமல் பொருள்களை பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. இதன் காரணமாக 2017 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதும் 2 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஊடக சந்திப்பின் போது தெரிவித்திருந்தார். (ற-5)

**ஸ்ரீ சீத்தா இராமன் திருமண சேவை**

நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும். டாக்டர், என்ஜினியர், எக்கௌண்டன், விரிவுரையாளர், அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தொடர்புக்கு :- 077 465 5359

**தேவை**

கச்சேரியை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு உணவு தயாரிப்பவர், உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 846 9173, 076 654 9164

**தேவை**

பாவிக்கக் கூடிய நல்ல நிலையிலுள்ள தட்டச்சு இயந்திரம் (Type writing Mechine) ஒன்று தேவை.

தொடர்புக்கு :- 077 835 7220




**எழுதுநர் தேவை**

கைதடி எரிபொருள் நிலையத்துக்கு கணினி அறிவுடைய கணக்கு எழுதுநர் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் 31.07.2016 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

021 223 1580

**நாகபூசணி திருமண சேவை**

மணமகன், மணமகள் அனைவருக்கும் பதிவுக் கட்டணங்கள் இலவசம். (17.07.2016 இலிருந்து 30.07.2016 வரை) நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும். 7 நாள்களும் திறந்து வைக்கப்படும்.

383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூருக்கு வடக்குப் பக்கம்)
021 222 9306, 077 138 7596
Email:- nakapoosanywedding@gmail.com

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பி.ப. 5.30 மணி வரை பின்வரும் இடங்களில் மின் தடைப்படும்.

யாழ்ப்பாணத்தில் பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோயிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ளறோட், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, பாரதிதாசன், கம்பர்மலை, பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வாசிகசாலை, வல்லை வீதி, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, பாரதி வீதி, நாவற்குழி, மறவன் புலோ, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சியில் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார். (ற-ரி)

**யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை**

**சாதனை வீரனைப் பாராட்டுகின்றோம்**




**செல்வன் ரவீந்திரபிரசாத் மகிந்தன்**

2016 ஆம் ஆண்டுக்குரிய மாகாண மட்ட தடகள விளையாட்டு நிகழ்வில் 15 வயது ஆண்கள் பிரிவுக்கான நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றி 5.94m நீளத்தைப் பாய்ந்து தங்கப்பதக்கம் வென்ற ர.மகிந்தனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை வரலாற்றில் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் முதன்முதலில் சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வெற்றிக்கு அயராது உழைத்த பாடசாலை உடற்கல்வி ஆசிரியை திருமதி. L.நிரஞ்சினி மற்றும் தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திரு. N.சிறிகாந்தா அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு,
பழைய மாணவர் சங்கம்
யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

அச்சுவேலி, ஜூலை 20

போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை அதிபர் சேவை தரம் III பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பொருத்தமான முறையில் பாடசாலைப் பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. பாடசாலைகளில் உரிய வேலைப் பொறுப்புக்கள் இன்றி எடுபிடி வேலைகள் மற்றும் விடுப்பில் உள்ள ஆசிரியர்களில் பதில் கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படு கின்றது.

இலங்கை அதிபர் சேவை தரம் III ஆளணிக்குப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம் வடக்கு மாகாணத்தில் 398 பேர் நியமனம் பெற்றனர்.

அதிபர்சேவைதரம் 3 பதவிக்குதெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மே மாதம் 9 ஆம் திகதியில் இருந்து செல்லுபடியாகும் வகையில் கல்வியமைச்சால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு 30 தினங்கள் சேவை முன்பயிற்சி வழங்கப்பட்டது. சேவை முன்பயிற்சியை நிறைவு செய்து ஜூன் 17 ஆம் திகதி தாங்கள் ஆசிரியராகக் கடமை புரிந்த பாடசாலைகளில் கடமையேற்றனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பாடசாலைப் பொறுப்புக்கள் எதுவும் கையளிக்கப்படாமல் பாடசாலைகளில் காத்திருக்கின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்தனர். (ற-11)

# தமிழ் - சிங்கள மோதல் கண்டனத்துக்கு உரியது

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களுக்கிடையே இடம் பெற்ற மோதலானது கண்டனத்துக்கு உரியது. இது தொடர்பான உண்மை நிலமையை ஆராயமல் இந்தச் சம்பவத்தை அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல்.

ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது: மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற இந்த மோதலானது திட்டமிட்ட உள்நோக்கத்தோடு நடைபெற்றதா? அல்லது தற்செயலாக நடைபெற்றதா? என்பதை முதலில் கண்டறிய வேண்டும். வடக்கிலும், தெற்கிலும் இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் லாபம் தேடும் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளைத் தடுக்கவேண்டும். அதனோடு இணைந்த வகையில் மாண வர்கள் மத்தியில் சுமுக நிலை யையும் புரிந்துணர்வுடன் கூடிய இணக்கப்பாட்டையும் ஏற் படுத்த வேண்டும்.

அறிவுத்துறை விரிவாக்கப் பரப்புக்குள் புகுந்து கொள்ளும் மாணவர்கள் நாம் பெரிது நீங்கள் சிறிது என்றும், அது அங்கே இது இங்கே என்றவாறும் குறுகிய அடையாள மனப்பாங்குடன் மோதலில் ஈடுபட்டு காயமடைவது என்பது அர்த்தமற்றதும் அநாகரிமானதும் ஆகும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்கள் ஒவ்வொரு மாணவர்களையும் பாதித்து வருகின்றன. கல்விக் கொள்கையின் தவறான முன்னெடுப்புக்களினால் பல்கலைக்கழக மாணவர்களும், உயர்கல்வி மாணவர்களும் பாதிப்படைந்து வருகிறார்கள். இந்தச் சூழலில் சிறிய சிறிய விடயங்களுக்கு எல்லாம் இன உணர்ச்சி வேகத்துடன் மோதிக் கொள்வதை விட்டு அனைத்து மாணவர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். - என்றுள்ளது. (ற-ரி)

15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
J.S.சத்தியநாதன்
(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்
பனை அபிவிருத்திச் சபை)

தோற்றம்
29.05.1944

மறைவு
20.07.2001

(13.18)(J3033)

அப்பா! எனும் வார்த்தைக்கு
அர்த்தம் கொடுத்தவரே!
ஆண்டவரும் நல்மேய்ப்பனும் நீரே எமக்கு
நீர் சென்ற பாதை பார்த்தே
ஆண்டுகள் பதினைந்து ஆகியும்
சிந்தை நொந்து தேடுகின்றோம்
மறுபடியும் உங்கள் அன்பிற்காய்
மீண்டொருமுறை வாரும் அப்பாவே!

"மடத்துக்கடவை"
அல்வாய் மேற்கு, அல்வாய்.
077 662 4408

மனைவி, மகன்,
மருமகள், பேரன்.

# வருமான வீழ்ச்சியைச் சரி செய்ய எரிபொருள் விலையில் அதிகரிப்பு

## ஆராய்கின்றது அரசு

கொழும்பு, ஜூலை 20

அரசின் வருமான வீழ்ச்சியைச் சரிக்கட்டும் வகையில் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும், அண்மையில் ஏற்பட்ட இடர்களுக்கான நிவாரண சேவைகளை மேற்கொள்வதற்கும் தேவையான நிதியைத் திரட்டிக் கொள்ளும் வகையில் அரசு வற்வரியை அதிகரித்தது.

உயர் நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக வற்வரி அதிகரிப்புக்கு தற்போது இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசின் வருமானம் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வற் வரியை நாடாளுமன்ற சட்டத்தின் மூலமாக அதிகரித்துக் கொள்வதிலும் அரசின் பங்காளிக் கட்சிகள் இடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வற்வரிக்குப் பதில் எரிபொருள்களின் விலையை அதிகரித்து அரசின் வருவாய் இழப்பை சரிக்கட்டுவது தொடர்பில் அரசின் முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. உள்நாட்டில் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பது பெரும் எதிர்ப்பலைகளை உருவாக்கிவிடக் கூடும் என்ற அச்சம் காரணமாக இது தொடர்பில் எதுவித இறுதி முடிவுகளும் எடுக்கப்படாத நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

31 ஆம் நாள் நினைவு தின அழைப்பு



தோற்றம்
28.11.1939



மறைவு
21.06.2016

அமரர் கணபதி மார்க்கண்டு
(உரிமையாளர் - சுடர்ஒளி சவுண்ஸ்)

கடந்த 21.06.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நாளை (21.07.2016) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அன்பகம்,
புதுத்தோட்டம்,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.
077 735 1318

குடும்பத்தினர்

(ஜே.3059)(18.13)

74 ஆவது பிறந்தநாள் நினைவும்
இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு
01
07
1942



உதிர்வு
11
08
2014

திருமதி தவமணி தம்பிராசா
திதி: ஆடித்திங்கள் அபரபட்ச பிரதமை

ஆண்டிரண்டு ஆனாலும் அன்னையே உம் அன்பின் அரவணைப்பு எம்மனதை என்றும் விட்டகலாது எமது ஈரவிழி நீரால் உம்பாதமலர் இறைஞ்சுகின்றோம். எத்தனை ஆண்டானாலும் உமது நிழல் எம்மனத்தே என்றும் அகலாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்
கணவர்: கா. தம்பிராசா (ஆசிரியர்)

| மகன்மார் | மருமகள்மார் | மகள்மார் | மருமக்கள் |
|---|---|---|---|
| சரஜெண்மன் | அருட்செல்வி | உமா | சிவகுமார் |
| சத்தியவண்ணன் | சுதர்சினி | யாழினி | மகிழ்ராசா |
| நவநீதன் | தவமங்களம் | | |

பேரப்பிள்ளைகள்:
துகப்பிரியன், தணிகன், இராகுலன், விசாகன், பகீத், சசீபன், கவீன், [illegible]ஜா, நிரஜா, கஜிதா, இன்பகி, பேரஜா.

மஞ்சத்தடி, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவமற்ற அரசமைப்பே இலங்கையின் குறைபாடு

## மைத்திரி அதை மாற்றியமைப்பார் என எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை

கிளிநொச்சி, ஜூலை 20

இலங்கையின் குறைபாடு சமத்துவமற்ற அரசமைப்பே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடாக அதனை மாற்றியமைக்கும் சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

"நாட்டில்வாழும்தமிழ்மக்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்படவேண்டும்" என்றும் ஜனாதிபதி முன்பாக அவர் வலியுறுத்தினார்.

ஜேர்மன் அரசின் உதவியில் கிளிநொச்சியில் எழுப்பப்பட்ட இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார் சம்பந்தர்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நிறுவனம் இங்கு அமையப் பெற்றது ஒரு வரப்பிரசாதம். இதற்காக ஜேர்மன் நாட்டுக்கு நன்றிகூறுகின்றோம். இதன்மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்கள் உச்சப் பயனைப் பெற வேண்டும்.

தொழில்நுட்பத்தில் ஜேர்மனி ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. உலக நாடுகளில் பொருளாதார ரீதியில் சக்தி வாய்ந்ததாக ஜேர்மனி திகழ்கின்றது. இவ்வாறானதொரு முன்னேற்றமே இலங்கைக்கு வேண்டும்.

2015 ஆம் ஆண்டு, புதிய அரசு பதவியேற்றதும் மக்கள் மத்தியில் நம்பிக்கை துளிர்த்தது. புதிய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நாட்டை சிறந்த பாதைக்கு இட்டுச் செல்கின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உறுதியான அரசை இயக்கி வருகின்றன. ஆனாலும் சமத்துவமற்ற அரசமைப்பே நாட்டின் குறைபாடு.

இப்போதிருக்கும் அரசமைப்பை ஜனாதிபதி மூலம் மாற்றியமைப்பதற்குச் சாதகமான சூழல் நிலவி வருகின்றது. தமிழர்களின் குரல் செவிமடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்க உரிமை உண்டு. தமிழ் மக்களுக்கான அனைத்து நலன்களும் - உரிமைகளும் வழங்கப்படவேண்டும்- என்றார். (த-5,ரி3,ரி4)

## வளையோசை ஆண்டிதழுக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளை பிரதேச கலாசார பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படும் வளைஓசை ஆண்டி தழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன என்று கண்டாவள்ள பிரதேச செயலர் த.முகுந்தன் தெரிவித்தார்.

கலாசார பேரவையால் 2011 ஆம் ஆண்டுமுதல் பிரதேசத்தின் கலை, கலாசாரம், வாழ்வியல், ஆன்மிகம், மரபுரிமைகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த நூல் வெளியிடப்படுகின்றது.

இந்த நூலுக்குரிய ஆக்கங்கள் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள் மற்ம் படைப்பாளிகளிடமிருந்து பெறப்படுகின்றன.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், ஆவணத் தரவுகள் மற்றும் பிரதேசத்துக்கு என தனித்துவம் மிக்க நாட்டுப்புறவியல் விடயங்கள் என்பன இந்த நூலில் வெளியிடப்படவுள்ளன.

இது சார்ந்த ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை எனும் முகவரிக்கு அனுப்புமாறு அறிவித்துள்ளார். (ற-ரி)

## வடிகால்களை துப்புரவாக்கும் பணி ஆரம்பம்

மழை காலத்தில் யாழ்.நகரில் வெள்ளம் தேங்காத வண்ணம் பிரதான வடிகால்கள், வாய்க்கால்களைச் சீர்செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

வடிகால்கள், வாய்கால்களை துப்புரவு செய்து சீர்செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வெள்ளம்சீராக கடலுக்கு வழிந்தோட வசதியாக வடிகால்கள், வாய்க்கால்களில் உள்ள கழிவுகள் மற்றும் சேறுகள் அகற் றப்படவுள்ளன. தூர்ந்த நிலை யில் உள்ள வடிகால்கள், வாய்க்கால்கள் தற்காலிகமாக நிர்மாணம் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ற-17)



அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேரின் ஒருபக்க வடத்தை சீருடையினர் ஆக்கிரமித்துக் கொண்டனர். சீருடையின் மேற்சட்டையைக் கழற்றிவிட்டு நீளக்காற்சட்டையுடன் தேர் இழுத்தனர் சீருடையினர். தேரிழுத்து நேர்த்தி செலுத்த வந்தவர்கள் பக்கமாக ஒதுங்கி நின்று பிள்ளையாரை வழிபட்டனர். (ற-11)

# கட்டட நிர்மாண அனுமதிகளைத் தர மறுக்கிறது வவு. நகர சபை

## குற்றஞ்சாட்டுகிறார் சிவமோகன் எம்.பி.; நிரூபியுங்கள் என்கிறார் நகர சபைச் செயலாளர்

வவுனியா, ஜூலை 20

வர்த்தக நோக்குடன் வவுனியாவில் அமைக்கப்பட உள்ள கட்டடங்களுக்கான அனுமதிகளைவவுனியாநகரசபைவழங்க மறுக்கின்றது. இது குறித்து வவுனியா நகரசபைப் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

சரியான ஆவணங்களுடன் கட்டடங்களை அமைக்கும் வர்த்தகர்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. சரியான ஆவணங்கள் இருந்தும் கட்டடம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று கூறும் யாராவது இருந்தால் நிரூபிக்கட்டும் - என்று தெரிவித்தார் நகர சபை செயலாளர் தர்மேந்திரா.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவித்ததாவது-

வவுனியா நகர சபையில் திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா நகரசபைச் செயலாளர் ஆகியோர் மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நேரடியாக அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா நகர சபையில் வர்த்தக நோக்குடனோ அல்லது சுய தேவை நோக் குடனோ கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிகள் கோரப்படும் போது அதற்கான ஆவணங்கள் முழுவதுமாகசமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் நிர்மாணத்துக்கான அனுமதிகளோ முறைப்படியான ஆலோசனைகளோ வவுனியா நகரசபையால் வழங்கப்படுவதில்லை.

வவுனியா நகரம் வர்த்தக ரீதியில் அபிவிருத்தி அடைவதென்பது ஆமை வேகத்தில் கூட நகரவில்லை. நகர சபையில் குறிப்பிட்ட சில அதிகாரிகளின் மெத்தனப்போக்கால் நாட்டின் அபிவிருத்தி வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாத பின்தங்கிய நிலை வவுனியாவுக்கு ஏற்பட்டுள்ளது . கட்டட அனுமதிக்காக விண்ணப்பித்து 2 வருடங்கள் தாண்டிய நிலையிலும் இன்னமும் நகர சபை எந்த ஒரு அனுமதியையும் வழங்காததால் கட்டட நிர்மாணத்துக்காக கடனாக வாங்கிய பணத்துக்கு வட்டி கட்ட முடியாமலும் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் பணத்தை இழக்கும் நிலையும் வர்த் தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலமை வவுனியா நகர சபையில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கும் அதிகாரிகள் சிலரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது . பொறுப்புக்கூற வேண்டிய வவுனியா நகர சபைத் திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா நகர சபைச் செயலாளர் ஆகிய இருவரின் மெத்தனப்போக்கு மக்களை வெகுவாகப் பாதிக்கின்றது.

நகரசபையின் இந்த அசமந்தப் போக்கு வேற்றிடத்து வர்த்தகர்கள் வவுனியாவில் தம் அரசியல் செல்வாக்கை வைத்து கட்டடங்கள் அமைத்து வர்த்தகம் செய்யும் நிலையை தோற்றுவிக்கலாம் என வவுனியா வர்த்தகர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். நானும் நகரசபையின் அசமந்தப் போக்கை நேரடியாக அனுபவித்தவன் என்ற ரீதியிலும் ஒட்டு மொத்த வவுனியா மக்கள் சார்பிலும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்தார் வவுனியா நகரசபை செயலாளர்.

வவுனியாவில் உள்ள வர்த்தகர்கள் தங்களுக்குத் தேவையான கட்டடங்களை அமைப்பதற்குத் தகுந்த சரியான ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது அது நகர சபை, சுற்றுச்சூழல் அதிகார சபை, போன்ற திணைக்களங்களால் ஆராயப்படுகின்றது. மக்களுக்கு பாதிப்புக்கள், இடையூறுகள் ஏற்படாத வகையில் அந்த ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் கட்டடம் அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆவணங்கள் திருப்தியளிக்காத சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவற்றை சரியான முறையில் பூர்த்திசெய்துவருபவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிகள் வழங்கவில்லை என யாரும் என்னிடம் வந்து கேட்கவில்லை. அனைத்து நகர சபைகளிலும் இருக்கும் சட்டம் தான் இது. சரியாக செய்தால் அதற்கான அனுமதிகளை வழங்குவதை நாங்கள் எப்போதும் தடுக்கப் போவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் வவுனியாவில் 4 மாடிகளைக் கொண்ட வைத்திசாலை ஒன்றை அமைப்தற்கான அனுமதியைக் கோரினார். கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வைத்தியசாலை அமைய இருக்கும் இடம் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பாக ஆராயப்பட்டது. வைத்திய சாலையில் இருந்து வெளியேறும் கழிவுகள் மண்ணை நிச்சயமாக மாசுபடுத்தும். இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. கழிவகற்றல்முறைக்கானமாதிரி வரைபடம் ஒன்று கேட்டிருந்தோம். அந்த வரைபடத்தை அவர் இன்றுவரை தரவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்தில் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அதில் எடுக்கப்பட்ட முடிவுகளை கடிதம் மூலம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அறித்துள்ளேன். இதுவரை எந்தப்பதிலும் இல்லை. வர்த்தகர்கள் கட்டம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது பொய்யான விடயம்.- என்று வவுனியா நகரசபை செயலாளர் தெரிவித்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன உறவுகளுக்கு நல்ல முடிவை பெற்றுத் தாருங்கள்

## மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி வலியுறுத்து

மன்னார், ஜூலை 20

காணாமற்போன உறவுகளுக்கு நல்ல முடிவை பெற்றுத் தாருங்கள். எதனையும் எமக்கு மறைக்க வேண்டாம். நாங்கள் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து விட்டோம். எங்களுடைய பிள்ளைகளை அல்லது உறவுகளை சுட்டுக் கொன்று விட்டார்கள் என்று கூறினால், அதனை தாங்குகின்ற சக்தி எங்களிடம் இருக்கின்றது. அவர்களின் படங்களை வீட்டில் கொழுவி அஞ்சலி செலுத்த முடியும். காணாமற்போன உறவுகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதைத் தேடிக் கண்டுபிடித்துத் தாருங்கள்.

இவ்வாறு மன்னார் மாவட்ட காணாமற் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:-

எங்களுடைய பிள்ளைகளையும், உறவுகளையும் தொலைத்து நிர்க்கதியாக நிற்கின்றோம். காணாமற்போனவர்களுக்கு என்று பிரதமரால் ஓர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. எமக்கு அலுவலகம் தேவையும் இல்லை. விருப்பமும் இல்லை. வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்தபோது, இந்த அலுவலகம் எங்களுக்கு தேவை இல்லை என்று குறிப்பிட்டோம். அதற்குப் பதிலளித்த அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாகவே அலுவலகம் அமைக்கப்பட்டது-என்றார். அவர் கூறியது சரியா? பிழையா? என்று எங்களுக்குத் தெரியாது.

காணாமற்போன எமது உறவுகள் சார்பாக நாங்கள் கூறுகின்றோம். அலுவலகம் எமக்குத் தேவையில்லை. இதுவரை காணாமற்போனவர்களுக்காக எதைச்செய்தீர்கள். எதனையும் செய்த மாதிரித் தெரியவில்லை. காணாமற்போன உறவுகளின் தாய்மார்களைவிட, மனைவிகளே அதிகம் உள்ளனர். அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் முகம் கொடுக்கின்றனர். எமது அரசியல் தலைமைத்துவங்களுக்கு இது தெரியுமோ தெரியவில்லை. காணாமற்போன உறவுகளின் குடும்பங்களை எந்தவொரு அரசியல்வாதிகளும் நேரில் சென்று பார்த்ததும் இல்லை.

காணாமற்போன உறவுகளை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என நாங்கள் வீடு வீடாகப் பரப்புரை செய்தோம். ஜனாதிபதியாக மைத்திரியை கொண்டு வர வேண்டும் என்றும் வீடு வீடாகத் திரிந்தோம். ஆனால் கடைசியில் ஒன்றுமே நடக்கவில்லை. மகிந்த அரசும் அதைத்தான் செய்தது. மைத்திரி அரசும் அதைத்தான் செய்கின்றது.

எதனையும் எமக்கு மறைக்க வேண்டாம். நாங்கள் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து விட்டோம். எங்களுடைய பிள்ளைகளை அல்லது உறவுகளைச் சுட்டுக்கொன்று விட்டார்கள் என்று கூறினால் அதனை தாங்குகின்ற சக்தி எங்களிடம் இருக்கின்றது. அந்த உறவுகளின் படங்களை வீட்டில் கொழுவி அஞ்சலி செலுத்தமுடியும். எங்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை. காணாமற்போன உறவுகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதைத் தேடி கண்டுபிடித்துத் தாருங்கள் - என்றார்.

(ந-5-56)

# நீரியல் வள உதவிப் பணிப்பாளர் பரீட்சையில் 3 தமிழர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களங்களுக்கு உதவிப் பணிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் 3 தமிழர்கள் உட்பட 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கையில் 15 மாவட்டங்களிலுமுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களில் வடக்கு-கிழக்கிலுள்ள 7 மாவட்டங்கள் உட்பட 8 மாவட்டங்களில் நீண்ட காலமாக உதவிப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. அவர்களுக்கு பதிலாக, சேவை மூப்பு அடிப்படையில் கடற்றொழில் பரிசோதகர்கள் பதில் கடமையாற்றி வருகிறார்கள்.

இந்த நிலையில் திணைக் களங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் உதவிப் பணிப்பாளர் பதவியை நிரப்ப அரசு விண்ணப்பம் கோரியதை அடுத்து, உள்வாரியாகத் திணைக்களங்களிலிருந்து 22 பேரும், வெளிவாரியாக 25 பேருமாக 47 பேர் விண்ணப்பித்தனர்.

கடந்த வாரம் இவர்களுக்கான எழுத்துப் பரீட்சைத் திணைக் களத்திலும், நேர்முகப் பரீட்சை கடற்றொழில் திணைக்களத்திலும் நடைபெற்றது. இந்தப் பரீட்சையில் 3 தமிழர்கள் உட்பட 13 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

முல்லை மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் பதில் கடமையாற்றிய ஜெயராஜசிங்கம் சுதாகரன், யாழ். மாவட்ட திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகராகக் கடமையாற்றிய விஸ்வலிங்கம் கனிஷ்டன், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நடராசா நிரஞ்சன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்ட தமிழர்களாவர்.

இவர்களுக்கான பயிற்சி இந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது.

(ந-115)

# இருவேறு விபத்துக்களில் இருவர் நேற்றுக் காயம்

மன்னார், ஜூலை 20

மன்னாரில் நேற்று இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் காயமடைந்த இருவர், மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த கார் கட்டுப்பாட்டை இழந்து, தொலைத்தொடர்பு இணைப்பு கம்பத்துடன் மோதியது. காரை செலுத்தி வந்த பாலசுப்பிரமணியம் (வயது-37) என்பவர் காயமடைந்தார். மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, வங்காலைச்சந்திக்கு அருகில் மன்னார் ச.தொ.ச விற்பனை நிலையத்துக்கு பொருள்களை ஏற்றி வந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து- வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது. வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார்.

(ந-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மோட்டார் சைக்கிளைக் களவாட முயன்றவரை மடக்கினர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளைத் திருட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் நடந்தது.

கே.கே.எஸ். வீதியில் வீடொன்றின் முன்பாக வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைக் குறித்த நபர் திருட முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளின் சாவி துவாரத்துக்குள் கம்பியை விட்டுத் திறக்க முற்பட்டார் என்றும், வீட்டிலிருந்தவர்கள் கண்டு சத்தமிட்டதும் ஓடித் தப்ப முயன்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டிலிருந்தோரும், அயலவர்களும் குறித்த நபரைத் துரத்திப் பிடித்தனர். இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்தனர். குறித்த நபரைப் பொலிஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர். (ற-21)

## கருங்குளவி கொட்டியதில் 4 பேர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 20
சாவு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை கருங்குளவி கொட்டியது. அதில் 4 பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பில் நடந்தது.

வீதியால் சாவு ஊர்வலம் சென்ற போது மரம் ஒன்றில் இருந்து கலைந்த கருங்குளவிகள் ஊர்வலத்தில் சென்றவர்களைக் கலைத்துக் கொட்டின.

பாதிக்கப்பட்ட இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும், இருவர் யாழ் போதனா வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். (ற-21,288)

# கேப்பாப்பிலவு முதியவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

## இரா. சம்பந்தனின் வேண்டுகோளின்படி

முல்லைத்தீவு, ஜூலை 20
கேப்பாப்பிலவு முதியவர்களால் நேற்று மேற்கொள்ளப்பட இருந்த உணவு தவிர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது என்று கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க போராட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகனுக்கும் கேப்பாபிலவு மக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடல் நடந்தது. அதன்முடிவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கேப்பாப்பிலவு மக்கள் தங்களுடைய பூர்வீக இடத்தில் தங்களை மீள் குடியேற்ற வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர். கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 26ஆம் திகதி முதலமைச்சர் வழங்கிய வாக்குறுதியை அடுத்து அந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. கடந்த 11ம் திகதி ஒன்று கூடிய மக்கள் முதலமைச்ருடையவாக்குப்பொய்த்து விட்டது என்றும், காணிகளை விடுவிக்கும் வரையில் 6 முதியவர்கள் நேற்று உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட வுள்ளனர் என்றும் அறிவித்தனர்.

"கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி ஆறுமுகம் வேலாயுதம் என்பவர் மீள்குடியமர்வை வற்புறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார். அப்போது மூன்று மாத காலத்துக்குள் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. முதலமைச்சரால் வழங்கப்பட்ட மூன்று மாத கல அவகாசத்துக்குள் முதலமைச்சரால் கேப்பாப்பிலவு மக்கள், இராணுவம், கடற்படை ஆகியோரிடம் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர்கள் மூன்று பேர் நியமிக்கப்பட்டனர்.

மாவட்ட செயலாளர்களுடைய அறிக்கைகள் முதலமைச்சருக்கு வழங்கப்பட்டு அவை ஜனாதிபதியிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. மூன்று மாத காலம் முடிவடைந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி ஒன்று கூடிய மக்கள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப் போகின்றனர் என்று அறிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம் பெற்ற தமிழ்தேசிய கூட்டமைப்புத் தலைவருடான சந்திப்பில் நானும், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவும், வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர் கட்சி தலைவருமான இரா. சம்பந்தனிடம் இது குறித்துக் கூறினோம். அவரை நேரடியாக கேப்பாப்பிலவுக்கு வருமாறும் கேட்டிருந்தோம். அவர் தற்போது அங்கு வருவதற்கு முடியாது என்று தெரிவித்து உணவுதவிர்ப்பில்ஈடுபடவிருந்த முதியவர்களுடன் தொலைபேசியில் உரையாடினார். ஒரு மாதத்துக்குள் தான் கேப்பாப்பிலவுக்கு வருகின்றேன் என்றும் தெரிவித்திருந்தார். உரையாடலின் பின்னர் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது" - என்று வடக்கு மாகாணசபைஉறுப்பினர்து. ரவிகரன் தெரிவித்தார். (ற-21,ரி7)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அரசியல்வாதிகள் கைப்பாவையாக மாறக்கூடாது பல்கலை மாணவர்கள்

## இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் அறிவுரை

கொழும்பு, ஜூலை 19

குறுகிய இலக்குள்ள சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகளின் கைப்பாவைகளாகி விடாது, புத்தி சாதுரியமாகச் செயற்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்களை வேண்டுகிறோம். அரசு முன்னெடுக்கின்ற நல்லிணக்க செயற்பாடுகளின் வெற்றி குறித்து சிந்தித்துப் பார்ப்பதற்கு இது சிறந்ததொரு உதாரணமாகும். ஊடகவியலாளர்களை ரயிலில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்வதால் மாத்திரம், நல்லிணக்கம் உருவாகாது என்பதை அரசு இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்தது.

அந்த சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

புதிய மாணவர்களை வரவேற்பதற்கான நடன நிகழ்வு சம்பந்தமாக, யாழ். பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர்கள் இரு குழுவுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம், மோதலாக முற்றியதையிட்டு நாம் வருந்துகிறோம். படித்தவர்கள் என்று வழங்கப்படுகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து மோதிக்கொள்வதை "நாம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை, இது நடக்கக் கூடாத ஒன்றாகும்."

சிங்கள மற்றும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் முகம் கொடுத்து வந்த பெருமளவு பிரச்சினைகளுக்கே இன்னும் தீர்வுகள் இல்லை. இந்த நிலையில், நிகழ்வொன்றின் நடன நிகழ்வொன்று காரணமாக உருவாகிய சண்டையை குறித்துக்காட்டி, இனவாதத்தை விதைக்கும் நிகழ்ச்சிநிரலில் சிலர் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஒரு வாரத்துக்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் இரு மாணவ குழுக்களுக்கு இடையில் மோதலொன்று ஏற்பட்டது. அதற்கு வழங்கப்பட்ட பரப்புரையும், யாழ். பல்கலைக்கழக சம்பவத்துக்கு வழங்கப்படும் பரப்புரையும் முற்றாக வேறுபட்டதாக உள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலின் பொறுப்பை சில தமிழ் ஊடகங்கள் சிங்கள மாணவர்களின் மேல் சுமத்துகின்றன. மறுபுறம் சிங்கள ஊடகங்கள் சில, இந்த மோதலின் பொறுப்பை தமிழ் மாணவர்களின் மேல் சுமத்துகின்றன.

சம்பவத்தை அறிக்கையிடுவதற்கு அப்பால்சென்று தத்தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சில சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்கள் முயற்சித்திருக்கின்றன. இந்தச் சம்பவம் குறித்து சில அரச ஊடகங்கள் மௌனம் சாதித்துள்ளன. சமூக ஊடக இணையங்களில் யாழ்ப் பாண சம்பவம்; எரிந்து கொண்டிருக்கும்போது, உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு அரச ஊடகங்களை அவதானித்துக் கொண்டிருந்த நபர்களுக்கு உண்மை நிலையை தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அரச ஊடகங்கள் இல்லாமலாக்கியிருக்கின்றன.

அரசை விமர்சிப்பது குறித்து செய்தி அறிவித்தல்கள் வெளியிடும் தகவல் திணைக்களம், இந்தச் சம்பவம் குறித்து எந்த வித தெளிவுபடுத்தல்களையும் வழங்கவில்லை. அரச தரப்பிலிருந்து உண்மை நிலை தெளிவுபடுத்தப்படவில்லை.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் ஏற்பட்ட மோதல் எந்த தரப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அதற்கான தீர்வுகளைத் தேடுவதற்கான வழிமுறைகள் மற்றும் அதற்கு பதில் வழங்குவதற்கான முறைமை இனவாதம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

போரில் மறைந்து கொண்டு, அரச பலத்தை பயன்படுத்தி, சிங்கள ஊடகவியலாளர்களைப் போன்றே, தமிழ் ஊடகவியலாளர்களையும், சமூக செயற்பாட்டாளர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் கொலைசெய்த காலம் பலருக்கும் மறந்து போயுள்ளது என்று தெரிகின்றது. யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை தீ வைத்துக் கொளுத்தப்படும்போது மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த தமிழ் தரப்பும், கொழும்பில் 'லங்கா ஈ நியூஸ்', 'சிரச' போன்ற ஊடக நிறுவனங்கள் தீ வைக்கப்படும்போது மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த சிங்களத் தரப்பும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சம்பவத்தை மையப்படுத்தி இனவாதத்தை விதைப்பதை தோற்கடிக்கச் செய்வதற்கு ஒன்றிணையுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களையும், ஏனைய அனைத்து பல்கலைக்கழக மாணவர்களையும் கோருகிறோம் - என்றுள்ளது. (ற-5)

### வற் வரிக்கான பரிந்துரைகள் ஜனாதிபதியிடம்

வற் வரி சட்ட வரைவில் உள்ளடக்கப்பட வேண்டிய பரிந்துரைகளை கட்சித் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுதந்திரக் கட்சி கையளித்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வற்வரியை நடைமுறைப்படுத்தும்போது மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்க முடியும் என்பதை ஆராய்வதற்கு, அமைச்சர்கள் குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்திருந்தது. அமைச்சர்களான சுசில் பிரேம் ஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா, மகிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் அதில் இடம் பெற்றனர்.

மகிந்த அமரவீர தெரிவித்ததாவது:

வற் வரி அதிகரிப்பு தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் குழு முன்மொழிந்துள்ள பரிந்துரைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதி தீர்மானத்தை எடுப்பார். அதுவரை வற் வரி தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெறாது. உண்மையான வற் வரி முன்மொழிவுகளில் கடுமையான மாற்றங்கள் கொண்டு வரப்படும்- என்றார். (ற-5)

### இந்திய – இலங்கை ஆயுதப் படைகளின் மூலோபாய கலந்துரையாடல் முடிந்தது

இந்திய - இலங்கை ஆயுதப்படைகளுக்கு இடையிலான இரண்டாவது மூலோபாயக் கலந்துரையாடல் முடிவுக்கு வந்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

நிபுணத்துவம் மற்றும் பரஸ்பரம் நன்மையளிக்கும் உறவுகளை இரண்டு நாட்டு ஆயுதப் படைகளுக்கு இடையே ஊக்குவிக்கவும், இந்திய - இலங்கை ஆயுதப் படைகளுக்கு இடையிலான மூலோபாயக் கலந்துரையாடல் 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாவது கலந்துரையாடல் இலங்கையின் கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல், ஆயுதப் படைகளுக்கு இடையில், நேரடியாகவும், பரஸ்பரம் நலன்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் பற்றிய தரவுகளை பரிமாறிக் கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தியப் பெருங்கடலில், இலங்கையின் மூலோபாயக் கரிசனைகள், ஆசிய பசுபிக் பிராந்தியம் புவிசார் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாறி வரும்சூழல் என்பன இந்த ஆண்டு கலந்துரையாடலில் முக்கிய அம்சங் களாக இருந்தன.

இந்தியக் குழுவுக்கு எயார் மார்ஷல் ஏ.எஸ்.பொன்ஸ்லே தலைமை தாங்கினார். எஸ்.எல்.ஜோர், கப்டன் பிரகாஸ் கோபாலன், விங் கொமாண்டர் ஏ.ஏ.கெல்கர் ஆகியோரும் பேச்சில் பங்கேற்றனர். இலங்கைக் குழுவுக்கு கூட்டுப் படைகளின் தளபதி எயர்சீவ் மார்ல் கோலித குணதிலக தலைமை தாங்கினார். (ற-5)

# யாழ். பல்கலை அடிதடியில் வெளித்தரப்பும் தொடர்பு

## நடவடிக்கை எடுக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலில் வெளி தரப்பிலிருந்து சிலர் சம்பந்தப்பட்டனர். சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த சிங்கள மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களைச் சந்திப்பதற்காக உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வைத்திய சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்றார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலுடன் வெளிதரப்பினர் சிலரும் தொடர்புபட்டனர். பல வருட காலமாக எந்தவித பிரச்சினைகளும் இன்றி, ஒரே கலாசார விதிமுறையில் புதுமுக மாணவர்கள் வரவேற்றிருந்தபோதிலும், இந்த முறை ஏற்பட்ட சிறிய பிரச்சினையை சிலர் திரிபுபடுத்தி பெரிதாக்க முற்படுகின்றனர்.

சம்பவத்தின்போது பதிவான சீ.சீ.ரி.வி காணொலிகளைப் பயன்படுத்தி சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர். வெகு விரைவில் அவர் கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப் படுவர் - என்றார். (ற-5)



மூன்று நாள் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி மாளிகையான இஸ்தானாவி செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. சிங்கப்பூர் பிரதமர் லீ சின் லூனுடனும், சிங்கப்பூர் ஜனாதிபதியுடனும் அவர் தனித்தனியாக பேச்சு நடத்தினார். இரு நாடுகளுக்கும் இடையில் ஐந்து உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் கைச்சாத்திடுவதற்கான புரிந்துணர்வு உடன்பாடு, மேல் மாகாண பெரிய அபிவிருத்திக்கான உடன்பாடு, கலாசார ஒத்துழைப்பு உடன்பாடு, அரச பணியாளர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கும் பரிமாற்றுவதற்குமான உடன்பாடு, தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்விக்கான உடன்பாடு ஆகியனவே கையெழுத்திடப்பட்டன. (ற-5)

# இயற்கை எரிவாயு மின் நிலையத்தை கெரவலப்பிட்டியில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, ஜூன் 20

மேல் மாகாணத்தில் உள்ள கெரவலப்பிட்டியில் 500 மெகாவோட் திறன் கொண்ட திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை இந்தியா அமைக்கக் கூடும்.

இவ்வாறு அரச அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்துக்கு மாற்றாக திரவ இயற்கை எரிவாயு மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கேட்டிருந்தார். அதுபற்றி கலந்துரையாடுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அதிகாரிகளைப் பணித்திருந்தார்.

இது தொடர்பாக இந்திய - இலங்கை கூட்டு பணிக்குழு பல்வேறு தெரிவுகள் தொடர்பாக ஆராய்ந்தது. கெரவலப்பிட்டியவில், 500 மெகாவாட் திறன் கொண்ட திரவ இயற்கை எரிவாயு மின் நிலையம் ஒன்றை அமைக்கும் யோசனையை இலங்கைத் தரப்பு முன்வைத்தது.

கொழும்பை அடுத்த கெரவலப்பிட்டியவில், மகிந்த ராஜபக்ச அரசு 300 மெகாவாட் திறன். கொண்ட அனல்மின் நிலையம் ஒன்றை அமைத்தது.

திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை அமைப்பதற்கு சம்பூரைவிட கெரவலப்பிட்டிய மிகச் சிறந்த இடமாக கருதப் படுகிறது. மேற்கு கரையோரப் பகுதியில் அமைந்திருப்பதால், திரவ இயற்கை எரிவாயு உற்பத்தியின் முக்கிய கேந்திரமான கட்டாருக்கு இது மிக அண்மையில் உள்ளது.

பன்னாட்டுச் சந்தையில் திரவ இயற்கைஎரிவாயு மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றது. அனல் மின் திட்டங்களைவிட, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டங்களுக்கு செலவு குறைவு என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

கெரவலப்பிட்டிய திரவ இயற்கை எரிவாயு மின் நிலையம், புதிய இந்திய - இலங்கை அமைப்பால் இயக்கப்படுமா அல்லது ஏற்கனவே சம்பூரில் மின் நிலையத்தை அமைப்பதற்காக கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட்ட திருகோணமலை மின் நிறுவனம் மூலம் இயக்கப்படுமா என்பது இன்னமும் தெளிவாக வில்லை. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானங்களை இன்னும் செயற்படுத்தவில்லை அரசு

## மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சாடல்

கொழும்பு, ஜூலை 20

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

இவ்வாறு கொழும்பு சட்டக் கல்லூரியின் மூத்த விரிவுரையாளரும், மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளருமான பிரதீபா மஹான மாஹேவா தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஓர் கூட்டுத் தீர்மானம். அழுத்தங்கள் காரணமாகக் கலப்பு நீதிமன்றத்துக்கு அரசு ஒப்புக்கொண்டது. காணாமற் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அமைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் சரியான முறையில் இலங்கை அரசு பேரம் பேசிக் கொள்ளவில்லை.

> அயலுறவுத்துறை அமைச்சர் பன்னாட்டுக்கு ஒன்றையும் உள்நாட்டுக்கு வேறொன்றையும் தெரிவித்து வருகின்றார். இது நெருக்கடிக்குள் சிக்க வைக்கக்கூடிய விடயமாகும்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் அரசு பன்னாடுகளையும் உள்நாட்டுச் சக்திகளையும் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் காணப்படுகின்றது.

அயலுறவுத்துறை அமைச்சர் பன்னாட்டுக்கு ஒன்றையும் உள்நாட்டுக்கு வேறொன்றையும் தெரிவித்து வருகின்றார். இது நெருக்கடிக்குள் சிக்க வைக்கக்கூடிய விடயமாகும்.

இலங்கையின் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டிருந்தால் அந்த அறிக்கை பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். தவிர மூடி மறைத்து வைத்துக் கொள்ளக் கூடாது. இதன் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் சபையும் தவறிழைத்துள்ளது.

அமெரிக்காவுடன் இணைந்து கொள்ளாது சீனாவுடன் தொடர்ந்தும் நெருக்கமான உறவுகளைப்பேணியிருந்தால் நாடு இன்னமும் அபிவிருத்தி அடைந்திருக்கும். அரசியல் நோக்கங்களைக் கொண்டு மட்டும் செயற்படும் எதிர்க்கட்சிகளினால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடையாது. மகிந்த தரப்பு அரசியல் நோக்கங்களிலேயே போராட்டங்களை நடத்தி வருகின்றது - என்றார். (த-5)

## சிறைக்கைதியின் உடலுக்குள் போதைப்பொருள்

சிறைக்கைதி ஒருவரின் உடலுக்குள் இருந்து 100 பக்கெட் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் என்.உபுல்தெனிய தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. சிறைச்சாலைத் திணைக்கள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட போதைப் பொருளில் 29 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் 24 வயதான தெமட்டகொட பகுதியைச் சேர்ந்தவர் என்று ஆணையாளர் தெரிவித்தார். (ற-5)

## சகோதரர்களை கைவிட்டால் இணைவேன்

*- மேர்வின்*

கொழும்பு, ஜூலை 20

தவறுசெய்த சகோதரர்களை கைவிடுவதாயின் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து பணியாற்ற தயாராகவுள்ளேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த ஊடக சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

ராஜபக்ச குடும்பத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இல்லை. களனியில் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது பசில் ராஜபக்ச. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச தொடர்பில் நான் இன்னும் அமைதிக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றேன்.- என்று அவர் தெரிவித்தார். (ற-5)



## யாழ். பல்கலை விடயத்தில் அரசு தலையிட வேண்டும்

*- டியூ*

கொழும்பு, ஜூலை 20

யாழ். பல்கலைக்கழக மோதல் சம்பவம் தொடர்பில் அரசு தாமதிக்காமல் தலையிட வேண்டும். அரசு அமைதியான போக்கைக் கடைபிடித்தால், போருக்கு வழிவகுக்கும் கிருமிகள் மீண்டும் உருவாக இடம் இருக்கின்றது.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும், கம்யுனிஸ்ட் கட்சியின் செயலாளருமான டியூ.குணசேகர தெரிவித்தார்.

இது மோசமான நிகழ்வு என்பது இன்னும் அடையாளம் காணப்படாதுள்ளது. மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்துரையாட வேண்டும். இது ஒரு தேசியப் பிரச்சினை. இது பயங்கரமானது - என்றார். (ற-5)

## வேதன உயர்வு குறித்து ஆராய விசேட குழு

கொழும்பு, ஜூலை 20

தனியார் துறையினருக்கு வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா வேதன உயர்வு சரியாக வழங்கப்படுகின்றதா என்பதனை ஆராய்வதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் சட்ட ஆலோசகர் பி.எஸ். பத்திரன தலைமையில் ஆறு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழில் மற்றும் தொழிற் சங்க அமைச்சால் இந்தக் குழு நிறுவப்பட்டது.

2 ஆயிரத்து 500 ரூபா வேதன உயர்வு கிடைக்கப் பெறாத தனியார் துறையினர் இந்தக் குழுவிடம் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும். இதுவரையில் குழுவுக்கு 200க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# சீபா, எட்கா உடன்பாடுகளால் தெற்கு ஆசியாவுக்கு நன்மை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு




கொழும்பு, ஜூலை 20

சிங்கப்பூர் - இந்தியா இடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடும் (சீபா), இந்தியா - இலங்கை இடையில் கையெழுத்திடப்படவுள்ள பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடும் (எட்கா), தெற்காசியப் பிராந்தியத்துக்கு நன்மையளிக்கும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடந்த தென்னாசிய புலம்பெயர்ந்தோர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது-

இந்த உடன்பாடுகள் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுக்கும் சாதகமான நிலையை ஏற்படுத்தும். இலங்கை அரசியல் உறுதிப்பாட்டை அடைந்துள்ளது. உறுதியான பொருளாதாரத்துக்கு அடித்தளமாக அமையும். பன்னாட்டு வர்த்தக உடன்பாடுகளுக்குத் தடைகளாக இருக்கும், மோசமான உட்கட்டமைப்பு வசதிகள், வர்த்தக சூழல், கொள்கைகள் போன்றவற்றை விரைவில் இலங்கை அகற்றும். கடல், வான், நெடுஞ்சாலைப் பயண வசதிகள், மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும். இது ஆசியப் பிராந்தியத்துக்கும் இலங்கைக்கும் உதவியாக அமையும்.- என்றார். (ற-5)

# சிங்கள மாணவரின் புத்தகத்தை கொளுத்தினராம் தமிழ் மாணவர்

## பல்கலைக்கழக மோதல் சம்பவத்தை விவரிக்கின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூலை 20

பல்கலைக்கழக அடிதடியைத் தொடர்ந்து சிங்கள மாணவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் அவர்களது கொப்பிகள் - புத்தகங்கள் என்பனவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் ஊடகங்களில் வெளியாகவில்லை. சிங்கள மாணவர்கள் இரகசிய பொலிஸாரின் உதவியுடன் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தமிழ் ஊடகங்கள் வெளி உலகத்துக்குக் கூறுகின்றன.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது-

எந்த நேரமும் ஐக்கியம் - நல்லிணக்கம் என்று இந்த அரசு கூறிக் கொள்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட ஐக்கியம் - நல்லிணக்கத்தைக் கூட இப்போது காணமுடியவில்லை.

போர்க் காலத்திலும், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் வரையிலும் யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாறான சம்புவங்கள் இடம் பெறவில்லை.

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தமிழ்ச் சமூகத்தினருக்கு உயிர் கொடுப்பதை விடுத்து தமிழ் இனவாதத்திற்கே உயிர் கொடுத்துள்ளது. எமது அரசு தமிழ் மக்களுக்கே உயிர் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு புகையிரதப் பாதை, பெருந்தெருக்கள் புனர்நிர்மாணம் ஊடாகவும் தமிழ் சமூகத்தை எமது அரசு உயிர்ப்பித்திருக்கிறது. இந்த நோக்கத்துக்காகவே யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.

போர் காரணமாக கிளிநொச்சியிலிருந்து கொழும்பு வெள்ளவத்தைக்குக் கல்விகற்பதற்காக வந்த தமிழ் மாணவர்கள் போர் நிறைவுற்ற பின்னர் அந்தக் கல்வியைத் தொடர்வதற்காகவே அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

அவர்கள் அவர்களது சமூகத்திற்கே புத்துயிர் கொடுத்தனர். ஜனவரி 8 ஆம் திகதியிலிருந்து தமிழ் சமூகத்திற்குப் பதிலாக இனவாதத்திற்கே புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் கை முழம் போடாது; சொல்லும் செயலும் உறுதி தானா...?

எங்கள் நாட்டில் வாழும் ஏனைய இனத்தவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டால் மட்டுமே, சிங்கள- பௌத்த மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

வடக்கு மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. அவை உண்மையானவை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனை மனதில் இருத்திச் செயற்படுவது அவசியம். அதுவே தீர்வுக்கான முதலாவது படியாக அமையும்.

மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தி உள்ளார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கிளிநொச்சி அறிவியல்நகரில், ஜேர்மன் அரசால் நிர்மாணிக்கப்பட்ட, இலங்கை - ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்த நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இந்த நாட்டில் ஏனைய இனமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் ஊடாக மட்டுமே, சிங்கள - பௌத்த மக்கள் இலங்கையில் நிம்மதியாக வாழ்வதற்கு வழி பிறக்கும்.

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் உட்பட, அனைத்துக் கல்வி நிறுவனங்களும் தேசிய நல்லிணக்கத்தை உண்டாக்கும் வகையில் இயங்க வேண்டும்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளை சரியாகப் புரிந்து கொள்வது மட்டுமன்றி அவற்றை முழுமையாகவும் தெரிந்து கொள்வது அவசியம்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், நாட்டு மக்களிடத்தில் நல்லிணக்கத்தை உருவாக்குவேன் என்று உறுதி அளித்திருந்தேன். அதற்கு விரைந்து செயலுருவை வழங்க ஏற்பாடு செய்வேன்.

இரண்டாகப் பிளவுற்று இருக்கும் மக்களை ஒன்றுபடுத்துவதற்கே புதிய அரசமைப்பை உருவாக்க முனைந்துள்ளோம்.

1972 ஆம் ஆண்டில், புதிய அரசமைப்புச் சட்டம் எழுத முனைந்த வேளை, ஒரு மொழி இரு நாடு, இரு மொழிகள் ஒரு நாடு என்று பலர் யதார்த்தமாகச் சிந்தித்தனர்

ஒரு காலப்பகுதியில்,விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டியதன் பின்னரே அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று தெற்கின் அரசியல்வாதிகள் குரல் எழுப்பியதும் உண்டு.

ஆனால் போர் முடிவுக்கு வந்து வருடங்கள் ஏழு, கடந்தேகிச் சென்ற பின்னரும், தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் விவகாரங்களில் வேண்டுமென்றே சூக்காட்டுகிறார்கள். நத்தை வேகத்தில் ஊர்ந்து செல்கிறார்கள்.

வடக்கில் நின்றுகொண்டு, தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்று ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். அதனைத் தெற்கில் ஊர் ஊராகத் தெரிவிக்க மனம் கொள்வது எப்போது என்று வினவ வேண்டிய கடமை எமக்கு உண்டு அல்லவா?

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலைகிறார் ஞானத் தங்கமே என்ற சித்தர் ஒருவரின் பாடல்வரிகள் காதைக் குடைகின்றன..வெறும் கை, முழம் போடாது என்ற தமிழ்மக்களின் பேச்சு வழக்குமொழியை இவ்வேளை சுட்டிக் காட்டுவது பொருத்தமோ பொருத்தம்!



எம்.ஐ.முபாறக்


அரபு வசந்தம் என்ற பெயரில் முஸ்லிம் நாடுகளில் அரசுகள் கவிழ்க்கப்பட்டு அங்கு அமெரிக்காவின் பொம்மை அரசுகள் நிறுவப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

துனிசியா, லிபியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளில் அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால்,சிரியாவில் அரபு வசந்தம் தொடங்கப்பட்டுள்ளபோதிலும்,அது ஐந்து வருடங்களாக முடிவின்றித் தொடர்கின்றது.

அந்த வரிசையில் இப்போது துருக்கியும் அரபு வசந்தத்துக்குள் சிக்கியுள்ளது. இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கும் துருக்கி, இப்போது இராணுவ சதிப் புரட்சி ஒன்றில் சிக்கி, உடனே அதிலிருந்து மீண்டும் விட்டது. இராணுவப் புரட்சி ஒன்றும் துருக்கிக் குப் புதிது அல்ல. இதற்கு முன்னர் 1960, 1971, 1980, 1997 ஆகிய ஆண்டுகளில் பல இராணுவ சதிப் புரட்சிகளை துருக்கி சந்தித்துள்ளது.

துருக்கி அரசுக்கு ஆதரவான மக்கள், இப்போதைய இராணுவப் புரட் சிக்கு எதிராகக் கள மிறங்கிய தாலும், துருக்கிய இராணுவத்தில் மிகவும் சொற்ப எண்ணிக்கையிலானோரே இந்தப் புரட்சியில் இறங்கியதாலும், இந்தப் புரட்சி முறியடிக்கப்பட்டது. இருந்தாலும், அதை முறியடிப்பதற்கு 200 இற்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொடுக்கப்பட்டன.

இந்தச் சதிக்கான காரணம் என்ன? இதன் சூத்திரதாரி யார்? போன்ற கேள்விகளுக்கு இதுவரை சரியான பதில் கிட்டவில்லை. ஆயினும், சிரியப் போர் காரணமாக துருக்கி, குறுகிய காலத்துக்குள் பல எதிரிகளை உள்வாங்கியுள்ளது. அதேபோல், துருக்கிக்கு உள்ளேயும் நீண்டகால எதிரிகள் இருக்கின்றனர்.



பெத்துல்லா குலேன்

**சிரியப் போர் துருக்கிக்கு அதிக எதிரிகளை உருவாக்கிக் கொடுத்துள்ளது. சிரியாவுக்கு எதிரான அமெரிக்கக் கூட்டில் துருக்கி இணைந்துள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.**

### குர்திஷ் போராளிகள்

துருக்கியிலுள்ள குர்திஷ் மக்கள், சுயாட்சி கோரி இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கெரில்லாப் பாணியில் துருக்கிய அரசுடன் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அவர்கள் அரசின் தொடர்ச்சியான அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த குர்திஷ் போராளிகளுக்கும் துருக்கிய அரசுக்குமிடையில் 2013இல்போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும், அது நீடிக்கவில்லை. இதனால், இருதரப்புகளுக்குமிடையில் மட் டுப் படுத்தப்பட்ட அளவில் போர் தொடர்ந்தும் இடம்பெறவே செய்கின்றது.



விளாடிமீர் புடின்


### சிரிய ஜனாதிபதி பஸார் அல்-அஸாத்

சிரியப் போர், துருக்கிக்கு அதிக எதிரிகளை உருவாக்கிக் கொடுத் தது. சிரியாவுக்கு எதிரான அமெரிக்கக் கூட்டில் துருக்கி இணைந்துள்ள மையே இதற்கு முக்கிய காரண மாகும்.

சிரிய அரசைக் கவிழ்க்கப் போராடி வரும் ஆயுதக் குழுக்களுக்கு துருக்கி எல்லா வகையான உதவிகளையும் செய்து வருகின்றது. சிரிய ஜனாதிபதி பர் அல்-அசாத் துருக்கியின் நிரந்தர எதிரியாக மாறிவிட்டார்.

### ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின்

சிரியப் போர் துருக்கிக்கு உருவாக்கிக் கொடுத்த மிக முக்கியமான எதிரிதான் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின். சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யா செயற்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி இராணுவப் புரட்சியின் சூத்திரதாரி மிக விரைவில் இனம் காணப்படலாம்

பட்டதை விரும்பாத துருக்கிய ஜனாதிபதி ஆதுர்கான் ரஷ்யாவைப் பழிவாங்கச் சந்தர்ப் பத்தை எதிர்பார்த்திருந்தார். சிரியப் போரில் ஈடுபட்டவேளை ரஷ்யா வின் போர் விமானம் துருக்கியின் வான் எல்லைக்குள் நுழைந்தது என்று குற்றஞ் சாட்டி, துருக்கி அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியது. இதனால், துருக்கிக்கும் ரஷ் யாவுக்கும் இடையிலான பகைமை மேலும் வளரத் தொடங்கியது.



ஆதுர்கான்

**ஐ.எஸ். பயங்கரவாதிகள்**

சிரியப் போரால் துருக்கி சந்தித்துள்ள அடுத்த எதிரி, ஐ.எஸ். பயங்கரவாத இயக்க மாகும். அமெரிக்காவுடன் இணைந்து துருக்கி, ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வருகின் றது. இதனால் ஐ.எஸ். பயங்கர வாதிகள் துருக்கிமீது பல தடவைகள் தாக்குதல் களை நடத்தியுள்ளனர்.

இறுதியாக ஐ.எஸ் பயங்கரவாதிகள் துருக்கி இஸ்தான்புல் விமான நிலை யத்தின்மீது தற்கொலைத் தாக்குதலை நடத்தி, பலரைக் கொலை செய்ததை நாம் அறிவோம்.

**சிரிய-குர்திஸ் போராளிகள்**

சிரிய போர்க்களத்தில் நின்று போராடும் மற்றுமோர் ஆயுதக் குழுதான் சிரிய-குர்திஸ் ஆயுதக் குழு. இவர்களையும் இன் னும் பலரையும் உள்ளடக்கி சிரிய ஜன நாயகப் படை என்ற பெயரில் அமெரிக்கா, ஆயுதக் குழுவொன்றை உருவாக்கி, அவர்களை ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றது.

துருக்கியில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் குர்திஸ்களின் சிரியப் பிரிவாக இந்த சிரிய-குர்திஸ் படை இருப்பதால் அவர்கள் மீதும் துருக்கி தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்த ஆயுதக் குழு சிரியாவின் அலப்போ மாகாணத்தின் ஒரு பகுதியை அண்மையில் கைப் பற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவர்கள் மீது துருக்கி தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

தனது நேச நாடான அமெரிக்கா இவர் களுக்கு ஆதரவு வழங்கு வதை துருக்கி விரும்பவில்லை. இந்த விவகாரத் தால் அமெரிக் காவும், துருக்கியும் முரண்பட்டுக் கொண்டே நிற்கின்றன. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராகத் தாம் போராடுவதால், தமது எதிரி களை ஐ.எஸ்களுக்கு எதிராக பயன்படுத்த வேண்டிய தேவை அமெ ரிக்காவுக்கு இல்லை என்பதே துருக்கியின் நிலைப் பாடாகும். இவ்வாறு துருக்கி பல எதிரிகளை உரு வாக்கியுள்ளதால், இராணுவப் புரட்சி யின் பின்னணியில் இந்த எதிரிகள் இருக்கின்றார்களோ



பஸார் அல் -அஸாத்

என்ற சந்தேகம் எழுகின்றது. இருப்பி னும், இந்த இராணுவ புரட்சிக்கு அமெ ரிக்காதான் காரணம் என்று சொல்லப் படுகின்றது. துருக்கி முழுமையான அமெ ரிக்கா சார்பு நாடாக இருப்பதால் இந்த ஊகம் முழுமையாக ஆராயப்பட வேண்டி யுள்ள தொன்று. இருந்தாலும், இந்தப் புரட்சியின் பின்ன ணி யில் இருப்பவர் பெத்துல்லா குலேன் என்ற மதப் போதகர் தான் என்று துருக் கிய ஜனாதி பதி ஆதுர்கான் தெரிவித் தார். அமெ ரிக்காவில் வாழும் இவர், ஆதுர் கானின் பழைய நண்ப ராவார். 2013 இல் இடம் பெற்ற ஊ ழ ல் , மோ ச டி விசாரணை தொடர் பில் அவர் ஆதுர் கானுக்கு எதிராகச் செயற்பட்ட தால், இருவரும் எதி ரிகளாக மாறி னர். அவர் அமெரிக் கா வுக்கு நாடு கடத்தப்பட் டார். இரா ணுவப் புரட்சியில் இவ ரது பங்க ளிப்பு உண்டா என்று விரிவாக ஆராயப் பட வேண்டியுள் ளது. இருப்பினும், உண்மையான சூத்தி ரதாரி கள் மிக விரைவில் கண்ட றியப்படுவர் என்று நம்பப்படுகின்றது.

> சிரியப் போரால் துருக்கி சந்தித்துள்ள அடுத்த எதிரி, ஐ.எஸ். பயங்கரவாத இயக்க மாகும். அமெரிக்காவுடன் இணைந்து துருக்கி ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் களை நடத்தி வருகின்றது. இதனால் ஐ.எஸ். பயங்கரவாதிகள் துருக்கிமீது பல தடவை கள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

## கற்றல் செயற்பாடுகள் தடைப்படலாகாது

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் சிங்கள தமிழ் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு, கைகலப்பாக மாறி, காயங்களுக்கு உள்ளான மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அளவுக்கு நிலைமை தீவிரமடைந்தமை கவலைதருமொன்றே. இதன் காரணமாக பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களையும் தற்காலிகமாக மூடிவிடுவதென மேற்கொள்ளப்பட்ட முடிவு பெற்றோர் என்ற வகையில் எம்மைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

போர் இடம்பெற்ற காலகட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு காரணங்களை முன் நிறுத்தி மாணவர் தரப்புக்களுக்கு மத்தியிலான கருத்து வேறுபாடுகளாலும், முரண்பாடுகளாலும் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டு, அதனால் பல்கலைக்கழக மாணவர்கள் பலர், தமது கற்றல் செயற்பாடுகளில் பின்னடைவை எதிர்கொள்ள நேரிட்டதுண்டு.

அந்த வகையில் தற்போது யாழ்.பல்கலைக்கழக சிங்கள-தமிழ் மாணவர்கள் மத்தி யில் ஏற்பட்டுள்ள இந்த மோதல் நிலைக்கு அரசியல் பின்னணி எதுவும் காரணமாக இருக்குமா? என கிளப்பப்படும் சந்தேகத்துக்கு வலுவான காரணியேதும் உள்ளதா? என்பது குறித்து எனக்கு எதுவும் புலப்படவில்லை. வெறும் ஊகத்தின் அடிப்படையில் கருத்து வெளியிடுவதும் நியாயமானதொன்றாக எனக்குத் தெரியவில்லை. அதேசம யம் அத்தகைய அரசியல் பின்னணித் தலையீடு குறித்த சந்தேகத்தையும் ஒரேயடியாகப் புறம் தள்ளிவிட இயலாதுள்ளது.

எது எப்படியோ, நீண்ட நெடும் போர்ச் சூழல் வேளையின் பின்னர் தற்போது ஏதோ ஒரு அளவுக்குத் தமது கற்றல் செயற்பாடுகளைத் தடைகள், தடங்கல்கள் எதுவுமின்றிச் சுமுகமாக முன்னெடுக்க வாய்ப்பமைந்துள்ள இன்றைய நிலையில், இலேசில் உணர்ச்சிவசப்படும் வயதுடைய எமது இளம் மாணவ சமுதாயம் முன்னெச்சரிக்கை யுடனும் பொறுமையுடனும் செயற்படுவதன் மூலம், தமது கற்றல் செயற்பாடுகளது இலக்கை முழுமையாக எய்திட இயலும்.

அந்த வகையில் மற்றொரு குழப்பகரமான நிலையை உருவாக்க பல்கலைக்கழக மாணவர்களைப் பயன்படுத்த நினைக்கும் தரப்புகளது வலையில் அகப்பட்டுவிடாது, அதேசமயம் தமக்கேயான தனித்துவத்தையும் மதிப்பையும் விட்டுக் கொடுக்காது நிதானமாகச் செயற்பட்டுத் தமது இலக்கை எமது பிள்ளைகள் எட்ட வேண்டுமென்பதே எனது பேரவா.

**ஒரு வாசகன்.**

## எமது சமூக விழிப்புணர்வுக்கான செய்தியொன்று

ஊடகங்கள் ஆற்ற வேண்டிய தரும காரியங்களில் முக்கியமானது, சமூ கத்தை தட்டி எழுப்புதலாகும். அந்த வகையில் சகலரையும் சிந்திக்க வைத்த செய்திதான் கடந்த 18ஆம் திகதிய உதயனில் வெளிவந்த "விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களை தமிழ் மாணவர்கள் அதிகம் நிரப்ப வேண்டும்" என்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பெறுமதியான செய்தி. எமது பிள்ளைகளுக்கு உரிய பருவத்தில், நல்ல விடயங்களை, இலட்சியங்களை, உணர்த்த வேண்டியது எம் ஒவ்வொருவருக்கும் உள்ள பெரிய முக்கிய பொறுப்பாகும். நாம் அதனைச் சரியாகச் செய்யாவிட்டால், யாழ்.ஆயர் சொன்னதுபோல, கட்டடங்கள்தான் மிஞ்சும். கல்வியில் நோக்கத்தை அடைய இயலாது.

நவீன யுகத்துக்கு ஏற்ப விஞ்ஞான, கணித, தொழில்நுட்ப, முகாமைத்துவப் பாடங்களைக் கற்பதற்கு வழிகாட்டுவது பிரதானமாகும். பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்குமான இந்த அறை கூவல் எல்லோர் மனங்களிலும் பதியட்டும். எமது மாணவர்களுக்கு இந்தத்துறை மீதான ஆர்வம் வெகுவாகக் குறைந்து விட்ட காரணத்தினால், விஞ்ஞான பீடங்களில் எல்லோருக்கும் இடமளிக்க வேண்டியதாக அமைந்துவிட்டது. யார்தான் என்னதான் செய்ய முடியும்? சரவணபவன்போன்று, சகல நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்களும், வடமா காண சபை உறுப்பினர்களும், ஆன்மிகவாதிகளும், புத்திஜீவிகளும், ஊருக் குப் பெரியவர்களுமாக மாணவர்களுக்கு வழிகாட்டி உதவவேண்டும். இல்லா விட்டால் ஆலயங்களும் வெறும் கட்டடங்களும், வாகனங்களும், கடை களுமே யாழ்ப்பாணத்தின் அடையாளங்களாக வானுயர்ந்து நிற்கும். இதை உணர்ந்து செய்படுவோமாக.

**கே.எஸ்.சிவஞானராஜா**
**கொக்குவில்.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொடல் அழகி சகோதரனால் கொலை: குடும்பத்தினர் மன்னிப்பு வழங்க தடை



லாகூர், ஜூலை 20
பாகிஸ்தான் பிரபல மொடல் அழகி தனது சகோதரனால் கௌரவக் கொலை செய்யப்பட்டமைக்கு அவரது குடும்பத்தினர் அவருக்கு மன்னிப்பு வழங்க அந்த நாட்டு அதிகாரிகள் தடை விதித்துள்ளனர். பாகிஸ்தானின் பிரபல மொடல் அழகி குவன்டீல் பலோச் கடந்த வெள்ளிக் கிழமை, தனது சகோதரனால் போதை மருந்தூட்டியும், கழுத்து நெரித்தும் கொல்லப்பட்டார். இதனையடுத்து முக மட் வாசீம் என்ற அவரது சகோ தரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய வாக்குமூலத்தில் கௌரவக் கொலை செய்ததாகத் தெரிவித்திருந்தார்.
சகோதரியின் ஒளிப்படங்கள் இஸ்லாமிய மதத்துக்கு முரணாக அமைந்துள்ளன. இதனால் கொலை முயற்சியில் ஈடுபட்டதாக வாசீம் தெரிவித்தார். இஸ்லாமிய மதகுரு ஒருவரின் மடி மீது அழகி இருப்பது போன்ற படம் சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து இந்த கொலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொலை செய்த மகனை மன்னித்து ஏற்றுக் கொள்வதாகக் குடும்பத்தினர் அறிவித்தனர் எனப் பொலிஸார் கூறினர். ஆயினும் அரசு இவ்வாறு மன்னிப்பு வழங்குவதற்குத் தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.
வருடாந்தம் பாகிஸ்தானில் 500 பெண்கள் கௌரவக் கொலை செய்யப்படுகின்ற னர். கொலை செய்பவர்களுக்குக் குடும்பத்தினர் மன்னிப்பு வழங்குவது குறித்த சட்டங்கள் தற்போது ஆராயப் பட்டு வருகின்றன. இந்த நிலையில், வாசீமின் தந்தை முகமட் அசீம் தனது மகளின் இறப்புத் தொடர்பாக மகன் மீது வழக்குத் தொடரவில்லை. அத்துடன் சர்ச்சைக்குரிய படத்தில் காணப்பட்ட மதகுரு மத ஆலோசனைச் சங்கத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். (த-ரி4)




# எல் சல்வடோரில் கருக்கலைப்புக்கு 50 ஆண்டுகள் சிறை

### புதிய சட்டத்துக்கு வலுக்கிறது எதிர்ப்பு

சன் சல்வடோர், ஜூலை 20
எல் சல்வடோரில் பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபட்டால் 50 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்துக்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இலத்தீன் அமெரிக்க நாடுகள் உலகளாவிய ரீதியில் இனப் பெருக்கம் தொடர்பாகக் கடுமையான சட்டங்களைக் கொண்ட நாடுகளாகும். இந்த நாடுகளில் வன்புணர்வு, தவறான நடத்தை போன்றவற்றுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படாமல், தாய்மை ரீதியான சட்டங்கள் வலுவாகப் பின்பற்றப்படுகின்றன எனப் பெண் ஆர்வலர்கள் கண்டனங்களை வெளியிட்டனர்.
எல் சல்வடோரில் இதுவரை கருக்கலைப்பில் ஈடுபட்டதாக 25 பெண்களுக்கு 30 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியது.
தற்போது உருவாக்கப்பட்ட சட்டம் 30 வருடங்களில் இருந்து 50 வருடங்கள் வரை தண்டனைக் காலத்தை அதிகரித்துள்ளது.
இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்க பணிப்பாளர் எரிக்கா - கியூ வெறா தெரிவிக்கையில், மில்லியன் கணக்கான பெண்களின் வாழ்க்கையில் எல் சல்வடோர் அரசு விளையாடுகின்றது. கருத்தடை என்பது கண்டனத்துக்குரியது தான். ஆனால் வாழ்க்கையில் நொடிந்துள்ள பெண்களுக்கே இவ்வாறான தண்டனைகள் வழங்கப்படுகின்றன-என்றார்.
1998 ஆம் ஆண்டு வரை வன்புணர்வு, தவறான நடத்தை ஆகியவற்றால் கருவுற்றால் பெண்ணின் வாழ்வைக் கருத்தில் கொண்டு, கருவைக்கலைக்க அரசு அனுமதி வழங்கியிருந்தது. கிறிஸ்தவ திருச்சபையின் அழுத்தத்தால் அங்கு புதிய சட்டம் அறிமுகமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1998 - 2013 ஆண்டு காலப் பகுதியில் 600 பெண்களுக்கு 40 வருடங்கள் வரை சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.
நாட்டில் நிலவும் சனத்தொகைக் குறைவை ஈடு செய்ய இவ்வாறான சட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நெருக்கடியான சூழலால் பதின்ம வயதுச் சிறுமிகள் பலர் தாயாகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மூன்றில் ஒரு பிரசவம் பதின்ம வயதினருடையது எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனையடுத்து கடந்த மே மாதம் பெண் சமூக ஆர்வலர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் 40 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்ட பெண் ஒருவர் விடுதலையானமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## ஐ.எஸ். அமைப்பை கேலி செய்கின்றனர் பிரான்ஸ் வாசிகள்



பாரிஸ், ஜூலை 20
பிரான்ஸின் நீஸ் நகரப் பகுதியில் இடம் பெற்ற படுகொலை சம்பவத்துக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்புக் கூறியுள்ளதை அடுத்து, அந்த நாட்டு மக்கள் குறித்த அமைப்பைக் கேலி செய்து வருகின்றனர்.
ஐ.எஸ் அமைப்பின் செய்தி ஊடகமான அமாக் எனும் இணையத்தில், குறித்த தாக்குதலை மேற்கொண்ட முகமட் லகுவா யிஜ் போகில் என்பவர் தமது போராளி எனத் தெரிவித்தனர்.
ஆனால் பிரெஞ்சு அதிகாரிகள், ஐ.எஸ். அமைப்புக்கும் முகமட்டுக்கும் தொடர்பு உள்ளதாகத் தெரியவில்லை எனக் கூறினர்.
இதனையடுத்து பிரான்ஸ் வாசிகள், டுவிட்டர் சமூக வலைத்தளத்தில், குறியீடு ஒன்றையும் உருவாக்கி ஐ.எஸ் அமைப்பைக் கேலி செய்யும் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.
பிரான்ஸ் உள்துறை அமைச்சர் தெரிவிக்கையில்,
ஐ.எஸ். அமைப்புடன் முகமட் தொடர்பில் இருந்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் பெறப்படவில்லை. போதை மருந்துப் பாவனையும் மனதில் இருந்த கோப உணர்வுமே அவரைப் படுகொலைக்குத் தூண்டின-என்றார்.
பிரிட்டனின் அரசியல் குழப்பம், உலகில் இடம்பெறும் சம்பவங்கள், தாம் தொலைத்த சிறிய பொருள்கள் என்பவற்றை எல்லாம் ஐ.எஸ் அமைப்பே செய்தது எனக் கேலியான பதிவுகளைப் பிரான்ஸ் மக்கள் வெளியிட்டுள்ளனர். (த-ரி4)

## பிரான்ஸ் தாக்குதலில் உயிரிழந்தோரை அடையாளம் காண்பதில் தாமத நிலை

### 35 பேரின் உடல்கள் மட்டுமே இனங்காணப்பட்டன



பாரிஸ், ஜூலை 20
பிரான்ஸில் கடந்த வாரம் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் இனம்காணப்படாமல் உள்ளதாக, அதிகாரபூர்வத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
உயிரிழந்த 84 பேரில் 35 பேரின் உடல்கள் மட்டுமே கடந்த தினங்களில் இனம்காணப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் போது காணாமற்போனவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப் படுகிறது.
பொலிஸ் நிலையங்கள், மருத் துவமனைகள் மற்றும் சமூக வலைத் தளங்களில் தேடல் முயற்சி மேற்கொண்டும் தமது உறவினர்களைக் காணவில்லை எனப் பலர் முறைப் பாடு செய்துள்ளனர்.
இதேவேளை, உயிரிழந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுவது குறித்து பிரான்ஸ் அரசு மௌனம் சாதிப்பது, உறவினர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பலர் மன அழுத்தங்களுக்கும், கவலைகளுக்கும் ஆளாகியுள்ளனர்.
உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை பிரான்ஸ் அரசு மறைப்பதாகவும் பலர் அரசைச் சாடியுள்ளனர்.
பொலிஸார் தெரிவிக்கையில், சடலங்களைக் குறுகிய கால இடைவெளியில் இனம் காண்பது சிரமமாக உள் ளது-என்றனர்.
உடல்களை இனம் காண்பதற்குப் படிப்படியான நடைமுறைகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றை இனம் கண்டு, வெளியிடுவது உறுதி எனப் பிரான்ஸ் சுகாதாரத்துறை அமைச் சர் மரி சோல் ரொறேய்ன் தெரிவித்தார். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடும் ரயிலில் பயணிகளை தாக்கினார் ஆப்கான் அகதி

### ஜேர்மனியில் 4 பேர் காயம்

பெர்லின், ஜூலை 20
ஜேர்மனியில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அகதி ஒருவர் ஓடும் ரயிலில் பயணிகளை ஆயுதத்தால் தாக்கியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன், கோடரி மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களால் ரயிலில் வைத்துப் பயணிகளைத் தாக்கினார்.
இதனையடுத்துச் சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் குறித்த நபரைச் சுட்டு வீழ்த்தினர்.
இந்தச் சம்பவத்தில் 4 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள், ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்த, ஒரே குடும்பத்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.
இதனை நேரில் பார்த்த 14 பேர் அதிர்ச்சி அடைந்தமையால் மனநல சிகிச்சை வழங்கப்படுவதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்தச் சம்பவம் ஜேர்மனியில் அகதிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பான விடயத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு ஹொங்கொங் அரசு கண்டனத்தை வெளியிட்டதுடன், காயமடைந்தவர்களுக்குத் தமது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது. (த-ரி4)






தாய்வானில் நேற்று சுற்றுலாப் பயணிகளின் பஸ் விபத்துக்குள்ளாகித் தீப்பிடித்து எரிந்தது. 26 பேர் சம்பவ இடத்தில் சாவடைந்தனர். தாய்வானின் ரோயுன் பன்னாட்டு விமான நிலையத்துக்கு பயணிகளுடன் பயணித்த சொகுசு பஸ்ஸே வீதித் தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் சாவடைந்தவர்களின் முழுமையான விவரம் இன்னும் வெளியாகவில்லை. (த-ரி4)

## கபாலிக்காக விடுமுறை வழங்கும் வர்த்தகர்கள்

சென்னை, ஜூலை 20
தென்னிந்தியத் திரையுலகத்தின் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தின் கபாலி திரைப்பட வெளியீட்டு விழாவன்று வர்த்தக நிறுவனங்கள் விடுமுறை அறிவித்துள்ளன.
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ள இந்தத் திரைப்படத்துக்காக சென்னை, பெங்களூர்ப் பகுதியில் அமைந்துள்ள வணிக நிறுவனங்கள் விடுமுறை அறிவித்துள்ளன. தொழிலாளர்களை மகிழ்ச்சியாக்கவே இந்த அறிவிப்பு என நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். சில நிறுவனங்கள் தொழிலாளருக்கு, இலவச ரிக்கெட்டுக்களை வழங்கியுள்ளன.



மேலும் தீபாவளி போனஸ் போன்று இது கபாலி போனஸ் எனவும் சில நிர்வாகிகள் தெரிவித்தனர்.
அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளில் கபாலி வெள்ளிக்கிழமை திரையிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜூலை மாத ராசி பலன்கள்

## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

எதைச் செய்தாலும் தன்னம்பிக்கையை கொண்டு சொந்த முயற்சியிலேயே செய்து வெற்றிபெறும் மீன ராசியினரே இந்த மாதம் சூரியன் - புதன் - சுக்கிரன் சுக ஸ்தானத்திலும் - ரண-ருண ஸ்தானத்தில் ராசிநாதன் குரு - ராகுவும் - பாக்கிய ஸ்தானத்தில் வக்கிரக நிவர்த்தி பெற்ற செவ்வாய் - சனியும், விரைய ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சாரம் செய்கிறார்கள். தனாதிபதி செவ்வாய் பாக்கியஸ்தானத்தில் இருக்கிறார். பணவரத்து அதிகரிக்கும். அறிவுத்திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம் கவனம் தேவை. சூரியன் சஞ்சாரம் ராசிக்கு நான்கில் இருப்பதால் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.
தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாகப் பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சிபெறும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும்போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்துச் செய்வது நல்லது. உத்தியோகத்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கலாம்.
குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் அனுசரித்து செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. விருந்தினர்கள் வந்து செல்வார்கள்.
பெண்களுக்கு எந்தவொரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டி இருக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.
மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். விளையாட்டுக்களில் கவனம் செலுத்துவதுடன் கல்வியிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

**பரிகாரம்:** தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமையில் நெய் தீபம் ஏற்றி வழிபடுவது வெற்றிக்கு உதவும். கடன் பிரச்சினை குறையும். கல்வியில் வெற்றி கிடைக்கும்.

**பூரட்டாதி 4ம் பாதம்:**
முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். எதிர்ப்புகள் விலகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன், அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதைகூடும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள்.

**உத்திரட்டாதி:**
தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**ரேவதி:**
குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன்-மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேறுமை நீங்கி, ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும்.

(முற்றும்)

தர்மிகன்

# மனநலம் பேணுவதில் பின்னடைவு

எத்தனை அறிவியல் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும், இன்னமும் மன நலனைப் பேணுவதில் நாம் மட்டுமல்ல, நமது ஆட்சியாளர்களும் பின் தங்கியே உள்ளனர். அரசுப் பொதுத் தேர்வுகளை நீக்குவதன் மூலம், மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வதைப் பெருமளவு குறைத்துவிடுவோம் என்று தேர்தல் அறிக்கை வெளியிடும் அளவுக்குத்தான், மனநல பாதிப்புக்களைக் குறித்த புரிதல் நம்முடைய அரசியல் தலைவர்களுக்கே உள்ளது.
கடந்த ஒன்பது மாதங்களில் இந்தத் தொடரில் பேசப்பட்ட விடயங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகப் பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் பல்வேறு வழிகளில் என்னிடம் தெரிவித்து வந்தனர். படம் எவ்வளவு நன்றாக இருந்தாலும், உச்சக் காட்சிதான் மனதில் நன்றாகப் பதியும். எனவே, இங்கு சில முக்கியமான விடயங்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**பெற்றோர் கவனத்துக்கு**
வளர்இளம் பருவத்தில் எல்லாருக்கும் ஏற்படும் சாதாரண மனரீதியான மாற்றங்களைக் குறித்துப் பயப்பட வேண்டாம். இவற்றை ஆலோசனைகள் மூலம் பெரும்பாலும் சரிசெய்துவிடலாம்.
குழந்தைப் பருவத்திலிருந்து வளர்க்கப்படும் விதமே, வளர் இளம் பருவத்தின் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும். பெற்றோர் கற்றுக்கொடுக்கும் காரியங்களைப் பிரபலிக் கும் கண்ணாடிகள்தான் குழந்தைகள். அசாதாரண மாற்றங்கள் தெரியும்பட்சத்தில் மனநல மருத்துவரை அணுகத் தயங்காதீர்கள். உடல் நோய்களுக்கு மருத்துவரை அணுகுவது போன்றதுதான், மனநல மருத்துவரை நாடுவதும். அறிவியல்பூர்வமாகச் செய்யப்படும் சிகிச்சைகளை அலட்சியப்படுத்த வேண்டாம்.
சரியான நேரத்தில், சரியான வழிகாட்டுதல் இல்லாமல்தான் நிறைய வளர்இளம் பருவத்தினர் பாதைமாறுகின்றனர். தற்போது முதுகலை மனநல மருத்துவம் (MD) படித்து முடித்தபின், குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினர் மனநலத்துக்கு மட்டுமே தனிப்பட்ட மேற்படிப்பு (DM) பிரிவுகள் எல்லாம் உருவாக்கப்பட்டன. அந்த அளவுக்கு வளர்இளம் பருவத்தினரின் மனநலம் முக்கியமான ஒன்றாகத் தற்போது கருதப்படுகிறது.
மனநோய்கள் ஏற்படும்பட்சத்தில் மனம் உடைந்துவிடத் தேவையில்லை. தற்போது வேகமாக வளர்ந்துவரும் மனநல மருத்துவத்துறையில் ஏராளமான புதிய கண்டுபிடிப்புக்கள் மனநல சிகிச்சையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும் அளவில் உள்ளன.
இந்தக் குழப்பத்தில் பள்ளிகளின் கவர்ச்சியான விளம்பரங்களுக்கு மயங்கிக் குழந்தைகளை பலிகடாக்களாக்கி விடாதீர்கள். மருத்துவம் படிக்க, அல்லது பொறியியல் படிப்பதற்காக நகரப் பள்ளிகளைத் தேடிஓடாதீர்கள். பள்ளிகள் நடத்தப்படும் முறை காரணமாக, மாணவர்கள் எந்தளவு மனநலப் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்பது மனநல மருத்துவர்கள் மட்டுமே அறிந்த செய்தி.





**ஆசிரியர்களின் கவனத்துக்கு**
வளர்இளம் பருவத்தில் மாணவர்கள் பெரும்பாலான நேரம் பள்ளியில் செலவிடுவதால், வளர்இளம் பருவத்தினரின் நலனில் ஆசிரியர்களே முக்கியப் பங்கு வகிக்க முடியும். முழுமையான கட்டுப்பாட்டை விரும்பாத இந்த வயதில் ஆடுற மாட்டை ஆடிக் கறப்பது போன்ற வித்தைகளைத் தெரிந்து வைத்திருந்தால், மாணவர்களைச் சிறப்பாகக் கண்காணிக்க முடியும்.
போதைப்பொருள் மற்றும் அலைபேசி, இணையப் பயன்பாடுகளின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை அடிக்கடி ஏற்படுத்துவது, இந்தக் காலகட்டத்தில் மிக முக்கியமான ஒன்று. பள்ளியில் அசாதாரண மாற்றங்கள் தெரியும் பட்சத்தில் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துவது மட்டுமல்லாமல், மனநல மருத்துவரை ஆலோசிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தவும் தயங்கவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருமைக்குரிய 'கழுதைகள்'



பணி.செ.அன்புராசா,
அமதி மாங்குளம்.

கோயிலின் முன்வீதியில் கழுதை ஒன்று இறந்து கிடந்தது. ஒரு நாளாகியும் அதனை மாநகர சபையினர் அகற்றாத காரணத்தினால், அதனை அப்புறப்படுத்தும்படி குருவானவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு மாநகர சபை உத்தியோகத்தருக்குச் சொல்லியிருக்கின்றார். தொலைபேசியில் உரையாடிய அந்த அதிகாரி கொஞ்சம் நக்கலாக, "இறந்தவர்களை அடக்கம் செய்வது உங்கள் கடமையல்லவா!" எனக் கூறுயிருக்கிறார். சற்றும் பதற்றப்படாமல், "உண்மைதான்! ஆனால், அடக்கத்துக்கு முன், சொந்தக்கார ஆள்களிடம் சொல்லவேண்டும் அல்லவா!" என்றிருக்கின்றார் குருவானவர்.

## பெருமைபெற்ற கழுதை

கழுதை, வரலாற்றின் சில கட்டங்களில் குறிப்பிடத்தக்க பெருமையைப்பெற்றிருக்கின்றது. இயேசுவின் தாய் மரியாவையும், இயேசுவையும் சுமந்து சென்ற பெருமையைக் கழுதையே பெற்றிருக்கின்றது. மனுக்குலத்தின் மீட்பரையும்(இயேசு) இறைவனின் தாயையும்(மரியா) சுமக்கும் பாக்கியம் வேறு எந்த விலங்குகளுக்கும் கிடைக்காமல், கழுதைக்குக் கிடைத்திருக்கின்றது என்று - நினைக்கின்றபோது அதனை உண்மையில் ஒரு சிறப்பா கவே கருதவேண்டி இருக்கின்றது.

அண்மையில் இந்தியாவில் சமயத் தீவிரவாதத்தை - இன்னுமொரு வகையில் சமயப் பயங்கரவாதத்தை வளர்க்கின்ற ஒரு மாநிலத்தில் ஒரு குழுவினர் ஒரு கத்தோலிக்க மறைப் பணியாளரை கழுதையின்மீது ஏற்றி செருப்பினால் அவரை அடித்துச் செல்கின்ற காட்சி முகநூலில் வெளிவந்திருந்தது. அவர்களின் இச்செயலினால் அக்குருவானவரின் முகத்தில் எந்தவித சலனமோ அல்லது சோகமோ தென்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? என மனம் கேள்வி எழுப்பியது. இயேசுகூட அவ்வாறே கழுதையின் மீது யேருசலேமில் பவனி வந்ததை நினைவு கூர்ந்ததோடு, இயேசுவை மகிமைப் படுத்துவதாக இவ் அவமதிப்பை ஏற்று, தன் மனதுக்குள் மகிழ்ந்தாரோ என மனம் பதிலையும் கண்டுகொண்டது.

பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளில் கழுதைக்குப் பயிற்சியளித்து வண்டியிழுத்தல், பாரம் தூக்குதல், உழுதல் போன்ற வேலைகளை கழுதைகளைக்கொண்டு செய்கின்றார்கள் என அங்கு பணியாற்றும் நண்பர் கூறியிருந்தார். அது மட்டுமல்லாமல் கழுதைகளை நியாயமான விலைகொடுத்தே, இந்த நாடுகளில் வாங்க முடிகின்றது எனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும்,அரசர்கள் போர்க் காலங்களில் போர்க் களங்களுக்கு விரைவாகச்செல்ல குதிரைகளைப் பயன்படுத்தினர். போர்களைப் புரிந்த போது குதிரைப் படைகளையும் பயன்படுத்தினர். ஆனால்,போர் நீங்கி அமைதி நிலவிய காலங்களில் இந்த அரசர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களைப் பார்வையிடவும் சாதாரண மக்களை அவர்களின் வாழ்விடங்களில் சந்திக்கவும் - பார்க்கவும்கழுதைகள்மீதுபவனிசென்றார்கள். காரணம் ஆறுதலாகவும் அதே வேளை ஆர்ப்பாட்டம் இல்லாது அமைதியாகச் செல்வதற்காகவும் கழுதைகளைக்'கார்' களாக்கிக் கொண்டார்கள்.

## கழுதைகளிலும் கழுதைகள்

'கழுதை'என்று எவரையாவது ஏசினால், அல்லது திட்டினால் சாதாரணமாக அவர் புத்திக் குறைவானவர், அறிவில்லாதவர் என்பது பொருளாகின்றது. அதாவது மிருகங்களுக்கு இருக்க வேண்டிய ஐந்தறிவுகூட கழுதைக்கு இல்லாதது போலவே, அவ்வார்த்தை நோக்கப்படுகின்றது. ஆனால்,புத்தியைப் பயன்படுத்துவதில் நான்கு கால் கழுதையிலும் பார்க்க மோசமான இரண்டு கால் கழுதைகள் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பதை நடைமுறை வாழ்க்கையில் பலர் காணத்தவறுகின்றார்கள் என்பதுதான் வேடிக்கை. அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக்கூறலாம். கர்ப்பவதியான மனைவியை தன் கழுதையின்மீது ஏற்றிக்கொண்டு கணவன் கவனமாக நடந்து சென்றான். அவ்வழியே வந்த இருவர், "கர்ப்பிணி மனைவியை கழுதைமீது ஏற்றிச் சவாரிசெய்கிறான்! மூளையில்லாத முட்டாள்!" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். இதனைச் செவிமடுத்த அவன், சற்று யோசித்து விட்டு கழுதையின்மீது தான் ஏறிக் கொண்டு மனைவியை நடந்துவரச் சொன்னான். கழுதைமீது கணவன் இருப்பதையும் கர்ப்பிணி மனைவி நடந்துவருவதையும் கண்ட வேறு இருவர்,"கர்ப்பிணி மனைவியை நடக்கவிட்டு, தான் கழுதைமீது சவாரி செய்கின்றான்! படுபச்சோந்தி!" என்றார்கள்.

> கழுதை, வரலாற்றின் சில கட்டங்களில் குறிப்பிடத்தக்க பெருமையைப் பெற்றிருக்கின்றது. இயேசுவின் தாய் மரியாவையும், இயேசுவையும் சுமந்து சென்ற பெருமையைக் கழுதையே பெற்றிருக்கின்றது. மனுக் குலத்தின் மீட்பரையும்(இயேசு) இறைவனின் தாயையும்(மரியா) சுமக்கும் பாக்கியம் வேறு எந்த விலங்குகளுக்கும் கிடைக் காமல் கழுதைக்குக் கிடைத்திருக்கின்றது.

இவர்கள் இவ்வாறு கூறக் கேட்டதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு கணவனும் மனைவியும் கழுதையின் மீது ஏறிக்கொண்டார்கள். இதனைக் கண்ணுற்ற இருவர்,"வாய்பேச முடியாத ஜீவனை வதைக்கின்றார்கள். இதயமில்லாத மிருகங்கள்!" எனக் கூறிச் சென்றார்கள். இவர்கள் கூறியதைக் கேட்ட கணவனும் மனைவியும் இப்போது என்ன செய் வது?, ஏது செய்வது?எனத் திண்டாடினார்கள். இறுதியில், ஒரு முடிவுக்கு வந்தார்கள். இருவரும் கழுதையில் இருந்து இறங்கி கழுதை யோடு சேர்ந்து நடந்து சென்றார்கள். இதனைப் பார்த்த இன்னும் இருவர்,"ஏறிச் சவாரி செய்ய வேண்டிய கழுதையை விட்டுவிட்டு இருவரும் நடந்து செல்கின்றார்கள்! இரண்டு முழு முட்டாள்கள்!" என்றார்கள்.

இந்தச் சம்பவத்தில் இருந்து பல படிப்பினைகளைக் கூற முடியுமாயினும், இந்தக் கட்டுரையின் ஊடாகச் சொல்ல விளையும் ஒரு கருத்தைச் சுட்டுவது இவ்விடத்தில் பொருத்தமாகும் எனத் தோன்றுகின்றது. வீண் விமர்சனங்களை வீசும் கழுதைகளின் பேச்சைக் கேட்டு, தங்கள் கழுதையைத் தம் பயணத்துக்குப் பயன்படுத்தாமல், நடந்துசெல்லும் கழுதைகள் குறித்துச் சிந்திக்க வேண்டி இருக்கின்றது. பிறரின் மொக்குத்தனமான, மோட்டுத் தனமான வியாக்கியானங்களுக்குச் செவிமடுத்து வாழ்வின் அர்த்தத்தை இழந்து போகின்றவர்கள் - தம் சுயத்தைத் தொலைத்து விடுகின்றவர்கள் கழுதையிலும் மோசமானவர்களே!

## மன்னார்க் கழுதைகள்

மன்னார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்க்கும் பெண்கள் கடந்த சித்திரைத் திங்கள்08ஆம் நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாக அறியமுடிகிறது. சித்திரைப் புத்தாண்டு உள்ளடங்கிய நாள்களில் விடுமுறை தருவதாகக்கூறி, இரவு பகலாக வேலை வாங்கப்பட்ட சூழலில் அவர்களுக்கான விடுமுறை மறுக்கப்பட்ட நிலையில், இந்தப் பெண்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று அறியமுடிகிறது. இந்தச் செய்தியைஉதயன் நாளிதழ் ஏப்ரல் 9ஆம் திகதி அன்று வெளியிட்டு இருந்தது.

இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்க மக்கள் பிரதிநிதிகளில் சிலர் பணிப்புறக் கணிப்பு வேளையில், அங்கு சென்றுள்ளார்கள். இவர்களுடனான பேச்சில் விடுமுறை மறுக்கப்பட்ட விடயத்துடன் இன்னும் சில பிரச்சினைகளும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட பெண்களால் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான், "நீங்கள் எல்லாம் மன்னார்க் கழுதைகள்" என பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளால் சொல்லப்பட்டு, தாங்கள் நடத்தப்படுவதாகவும், அதனால் தாங்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'ஒன்றுக்கும் உதவாத கழுதைகள்' என தன் மாண வர்களைப் பார்த்து அடிக்கடி குறிப்பிடும் ஆசிரியருக்கு வகுப்பறையில் எழுதப்பட்டிருந்த 'கழுதைகளின் ஆசிரியரே வருக' என்ற வாசகம் பெரும் வெளிப்படுத்த லாகவும், ஆழ்ந்த படிப்பினையாகவும் மாறி யிருக் கின்றது என்பது ஆசிரியரின் நடவடிக்கைகளில் இருந்து தெரிகின்றது. வகுப்பறையில் நடந்ததுபோல ஆடைத் தொழிற்சாலை யிலும் 'கழுதைகளின் அதி காரிகளே வருக என்றோ, அல்லது இதனையே சுருக்கமாகவும் சுவையாகவும் மாற்றியமைத்து' கழுதை அதிகாரிகளே வருக! என்பதோடு அவர்கள் மொழியையும் சேர்த்து கழுதை அதிகாரிகளே ஆயு போவன் என ஒரு நாளைக்கு அன்(ம்)பான வார்த்தை களால் வரவேற்பளிக்க தாங்களாகவே இவ்வாறான காட்டுக் குணங்களைக் கைவிட்டுவிடுவார்கள்.

**கழுதைகளின் ஆசிரியர்**

ஒரு பாடசாலையின் வகுப்பாசிரியர் ஒருவர் தன் வகுப்பு மாணவர்கள் எல்லாரையும்,'ஒன்றுக்கும் உதவாத கழுதைகள்!'என்று அடிக்கடி சொல்லி வந்தார். இதனால், அந்த வகுப்பு மாண வர்கள் எல்லாரும் மிகுந்த கவலை அடைந்தனர். எவரிடம் சொல்லி அழு வது என்று தெரியாமல் தங்களுக் குள்ளே பகிர்ந்து, ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்தி வந்தனர். ஒருநாள் காலைவேளை, எல்லா மாண வர்களும் தங்கள் வகுப்பாசி ரியருடன் வகுப்புக்குள் நுழை கின்றபோது,'கழுதைகளின் ஆசிரியரே வருக!' என்று எழுதப்பட்டவாசகத்தைப்பார்த்த அந்த ஆசிரியருக்கு என்ன செய்வது, ஏது செய்வதென்று தெரியவில்லை. மாணவர் களுக்கோ அடுத்து என்ன நடக் குமோ, ஏது நடக்குமோ என்று கதிகலங்கிப்போய் நின்றார்கள். பிள்ளைகள், கழுதைகள் என்றால் அக் கழுதைகளுக் குப் படிப்பிக்கும் ஆசிரியர் கழுதைகளின் ஆசிரியரா கவே கருதப்படுவார் என்பது அள வையியலில் இருந்து கிடைக் கின்ற முடிவு. அந்தவகையில் அந்த வாசகம் சரியானதே! இல்லையா? அந்த நிலை மையைசுதாகரித்துக் கொண்ட ஆசிரியர் அன்றையதினம் மாணவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ளாதது அந்த வகுப்பு மாண வர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது மட்டுமல்லாமல், அந்நாளில் இருந்து அந்த மாணவர்களைக்'கழுதை கள்'என்று அழைக்காதது அவர் களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற் படுத்தியிருந்தது.

**கழுதை அதிகாரிகளுக்கு வணக்கம்**

மேற்சொன்ன படிப்பினையை முதலில் நன்றாகப் புரிந்துகொண்டால், அடுத்த வர் வேண்டுமென்றே இழிவு படுத்தச் சொல்லும் இழிசொற்களால் பாதிப்பு றாமல் வாழமுடியும்.

வழமையான பிரச்சினைகளைப்போல 'மன்னார் கழுதைகள்' என அதி காரிகளால் பிரயோகிக்கப்பட்டவார்த் தைப் பிரயோகங்களால் ஏற்பட்டுள்ள மனஉளைச்சலும், அதனால்உருவாகும் பிரச்சினையும் ஒரு சிக்கலற்ற – சிறிய பிரச்சினையே எனில் பொதுவாக பிரச்சினைகள் சிறிய அளவிலேயே ஆரம்பிக்கின்றன. ஆனால், அவை தீர்க்கப்படாததால் நாள்போகப்போக அவை பெரிய பிரச்சினைகளாக மாறு கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றன.மேற் சொன்ன மன உளைச்சலை ஏற்படுத்தி யிருக்கும் பிரச்சினைக்கானவிடை ஒரு சிறிய வகுப்பறையில் கிடைப்பதாகவே எனக்குத் தெரிகின்றது.

'ஒன்றுக்கும் உதவாத கழுதைகள்' என தன் மாணவர்களைப் பார்த்து அடிக்கடி குறிப்பிடும் ஆசிரியருக்கு வகுப்பறையில் எழுதப்பட்டிருந்த 'கழுதைகளின் ஆசிரியரே வருக' என்ற வாசகம்பெரும்வெளிப்படுத்தலாகவும், ஆழ்ந்த படிப்பினையாகவும் மாறி யிருக்கின்றது என்பது ஆசிரியரின் நடவடிக்கைகளில் இருந்து தெரி கின்றது.வகுப்பறையில் நடந்ததுபோல ஆடைத்தொழிற்சாலையிலும்'கழுதை களின் அதிகாரிகளே வருக! என்றோ, அல்லது இதனையே சுருக்கமாகவும் சுவையாகவும் மாற்றியமைத்து கழுதை அதிகாரிகளே வருக என்பதோடு அவர் கள் மொழியையும் சேர்த்து கழுதை அதிகாரிகளே ஆயுபோவன் என ஒரு நாளைக்கு அன்(ம்)பானவார்த்தை களால் வரவேற்பளிக்க தாங்களாகவே இவ்வாறான காட்டுக் குணங்களைக் கைவிட்டுவிடுவார்கள். இவ்வாறு செய்யவேண்டும் என்பதல்ல, இங்கு அழுத்தப்படுவது, இவ்வாறு நிகழ்ந்தால் எதிர்வினை எவ்வாறிருக்கும் என்று சிந் திக்கும்போது உருவான சாத்தியக் கூறே இது!

**'மாதோட்டத்தான் கடா!'**

மேலும், லோறஞ்சுப் புலவர், மன்னார் மாதோட்டத்தின் அறியப்பட்ட முதல் புலவர் என்ற பெருமைக்கும், மாதோட் டத்தில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த கிராமங்களில் இருந்து சிலரை அழைத்து முதன் முதலாக திண்ணைப் பள்ளிகளில் கல்வி ஊட்டியவர் என்ற பெருமதிப்புக்கும் உரிய புலவராவர். இந் தப் புலவர் பற்றிய ஒரு சம்பவம் 'த ரமிழ் புழுராக்' என்ற பழைமையான நூல் ஒன்றில் சொல்லப்படுவதாக அறியக் கிடக்கின்றது. லோறஞ்சுப் புலவர் மாதோட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை யும் மாதோட்டத்தில் கடாக்கள் (எருமை யின் ஆண்) அதிகம் உண்டென்பதை நன்கறிந்த கொழும்பைச் சேர்ந்த ஒருவர் லொறஞ்சுப் புலவரை கிண்டல் செய்யும் நோக்குடன், மாதோட்டத்தான் கடா மெத்தப் பெரிதோ? எனக் கேட்டி ருக்கின்றார். புலவரோ, கொழும்பான் கோவேறு கழுதையிலும் கொஞ்சம் பெரிது! எனப் பதில் நிறுத்தி இருக்கின் றார். ஆக, ஒரு விடயத்தைச் சொல்பவ ரின் – கூறுபவரின் மனநிலையையும் அறிந்து இவ்வாறான கேள்விகளுக்கு – சம்பவங்களுக்கு புத்திக்கூர்மை யாகப் பதிலளித்தால் சன்னங்களைப் போல பழிப்பொரின் – இழிப்போரின் – சுழிப்போரின் உள்ளங்களை ஊடுரு விப் பாயும்! புரிகிறதா?

**கழுதை அதிகாரி!**

மாடுகளை மேய்ப்பவன் 'மாடு மேய்ப் பவன்'என்றும், ஆடுகளை மேய்ப் பவன்'ஆடு மேய்ப்பவன்' என்றும் அழைப்பது வழக்கம். அவ்வாறெனில், மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் வேலைசெய்கின்றவர்களை பெரும் பான்மையின அதிகாரிகள் சொல் வதுபோல, கழுதைகள் என்று வைத்துக் கொண்டால் (இது வெறுமனே ஓர் எடுகோளே! இதனை வைத்துக்கொண்டு கட்டுரை ஆசிரியரும் கழுதைகள் எனக் குறிப்பிட்டுவிட்டார் என எனக்கெதிரான ஆர்ப்பாட்டத்துக்கு ஆயத்தமாகாதீர் கள்!) இந்தக் கழுதைளை மேற்பார்வை செய்பவர்களும், பொறுப்பான அதி காரிகளும் சாதாரண கழுதைகளாக இருக்கமுடியாது. அசாதாரண கழுதை களாக இருக்கக்கூடிய வாய்ப்பே அதிக மாக இருக்கின்றது. ஆக, கழுதை களுக்குப் பொறுப்பான அதிகாரி கழுதை களின் அதிகாரி ஆகிறார் என்பதை இப்போதைக்கு அவர்கள் ஏற்றுக்கொள் கின்றார்கள் என்பது அர்த்தமாகின்றது. அதற்காக, 'மன்னார் கழுதைகள்' என்று அழைத்தவர்கள் சாதாரண கழுதைகளாக அல் லாமல் அசாதாரண ஓரளவுக்கு என் றாலும் உறுதிப் படுத்தி ஆயிற்று. ஆகவே, மன்னார் கழுதை கள் என்று கூறிய அதிகாரிகள் அசா தாரண கழுதை கள் என்பதால் அந்தக்கழுதை களை (மன் னிக்கவும் அந்தக் கழுதை அதிகாரிகளை) கோவேறு கழுதை கள்' என அழைக் கலாமா? என்றொரு கேள்வி எழவாய்ப் பிருக்கின்றது.

அவ்வாறு அவர்களை'கோவேறு கழுதைகள்'என அழைப்பது ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் பக்கமாக நின்று சிந்திக்கின்றபோது அவ்வளவு நாகரிகமாக இராது. ஏனெ னில்,'கோவேறு'என்ற சொல் ஒரு கார ணப் பெயர்ச் சொல்லாகும் இரு சொற்கள் பிணைந்ததால் இணைந்த தாகும் 'கோ' என்றால்: இங்கு, குதிரை என்று பொருள் 'ஏறு'என்பது: இங்கு, ஏறுவதைக் குறிப்பதாகும்.

அதாவது குதிரை ஏறிப் பிறந்த கழுதை என்றாகின்றது! இன்னுமொரு வகையில் கூறுவதானால், ஆண் குதி ரைக்கும் பெண் கழுதைக்கும் பிறந்த (அனேகமாகவும் அதிகமாகவும் கழுதையின் சாயலைக் கொண்டிருப்ப தால்) கழுதையைத்தான் 'கோவேறு கழுதை' என்கிறார்கள். எனவேதான், 'மன்னார் கழுதைகள்' என்று கூறியவர் களை 'கோவேறு கழுதைகள்' என்று அழைத்தால் கொஞ்சம் வித்தியாச மான விசித்திரமான அர்த்தத்தில் பலரும் விளங்கி விடலாம் என்பதால் அந்த அதி காரிகளை அவ்வாறு அழைப்பது அவ் வளவு நாகரிகமாக இராது என ஏலவே சுட்டிக் காட்டப்பட்டது.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களை சாட்சியாகப் பார்த்தல்

சாம்.ரமேஸ்குமார்

பணமில்லாமல் இந்த உலகில் எத்தனையோ மனிதர்கள் வாழலாம். ஆனால் மனித மனதில் எண்ணங்கள் இல்லாமல் ஒரு மனிதன்கூட இந்த உலகில் வாழவே முடியாது. அந்தளவுக்கு மனித வாழ்வியலை எப்போதும் ஆட்டிப் படைக்கும் பெரும் சக்தியாக மனித எண்ணங்களே என்றும் விளங்குகின்றன.

எண்ணங்கள் நல்லதோ? தீயதோ? அவை அபாரமான சக்தியுடையவை. ஏனெனில் மனிதன் அவனது எண்ணங்களினாலே தான் உலக காரியங்களை கர்மங்களாகச் செய்யத் துணிகின்றான். மனிதனானவன் ஒரு நொடியில் எண்ணற்ற எண்ணங்களால் தாக்கப்படும் வாய்ப்பை எளிதில் பெறுகின்றான். சமானியனிலிருந்து உயர்ந்தவன் வரை எந்த வேறுபாடுமற்று இதன் தாக்கத்துக்கு உள்ளாகின்றார்கள். இதையே இயற்கையின் தாக்கமென ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

எண்ணங்களின் பெருக்கத்திலிருந்து மனிதனாகிய ஜீவாத்மா ஓரளவு விடுபட வேண்டுமானால், தனக்குத் தேவையான நல்ல சிறப்பைத்தரும் நல்ல எண்ணங்களுடன் மட்டுமே தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். தேவையற்ற எண்ணங்களில் இருக்கும் பற்றை முற்றுமுழுதாக விலக்கிட முயற்சி செய்யவேண்டும் எண்ணங்களை மணி மாலையாக ஒன்றுடன் ஒன்று கோர்த்துப் பார்ப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்படிக் கோர்த்துப் பார்ப்பதை நிறுத்தாவிட்டால் அந்த எண்ணங்கள் ஒரு சுற்று வட்டத்துக்குள் இணைந்து மனித மனதில் மீண்டும், மீண்டும் பூமியின் சுழற்சிநிலைபோல் சுற்றி வந்து கொண்டேயிருக்கும் பின்பு அவ்வெண்ணங்களை மனித மனதிலிருந்து அகற்றுவதென்பது மாபெரும் கடினமான செயலாகும்.

அதுவும் மனிதனின் வாழ்வோட்டத்துக்கு நல்ல எண்ணங்கள் தேவைப்பட்டாலும், அவ்வெண்ணங்களும் மனிதப் பிறவியின் பயனை அடைவதற்கு பெரும் தடையாகவே அமைந்து விடுகின்றது. எப்படியெனில் எண்ணங்களற்ற நிலையே மனிதனின் உண்மை நிலையாகும். அதனால் அந்தத் தடையிலிருந்து மனிதன் விடுபட வேண்டுமானால், அதற்கும் ஒரு உபாயம் இருக்கின்றது.

அதாவது தனக்குள் பொங்கி வரும் நல்ல எண்ணங்களை வெறும் சாட்சியாக இருந்து பார்த்தலாகும். இதுவும் மனிதனின் ஆன்ம சாதனைக்கான ஒரு படிநிலைதான். நீதிமன்றத்தில் குற்றவாளியைவிட சாட்சிக்குத்தான் அதிமுக்கியத்துவம் கிடைக்கின்றது. அதைப்போல இயற்கையாகிய நீதிமன்றத்தில் மனிதனின் இறை நிலயை உணர விடலாம். தடுக்கும் எண்ணங்களாகிய குற்றவாளிகளுடன் பற்றுவைக்காமல், அவற்றைச் சாட்சியாக மட்டும் பார்க்கின்றபோது, மனிதனாகிய ஜீவாத்மா ஆன்ம விடுதலை பெறுகின்றது.

அந்த ஜீவாத்மாவே இறுதியில் பரமாத்மாவாக மாற்றமடைந்து இறை இராஜ்யத்தில் புகழைப் பெருக்குகின்றது.



**"எண்ணங்களின் பெருக்கத்திலிருந்து மனிதனாகிய ஜீவாத்மா ஓரளவு விடுபட வேண்டுமானால், தனக்குத் தேவையான நல்ல சிறப்பைத் தரும் நல்ல எண்ணங்களுடன் மட்டுமே தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். தேவையற்ற எண் ணங்களில் இருக்கும் பற்றை முற்று முழுதாக விலக்கிட முயற்சி செய்ய வேண்டும்.**

## ஐ.தி. சம்பந்தன் எழுதிய இரண்டு நூல்களின் அறிமுக விழா




ஐ.தி. சம்பந்தன் எழுதிய இரண்டு நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் (31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'தமிழ் அரச ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்: ஒரு வரலாற்றுப் பதிவு' மற்றும் 'சாதனையாளரின் முத்துவிழா மலர்' என்பனவே அந்த இரண்டு நூல்களுமாகும்.

பேராசிரியர் க.தேவராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வரும், வாழ்த்துரைகளை கலாநிதி ஆறு.திருமுருகன், பண்டிதர் க.வேலாயுதபிள்ளை ஆகியோரும் வழங்குவர். நூல் ஆய்வுரைகளை கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், கவிஞர் சோ.பத்மநாதன் தமிழருவி த.சிவகுமார் ஆகியோர் வழங்குவார்கள். ஏற்புரையை நூலாசிரியர் ஐ.தி.சம்பந்தன் வழங்குவார்.

இந்த நிகழ்வின்போது இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் வழங்கும் பண்டார வன்னியன் எனும் வரலாற்று நாடகமும் இடம் பெறவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# ஆளுமை விருத்திக்கான சிறுவர் நாடகங்கள்

■ விவேகன்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்கின்ற வகையில் அவர்களது உளத்திறன் மேம்பாட்டுக்கான செயற்பாடுகள் காத்திரமான வகையில் மேற்கொள்ளப்படவேண்டும். உளத்திறன் மேம்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கான அடிப்படைகளில் சிறுவர் நாடக செயற்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அரங்கச் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்ற மாணவர்களிடையே ஆளுமை மாற்றத்துக்கான அடிப்படைப் பண்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

சிறுவர் நாடகம் எனும் போது ஆடல், பாடல்,விநோதம் விரவிக்காணப்பட வேண்டும் எனக்குறிப்பிடுவர். இத்தகைய பண்புகள் பங்குபற்றுபவர்களிடத்தும், பார்ப்போரிடத்தும், மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இவை கற்பனைத் திறன் விருத்தி. தலைமைத்துவம், படைப்பாக்கத் திறன் என்பவற்றை வளர்த்துக் கொள்ளத் துணைசெய்யும்.

இந்தப் பின்னணியில் மாணவர்களது பங்குபற்றலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க பாடசாலையாக விளங்குகின்றது. தனது 200ஆவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு மாணவர்களது நலனோம்பல் சார்ந்த வகையில் பல்வேறு போட்டிகளை நடத்தி வருகின்றது. அந்தப் பின்னணியில் சிறுவர் நாடக விழாவொன்றை அண்மையில்நடத்தியது.

வட மாகாண ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன்கல்லூரி, புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் , யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகள் பங்குபற்றின.

இந்தப் போட்டிகளுக்கான இணைப்பாளராகக் கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன் செயற்பட்டார்.

விழாவில் முதன்மை விருந்தினராக ஈழத்தின் மூத்த நாடகவியலாளரும் ஈழத்துச் சிறுவர் நாடகத்தின் முன்னோடியுமான கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் கலந்துகொண்டார். போட்டிக்கான பிரதம நடுவராக வலிகாமம் கல்வி வலய ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.கிருபானந்தன், நடுவர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர.தர்மினி, மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன், நேரக் கணிப்பாளராக புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஆற்றுகையாளர் பா.ஜெயரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐந்து நாடகங்களும் ஒவ்வொரு வகையிலும் வித்தியசமானதாக அமைந்திருந்தன. இந்தப் போட்டியில் ஐந்து நாடகங்களிலும் மொத்தமாக 150 மாணவ சிறார்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையும் மூன்றாம் இடத்தை புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலமும் பெற்றுக்கொண்டன.

ஆயினும் கல்லூரியின் 200ஆவது அண்டு நிறைவு விழா நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரியின் நினைவுச் சின்னப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌர விக்கப்படவுள்ளதுடன் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நாடகங்கள் நிறைவு விழாவில் இடம்பெறவுள்ள சிறுவர் அரங்க அளிக்கை நிகழ்வில் இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளின் நோக்கமாக வெற்றி தோல்வி என்பதனைத் தாண்டி பங்குபற்றுகின்ற மாணவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதுடன் அவர்களிடையே ஆளுமை மாற்றத்தையும் ஏற்படுத்திவிடும்.

நாடகப் போட்டிகள் பெரும்பாலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படாமலே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆனால் இந்தப் போட்டிகள் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது











# சிறுகதை நூல் வெளியீடு

மூத்த எழுத்தாளர் ச. அருளானந்தம் எழுதிய எல்லாரும் விசரர்கள்தான் எனும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா சிரேஷ்ட சட்டத்தரணி ஆ. ஜெகசோதி தலைமையில் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை சமூக கற்கை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது நூல் நயவுரையை கவிஞர் கட்டைப்பறிச்சான் க. கனகசிங்கம் நிகழ்த்தினார், நூலாசிரியர் அருளானந்தம் ஏற்புரை வழங்கினார். சமூக கற்கை நிலையத்தின் பணிப்பாளர் ஒ.குலேந்திரன் அங்கு உரையாற்றினார். நூலின் முதல்பிரதியை சிரேஷ்ட சட்டத்தரணி ஆ. ஜெகசோதியிடம் நூலாசிரியர் வழங்கினார். சிறப்புப் பிரதிகளை சட்டத்தரணி திருச்செந்தில்நாதன். [illegible] ஆர். தனபாலசிங்கம் ஆகியோர் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

(40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னவன்

# இசைப் பேரறிஞர் பஞ்சாபிகேசனுக்கு ஒரு சிறந்த புகழாஞ்சலி

இசைக்கும் தனி ரசனையுண்டு. அந்த ரசனைக்கும் தனி ரசிகர் கூட்டமுண்டு. இதனை நிருபிக்கும் வகையிலான நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி சாவகச்சேரியில் இடம்பெற்றது.
சாவகச்சேரி தந்த நாதஸ்வர வித்துவான் கலாநிதி இசைப் பேரறிஞர் முருகப்பாபிள்ளை பஞ்சாபிகேசன் பூவுலகை விட்டுச் சென்றாலும் அவரது புகழ் தென்மராட்சியை மட்டுமல்ல இசை ரசனையுள்ள அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருந்தது. இசை உலகிலிருந்து பிரிந்து விண்ணகம் சென்ற இசைப் பேரறிஞர் மு.பஞ்சாபிகேசனின் ஓராண்டு நிறைவு தினமான அன்றைய தினம் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தென்மராட்சிப் பிரதேச மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட புகழாஞ்சலி நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
அறிவிக்கப்பட்ட நேரத்தில் (பி.ப.5.00 மணிக்கு) சிவன் கோவிலிருந்து இசைப் பேரறிஞரின் திருவுருவப் படம் மங்கல வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டபோது பெருந்திரளான யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இசைப் பேரறிஞரின் ரசிகர்களும் தென்மராட்சிப் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விழா மேடையில் வைக்கப்பட்டிருந்த இசைக் கலைஞரின் திருவுருவப் படத்துக்கு யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
வரவேற்புரையை தென்மராட்சி கலைமன்றத்தின் உப தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் நிகழ்த்தினார். இசை என்பது ரசிகர்களை மகிழ்விக்கும் தன்மை கொண்டது. அந்த வகையில் நாதஸ்வர இசை மூலம் சுமார் 70 வருடங்களாக பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கொண்டுள்ள நாதஸ்வர இசை வள்ளலாக அமரர் மு.பஞ்சாபிகேசன் திகழ்ந்துள்ளார் என்பதை அவருக்கு புகழ் அஞ்சலி வழங்கிய அனைவரும் தமதுரைகளில் குறிப்பிட்டனர். நாதஸ்வரம் என்பது பத்துத் துவாரமிடப்பட்ட ஒரு குழாய். அதனை சரிவரப் பயன்படுத்தி அதனூடாக வரும் இசையால் அனைவரையும் கவரும் தன்மை நாதஸ்வரக் கலைஞர்களுக்கு மட்டுமே உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. அவ்வாறான குழாயிலிருந்து பல்வேறு வகையான ராகங்களை பல்வேறு வடிவங்களில் வழங்கி ரசிகர்களைக் கவர்ந்த நாதஸ்வரக் கலைஞர்களில் மு.பஞ்சாபிகேசனும் ஒருவராவார். அவரும் ஓர் இசைக் குடும்பத்தில் பிறந்தாலும் தனது திறமையை வெளிக் கொணர்ந்ததால் அவரது சந்ததியே அந்தத் துறையில் மிளிர வழிவகுத்துள்ளது எனலாம். அவரது மக்கள், பேரப்பிள்ளைகள் போன்றோரும் நாதஸ்வர இசையினால் இசை உலகுக்கு அரும்பணியாற்றி வருகின்றனர்.
யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற உலக நாடுகளின் நாதஸ்வர தவில் வித்துவான்கள் தமது கச்சேரிகளில் தம்முடன் இணைந்து வாசிக்க அழைக்கும் யாழ்.மாவட்டக் கலைஞர்களில் அமரர் பஞ்சாபிகேசனும் அடங்குவார். நாதஸ்வர, தவில் இசைத் துறையில் பிரபல்யம் மிக்க இந்தியக் கலைஞர்கள் இங்கு வரும் காலங்களில் அமரர் பஞ்சாபிகேசனை தமது குழுவில் இணைத்து இசை வெள்ளம் வடித்தமை அவரது திறமைக்கு கிடைத்த சான்றாகும். இலங்கையில் அமரர் பஞ்சாபிகேசனின் கால் படாத ஆலயங்கள் இல்லையெனக் கூறுமளவுக்கு அவரது இசைஞானம் பரவியிருந்தது. இதன் பயனாக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக் போன்ற இடங்களில் வதியும் இசை ரசிகர்கள் இவரை அழைத்து இவரது இசையை ரசித்துள்ளனர். குடுமிக்கார நாதஸ்வர வித்துவான் மேடை







யேறவுள்ளார் என அறிந்தால் இசை ஞானம் கொண்ட தென்னிலங்கை மக்கள் மடை திறந்த வெள்ளம்போல் அங்கு மண்டபத்தை நிரப்பிக் காணப்படுவர். சிங்கள ரசிகர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கொழும்பில் வருடாந்தம் நடைபெறும் ஆடிவேல் விழாவுக்கு அமரர் பஞ்சாபிகேசன் அழைக்கப்பட்டார். கொழும்பில் பஞ்சாபிகேசனின் இசைக்கச்சேரி நடைபெற்றால் அங்கு பெருமளவில் கூடிநிற்பது சிங்கள மக்கள் என்பதை அங்குள்ள மக்கள் இன்னும் மறக்கமாட்டார்கள். இதன் பயனாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி என்பன அவரது இசைக் கச்சேரிகளைப் பதிவு செய்து ஒலி, ஒளிபரப்பின.
இவ்வாறான, பெருமைமிக்க தென்மராட்சி மண்ணுக்கு பெருமை சேர்த்த இசைவள்ளலின் புகழாஞ்சலி நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு அவரது திருவுருவப் படம் எடுத்து வரப்பட்டபோது கூடி நின்று இசைமழை பொழிந்தமை இவர் மீது இசைக் கலைஞர்கள் கொண்ட அளவிலா பற்றைக் காண்பித்தது.
இந்த நிகழ்வில் நீண்ட காலத்தின் பின்னர் மாவட்டத்தின் பழம்பெரும் நாதஸ்வரக் கலைஞர்களான எம்.பீ.பாலகிருஷ்ணன், ஏ.பாலசுதந்திரன் ஆகியோரின் நாதஸ்வர இசைக்கு தவில் வித்துவான்களான கே.எஸ். ஆர்.புண்ணியமூர்த்தி என்.ஆர்..எஸ்.சுதாகரன் பி.நர்மதன் என்.ஸ்ரீபிரசன்னா ஆகியோர் மேடையில் நிகழ்த்திய நாதாஞ்சலி நிகழ்வு இரண்டு மணி நேரமாக அனைவரின் வாயையும் கட்டி வைத்தன எனலாம். அந்த அளவுக்கு நாதஸ்வர, தவில் இசைகளின் சக்தி அனைவரையும் கட்டிப்போட்டிருந்தது. தற்போது ஆலயங்களில் இவ்வாறான இசைக் கச்சேரிகள் இடம்பெறுவது குறைந்த நிலையில் மேடையில் இடம்பெற்ற நாதாஞ் சலியைக் கேட்டு அனைவரின் காதுகள் குளிர்ந்ததுடன் அவர்களின் கை கால்களு தாளம் போட்டன. அருமையான ஓர் இசை கச்சேரியைச் கேட்கக்கூடியதாக இருந்தது. அமரர் பஞ்சாபிகேசன் பல்வேறு ராகங்களை வாசித்தபோதிலும் அவரது சினிமாப் பாட இசைக்கு மயங்காதவர்கள் எவருமில்லை எனலாம். எந்தவொரு சினிமாப் பாடல இருந்தாலும் ரசிகர்களின் வேண்டுகோளு கிணங்க வாசித்து அவர்களை மகிழ்வி பெருமை அ வரையே சாரும். மேடைகள அவருக்கு வழங்கப்படும் இரண்டு ம நேரக் கச்சேரியில் சுமார் அரை மணிநே சினிமாப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொ தமை அவரது இசையின் உள்ளார்ந்த மையை வெளிக்கொணர்வதாக அமை ருக்கும். அவரது 60 வருட இசை வாழ்க் யில் அவர் பெற்ற பட்டங்கள், பதக்கங் இதுவரை எந்தவொரு இசைக்கலைஞ பெற்றிருக்கமாட்டார்கள் என்பது திடம நம்பிக்கை. மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயம் தொ கம் யாழ்.பல்கலைக்கழகம் வரை அவரது இசையி மதிப்பளித்து கௌரவப் பட்டங்களை வழங்கியி தமை அவர் இசை உலகுக்கு ஆற்றிய மகத்த சேவைக்கு கிடைத்த பரிசுகளாகும். நிகழ்வில் யாழ் கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசி கலாநிதி நா.சண்முகலிங்கன் அமரர் பஞ்சாபிகேச நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். தென்மராட்சி இல அணியின் தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரன் கவித சலி மூலம் தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இளைய சமூகமும்

# தன்னம்பிக்கையற்ற நிலையும்

சாமுவேல் டேவிட்ராஜ்



வாழ்க்கையின் வசந்தகாலம் என்பது இளமைப் பருவமேயாகும். 15 முதல் 30 வயதிற்கு இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும். 30 வயது பூர்த்தியடைந்தவுடன் இயல்பாகவே தனது இளைய அங்கத்துவத்தை இழந்தவராவர். இளைஞர்கள், யுவதிகள் என்றுமே ஒரு நாட்டின் அல்லது ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக மதிக்கப்படுகின்றனர். எனவே இளைய தலைமுறையின்ரே புதிய பண்பாட்டு மலர்ச்சிக்கும் புதிய சமூகம் சார்ந்த கருத்துநிலை மாற்றத்திற்கும் புதிய சமூக அசைவியக்கத்திற்கும் முதற்படி முகம் கொடுக்கும் அமைப்பு இதுவாகும். இளையோர் சமூகமதில் புதிய மாற்றங்கள், இழப்புக்கள், தோல்விகள், அறியாமைகள், அர்த்தங்கள் புரியாத புதிர்களாக உணரப்படுகின்றமை, அதீத உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றமை போன்ற சவால்கள் அடிக்கடி ஏற்படுவது வழக்கமேயாகும். ஆனால் அவ்வாறானதொரு ஆபத்து விளிம்பிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது அவசியமாகும். தன்னம்பிக்கை என்பது தனது சுயத்தில் காணப்படும் திறன்களின் ஓர் உறுதிப்பாடாகும்.

## ஒரு நம்பிக்கையின் ஊற்று

பொதுவாக ஒரு சமூக அமைப்பில் ஓர் அங்கத்தவராக விளங்கும் மனிதனுடைய இருப்பு நிலைக்கும் இயங்கு நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஒரு குடும்ப அலகின் சூழலே இன்றியமையாததாகும். இந்தக் குடும்ப அலகு எந்தளவுக்குப் பலமாக செயற்படுகின்றதோ அந்த அளவுக்கு ஒவ்வொரு தனிமனிதனது எண்ணங்கள் நம்பிக்கைகள் அக உணர்வுகள் ஆழமாக வேரூன்றி செழிப்படைகின்றது. இறையருள் சந்தோசம், மகிழ்ச்சி, பற்றுறுதி, மனஅமைதி, விட்டுக் கொடுப்பு, சிறந்த தொடர்பாடல் போன்றவற்றின் மலர்ச்சியின் பின்னணியில் தன்னம்பிக்கை வலிமை பெறுகின்றது.

ஆபிரகாம் மாஸ்லோ எனும் உளவியலாளரின் கருத்தின் அடிப்படையில் ஒரு தனிமனிதனின் தேவைகளான உடலியல், உளவியல் தற்திருப்தித் தேவைகள் என்பன திருப்தியடையாத நிறைவேற்றப்படாத நிலையில் தன்னம்பிக்கையற்ற ஒரு நிலை சமூகத்தில் தோற்றுவிக்கப்படுகின்றது. உடலியல் தேவைகளில் பசி, தாகம், உணர்ச்சித் தேவைகள், போக்குவரத்து, சுதந்திரத்தன்மை, தொடர்பாடல் சுதந்திரம் போன்ற தேவைகள் உள்ளடக்கப்படுகின்றன.

ஒரு சமூகத்தில் கணிசமான அளவு இத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிறுவனம் குடும்ப அலகாகும். இத்தேவைகளில் ஒன்றேனும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அடுத்த பருவ நிலைக்குச் செல்லும்போது தன்னம்பிக்கையற்ற நிலை உருவாக்கப்படுகின்றது. எனவே ஒரு குடும்ப அலகில் பிள்ளையினது அரவணைப்புத்தேவை. மிக உன்னதமாக மதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமாகும். அன்பு, அரவணைப்பு, உடலியல் தேவைகள் நிவர்த்தி செய்யப்படாதபோது இளையோர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்கமுடியாத திராணியற்ற உயிரியாக்கப்படுகின்றனர். இதன் பின்னணியில் பலவிதமான நெருக்கீடுகளும், மனவடுக்களும், ஆளுமைக்குலைவும், சலிப்புத்தன்மையும், நடத்தைக் குலைவும், வெறுப்புணர்வும் தோற்றுவிக்கப்படுவதோடு பலவீனமான மனஅழுத்த உணர்வுகள் ஆழ்மனதில் ஆழ ஊடுருவிச் செல்வதனால் தற்கால சமூகத்தில் தற்கொலைச்சாவுகள் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

நம்பிக்கையின்மை, மனச்சுமை, மன அழுத்தங்கள், மனச்சோர்வுகள், மனவடுக்கள் என்பன உளநோய்களை நிரந்தரமாகவே ஏற்படுத்தி வருகின்றதை இன்று மருத்துவச் சிகிச்சை, உளச் சிகிச்சை ஆய்வுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே இளையோர் சமூகம் தமது தன்னம்பிக்கையை வலுப்படுத்தவும் வளர்ச்சிப்படுத்தவும் குடும்ப அலகில் பெற்றோர்கள், பிள்ளைகளை மதித்தல், எதிர்பார்ப்புக்களை அறிந்து கொள்ளுதல், தேவைகளை நிறைவேற்றுதல், ஆன்மிகத்தை வழி நடத்துதல், கலையார்வத்தை வளர்க்க உதவுதல் விளையாட்டுத்துறையின் மகத்துவத்தையும், தேவையையும் உணர்த்துதல், வெற்றி தோல்விகளை மதிக்கும் மனப்பான்மையை வளர்த்தல் போன்ற அம்சங்களில் அக்கறை கொண்டு வழிநடத்துவதனூடாக தன்னம்பிக்கை உணர்வுகளை குடும்ப சூழலில் உருவாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

> உலகை ஆண்டு அனுபவிக்கும் பொறுப்பு மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் நான் யார்? நான் எதற்காக உருவாக் கப்பட்டேன்? எனது பொறுப்புகள் என்ன? படைப்பின் இரகசியம் என்ன? எனக்கு கொடுக்கப்பட்ட சலுகைகளை சரிவர பயன்படுத்துகின்றேனா? என்ற வாழ்க்கையின் பெரிதான அர்த்தங் களை இளைய சமூகத்தினருக்கு கற்றுக் கொடுப்பது மிக அவசர அவசியமாகும்.

## ஆன்மிகத்தில் தன்னம்பிக்கை

அழகானதொரு உலகை உருவாக்கிய கடவுள் மனிதனைப் படைப்பின் சிகரமாகத் தெரிந்து கொண்டார். உலகை ஆண்டு அனுபவிக்கும் பொறுப்பு மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் நான் யார்? நான் எதற்காக உருவாக்கப்பட்டேன்? எனது பொறுப்புகள் என்ன? படைப்பின் இரகசியம் என்ன? எனக்கு கொடுக்கப்பட்ட சலுகைகளைச் சரிவரப் பயன்படுத்துகின்றேனா? என்ற வாழ்க்கையின் பெரிதான அர்த்தங்களை இளைய சமூகத்தினருக்குக் கற்றுக் கொடுப்பது மிக அவசர அவசியமாகும். பிள்ளைகளை ஆன்மிக காரியங்களில் ஈடுபடுத்தும்போது அவர்களது உள்ளமதில் ஆழ்ந்த அமைதியையும், ஆறுதலையும் ஏற்படுத்த முடியும். மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவழிபாடு செய்யும் போது தன்னம்பிக்கை வாழ்வின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஊடுருவிச் செல்லும் என்பதில் ஐய மில்லை. இன்றைய அவசரமான தும், ஆடம்பரமானதுமான உலகப் போக்குகளில் ஆன்மிக விடயங்கள் அருகி வருவதைக் காண்கின்றோம். எனவே பெற்றோரர் தாம் ஆன்மிக வழியில் நடப் பதுடன் பிள்ளைச் செல்வங்களையும் ஈடுபடுத்துவதும் மிக அவசியமாகும். ஆன்மிக அறிவு சார்ந்த விழுமியாங் களைக் கற்றுக் கொடுப்பதையும் செயற்படுத்துவதையும் தவற விடுகின்றோம். சமயம் சார்ந்த நிறுவனங்கள், கல்விச் சமூகங்கள், பொதுச் சேவை அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள், குடும்ப அலகுகள் போன்ற நிறுவனங்களே இப் பின்னடைவுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள். இளையோர் சமூகத்தினருக்கு ஆன்மிக இறைஞான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் இன்று கிடைப்பதில்லை. கல்விச்சுமைகள், ஆடம்பர விடயங்கள், சினிமா உணர்வுகள், உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதேயாகும். இதனால் ஆன்மிக அறிவு வழிகளிலிருந்து விலகியிருக்கும் நிலை அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. ஒரு மனிதவாழ்வு ஆன்மிக நம்பிக்கை நிறைந்த அத்திபாரத்தில் கட்டியெழுப்பப்படல் வேண்டும். எனவேதான் அது தூய்மை நிறைந்த, அர்த்தமுள்ள, தன்னம்பிக்கையுடைய, ஆன்மிக விழுமியங்கள் நிறைந்த ஒரு வாழ்வு நிலையை தோற்றுவிக்கும் என்பதில் உண்மையுண்டு.

## கல்வியியல் தன்னம்பிக்கை

கல்வியினால் ஓர் உள்ளம் பண்படுத்தப்பட்டு, புதிதாக வடிவமைக்கப்பட்டு, அதன் விழுமியங்களும், நற்பண்புகளும் நிறைந்த, தன்னம்பிக்கையுடைய சமூகம் கட்டியெழுப்பப்படல் வேண்டும். நல்ல ஆன்மிகக் கல்வியானது, நல் மனப்பாங்குகளையும், ஆளுமை விருத்திகளையும், கருணை கொண்ட உள்ளத்தையும், சேவை மனப்பாங்குடைய சமூக ஆதரவாளர்களையும் உருவாக்குகின்றது. கல்வியினால் ஒரு மனிதன் மீண்டும் பிறக்கின்றான். அறிவு, ஞானம், நம்பிக்கை என்பன தன்னம்பிக்கையின் ஆணிவேர் களாகும்.

இன்றைய கல்விச்சமூகம் சற்று வேறுபட்ட பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய கல்வி தனி மனித நலன்களைக் கருத்தில் கொண்டு வளர்ச்சிப்படுத்துகின்றது. அதாவது சுயநலக் கல்வி முறையாகும். கல்வி கற்ற ஒருவர் சமூக நல மேம்பாட்டுக்காக தனது முழு ஒத்துழைப்புக்களைக் கொடுக்கின்றாரா? என்றால் இல்லை. இதன் அடிப்படையில் நல்ல பாசம், அன்பு, விட்டுக்கொடுப்பு, மரியாதை, சேவை மனப்பாங்கு, கருணை உள்ளம் போன்ற கல்வி விழுமியங்கள் இன்று எமது கல்வியில் கட்டியெழுப்பப்படுகின்றதா? என்பதில் சந்தேகம் எழுகின்றது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிக்க வேண்டிய சிறந்த நூல்

தேவிபரமலிங்கம்



மூத்தபடைப்பாளி மா.பாலசிங்கம் (செல்லக் கண்ணு) எழுதிய 'மா.பா.சி. கேட்டவை' என்னும் 475 பக்கங் களைக் கொண்ட பெரிய தொகுப்பு நூலொன்றைத் தபாலில், கொழும்பில் இருந்து அவரே எனக்கு அனுப்பி வைத்து, உதயன் பத்திரிகையில் அது பற்றிய பார்வையை எழுதவும் கேட்டுக்கொண்டார்.

475, பக்கங்களைத் தவிர பதிப்புரை 11 பக் கங்கள், முன்னுரை 04 பக்கங்கள், என்னுரை 04 பக்கங்கள், முகப்பு, நூல் பதிப்பு, விவரங்கள், சமர்ப்பணம், பொருளடக்கம்03 பக்கங்கள், பெயர் சுட்டி 13 பக்கங்கள், எல்லாமாக 5, 14 பக்கங்களில் அமைந் துள்ளது நூல்.

தனியாக 13 பக்கங்களில் சேர்க்கப்பட்டுள்ள பெயர்ச்சுட்டியில் நூலில் அமைந்துள்ள 70 நிகழ்வுகளிலும் கையாளப்பட்டிருக்கும் பெயர்கள் பட்டியலாகத் தரப்பட்டுள்ளது. இது ஒரு புதிய முயற்சியாகவும் அமைந் துள்ளது. அகர வரிசையில் பெயர்கள் பிரசுரமாகியுள்ள பக்கங்களையும் குறிப்பிட்டுள்ளமை தம்மைத் தேடுபவர்களுக்கு இலகுபடுத்தப்பட்டதாக வும் அமைந்தது.


பதிப்புரையில் பேராசிரியர் ந.இரவீந்திரன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நூல் மட்டத்துடன் நின்று விடாமல் பத்திரிகை ஊடகங்களிலும் மீளவும் அச்சாக வேண்டியதாகப்படுகிறது.

முற்போக்குத் தளத்தில் இருந்து, எஸ்.பொன்னுத்துரை (எஸ்.போ) விலகிச் சென்றமையை எடுகோளாக வைத்து, இடதுசாரிகளின் பிறழ்வுகளுக்குக் காரணங்களை இரை மீட்டியுள்ளதுடன் அதனைச் சீர்செய்ய என்ன மார்க்கமென்பதையும் சுட்டிக்காட்டி இருப்பது நூலின் கனதியைக் கூட்டி யுள்ளதாகக் கருதலாம்.

நூலாசிரியர் பாலசிங்கம் அறுபதுகளில் சிறுகதை படைக்க வந்தவர். பின்னாடி குறுநாவல்; நெடுநாவல்களும் எழுதிக் கொண்டிருந்தார். 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு சிருஷ்டி இலக்கியப்பாதையை மாற்றி, ஆக்க இலக்கியப் பணியில் தகவல்களைக் கட்டுரைகளாக்குவதில் ஈடுபட்டிருந் தார். இது பிடிக்காமல் ஒருசமயம் அதனை விட்டு சிருஷ்டிப் படைப்புக்களை மேற்கொள்ளுமாறு அவருக்கு இறுக்கிக் கதைத்தும் இருந்தேன்.

மூத்த படைப்பாளியாகத் திகழ்ந்த மா.பாலசிங்கம் மா.பா.சியாகக் குறுகி பிரயோசனம் இல்லாத குறிப்புக்களை எழுதிக் காலங்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறார் என்னும் என்னுடைய எண்ணத்தை பதிப்புரையில் பேராசிரியர் ந.இரவீந்திரனும், முன்னுரையில் முன்னாள் தினக்குரல் ஆசிரியர் வீ.தனபாலசிங்கமும், மா.பாலசிங்கம் என்னுரையிலும் எழுதியுள்ளனர். கருத்துகள் மட்டுமன்றி 70 நிகழ்வுகளை 475 பக்கங்களில் சுமந்துள்ள தொகுப்புக்கட்டுரைகளும் சேர்ந்து புரட்டிப் போட்டு விட்டன.

ஆசிரியத் தலையங்கங்களும் நூலுருப் பெற்றுள்ள காலம். ஊடகங்களில் வெளியாகும் எந்தத் தகவல்களும் புறம் தள்ளப்படாமல் நூலாக்கம் பெற வேண்டிய கடப்பாட்டை, வாசிப்பு விகிதம் குறைந்து தமிழ்நூல்கள் விற்பனை போகாமல் தேங்கி யுள்ள காலங்களும் தலை கீழாக மாற்ற நேரங்கள் அதிகமாகாது.




நாளொரு மேனியும், பொழு தொரு வண்ண முமாக தமி ழில் தினம், வாரம், மாதந்தோறும் எல்லாம்பெருந்தொகையாக வெளியிடப்பட் டுக்கொண்டிருக்கும் நூல்கள் அதனையே கட்டியம் கூறுகின்றன.

இன்றைய நிகழ்வு நாளைய வரலாறு, காலத்தின் கண்ணாடி இலக்கியம் போன்ற வரைவு இலக்கணங் களாக சிரமேற்று, இத் தகு புதிய படைப்பை தமிழுக்கு வழங்கி யுள்ள புதிய பண்பாட் டுத் தளம் கவனத்தைப் பெறுகின்றது.

ரூபா 900 விலை குறிப் பிட்டுள்ள இந்த நூலை ஒவ்வொருவரும் பெற்று வாசித்து அறிதலுடன் பேணிவைக்க வேண் டிய ஒன்றாகவும் காணப் படுகிற தென்றால் அதில் மிகையில்லை.















## "தொட்டு விடும் தூரத்தில்...." கவிதை நூல் வெளியீட்டு விழா

இணுவையூர் சக்திதாசன் எழுதிய 'தொட்டுவிடும் தூரத்தில்....' கவிதை நூல் வெளியீட்டு விழா, அண்மையில் வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவில் வவுனியா கலாசார உத்தியோகத்தர் என். நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தலைமை விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக அரச செயலர் தி.திரேஸ்குமார் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதுடன் "தொட்டு விடும் தூரத்தில்...." கவிதை நூலை வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை வவுனியா அறிவாலயம் புத்தகசாலை உரிமையாளர் ஜெ.கோபிநந்தன் பெற்றுக்கொண்டார். வரவேற்புரையை செல்வி ஜெசிதா ஆனந்தமூர்த்தி நிகழ்த்தினார். அறிமுகவுரையை வே.முல்லை தீபன் நிகழ்த்தினார். நயப்புரை முல்லைத்தீவு மேலதிக காணிப்பதி வாளர் ஜெகதீசன்.கோபிநாத் வழங்கினார். கவியுரையை கலைஞர் மாணிக்கம் ஜெகனும், ஏற்புரையை நூலாசிரியர் இணுவையூர் சக்திதாசனும் வழங்கினார்கள். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகத் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா, வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் வித்தியாரத்னா நா.பார்த்தீபன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா, ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இளைய சமூகமும் தன்னம்பிக்கையற்ற நிலையும்

22 ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்வியில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கின்றது. பல்கலைக்கழக உயர் கல்வி நடவடிக்கைகள் உயர்வாக நடைபெறுகின்றது. ஆனால், இன்று சமூக மனப்பாங்குகள் உடைய நற்பிரசைகள் உருவாக்கப்படுகின்றார்களா? என்பதில் திருப்தியற்றநிலை நிலவுகின்றது. இன்று கல்வியியலாளர்கள், கல்வி மேதைகள், கல்வி ஆய்வுகள் யாவும் தமது முன்மொழிவுகளில் கல்வி மனப்பாங்குடைய சமூகமயப்படுத்தப்பட்ட பிள்ளை இன்னும் உருவாக்கப்படவில்லை என்றும், நல்ல மனப்பாங்கு வளர்ச்சி பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் கருத்துக்கள் அடிப்படையில் உண்மை நிலையை நோக்கும்போது எமது சமூகத்தில் இடம்பெறுகின்றசமூகப்பிறழ்வுகளை இணைத்து நோக்கமுடியும். இதனால் இன்று இளை யோர் சமூகம் தன்னம்பிக்கையை இழந்து நடமாடும் நிலை உருவாகி வருகின்றது. கல்வியினால் தன் னம்பிக்கை நிறைந்த ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது இந்தக் கால சமூகத் தேவையாக உணரப் படுகின்றது.

**விழுமியத்தில் தன்னம்பிக்கை**

ஒரு பண்பாட்டுக்குழுவினரது வாழ்க்கையை நெறிப்படுத்த எவை எவையெல்லாம் அவசியமானவை எனக்கருதப்படுகின்றதோ அவையெல்லாம் அந்தக் குழுவினரது பண்பாட்டு விழுமியங்களாகக் கொள்ளப்படும். இவை கருத்தியல் சார்ந்தவை, பண்பாட்டுக்கு பண்பாடு வேறுபடக் கூடயவை, தமிழர் பண்பாட்டில் கற்பு, ஊழ், தர்மம், வாய்மை, நம்பிக்கைகள் முதலிய அம்சங்களும், கருத்தியல்களும் தமிழர் பண்பாட்டை நெறிப்படுத்தும் விழுமியங்களாகக் காணப்படுகின்றன.

தமிழர் பண்பாட்டின் கருத்து நிலைப்பட்ட அம் சங்களில் அறிவு சார்ந்த நிலையில் விழுமியங்கள், நெறிமுறைகள், குடி வழக்குகள், வழக்கடிபாடுகள், சட்டம், அளிப்புக்கள் என் பன வாழ்வு நிலையை நெறிப்படுத்தும் அம்சங்களாக அமைகின்றன. எமது தமிழ்ச் சமூகத்தின், உயர்வான நற்பெருமைகள், நற்பழக்கங்கள், விதிமுறைகள், நம்பிக்கைகள், கற்புத்தவறாமை, ஊழ், தர்மம், வாய்மை போன்ற விழுமிய அம்சங்களைப் போதித்து நல்வழிப்படுத்தும் மூத்தோர் சமூகத்தை (தாத்தா, பூட்டி, பாட்டி,அப்பு) இழந்துள்ள இளையோர் சமூகம் தன்னம்பிக்கையை இழந்துபோகும் நிலை உருவாக்கியுள்ளது. மூத்தோர் சமூகம் இன்று வயோதிப சிறைச் சாலைகளில் வாடுகின்றனர். இதுவும் ஒரு விழு மியக் குறைவாகவே நோக்க முடியும்.

மாற்றம் காணும் உலக அடிப்படையில் இளையோர் சமூகம் புதிய பண்பாட்டு, கலாசார, கருத்தியல் நிலைகளை ஏற்றுக்கொள்வதில் பெரிய சவால்களைச் சந்தித்து வருகின்றனர். அதாவது புதிய தொடர்பாடல், தொழில்நுட்பம், இன்று இளையோர் சமூகத்தை அசைத்து விடுகின்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.



தேடலற்ற தன்மை, புதிய கலாசார உருவாக்கம், பணவிரயம், நேர விரயம், ஆபா சப் படங்களைப் பார்த்தல், மற்றவர்களது சுய கௌரவங்களை இழக்கச் செய்தல், ஆன்மிகமற்ற போக்கு, விழுமியங் களில் இருந்து விலகி நடத்தல், நல்லமனப்பான்மையைக் கடைப்பிடிக்காமை, வெறுப்புணர்வுகள், நம்பிக்கை இன்மை, சமூகப் பிறழ்வுகள் என்பன தன்னம்பிக்கையை இழக்கச் செய் கின்றன. புதிய பண்பாட்டு விழுமியங்களை இணைத்து வாழ் கின்ற திறன்களை எமது சமூக விழுமியங்களிலி ருந்து பெற்று அவற்றை மதித்து நல்ல மனப்பாங்கை வளர்த்து, மூத்தோர்களை கனப்படுத்தி அவர்தம் வழியில் எமக்கே உரித்தான பண்பாட்டு, கலாசார விழுமியங்களைக் கடைப்பிடித்து இளையோர் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தி தன்னம்பிக்கையை ஏற் படுத்த முடியும் என்பதில் உண்மை யுண்டு.

**தோல்விகளும் தன்னம்பிக்கையும்**

இளையோர் சமூகத்தினரிடையே அடிக்கடி ஏற்படும் நிரந்தரமற்ற, சிறிய சிறிய தோல்விகள் தன்னம் பிக்கையற்ற உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. கல்வி, காதல், பொருளாதாரம், உயர்ந்த எதிர்பார்ப்புக்கள், இலக்குகள், நம்பிக்கைகள் போன்ற தேவைகள் நிறைவேற்றப்படாமையினால் இளையோர் சமூகத்தினரிடையே தன்னம்பிக்கையற்ற மன உணர்வுகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

றொபர்ட் எச்.ஸ்குளர் என்ற அறிஞர் தோல்வி யைப்பற்றி, பின்வருமாறு குறிப்பிடுகின்றார். தோல்வியைப் பற்றி அஞ்ச வேண் டிய தேவையே இல்லை. நீங் கள் விரும்பு கின்ற ஒரு நபராக உங்களால் ஆக முடி யும். தோல்வி என்றால் நீங்கள் எதையுமே சாதித்துவிட வில்லை என்று அர்த்தமாகாது. நீங்கள் எதையோ கற்றுக் கொண்டீர்கள் என்பது அதன் பொருள். இன்னுமோர் வகையில் அவர் குறிப்பிடுகையில், அது பின்வருமாறு அமை யும். தோல்வி என்றால் நீங்கள் உங்கள் வாழ்வை வீணாக்கி விட்டீர்கள் என்ற அர்த்த மாகாது. மீண்டும் புதிதாக வாழ்வைத் தொடங்க வேண்டுமென்பதற்கான காரணத்தைக் கண்டு கொண்டீர்கள் என்பது அதன் பொருள் என தனது கருத்தில் தன்னம்பிக்கை உணர்வுகளை மிக அழகாக வெளிப் படுத்தியுள்ளார்.

தோல்விகள் என்றும் நிரந்தரமானவையல்ல, தோல்விகள் என்றுமே ஒரு வெற்றியின் அத்திபாரமாக அமையும் என்பதை இளையோர் சமூ கத்துக்குப் பாடசாலை வழிகாட்டல், சமூக வழிகாட்டல், ஆன்மிக வழிகாட்டல், அனுபவ வழிகாட்டல்களினூடாக பல ஆலோசனைகளை வழங்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் தோல்வி யல்ல, வாழ்க்கையில் கவனவீனத் தால் ஏற்பட்ட ஒரு சிறு காரியமே நிறைவேற்றப் படவில்லை. ஆனால், அதுவும் நிரந்தர மற்றது என்பதை எடுத் துரைத்தல் மிக அவசர அவசியமாகும். தோல்விகளைக் கண்டு பயம், வெறுப்பு, மனவடு, விரக்தி, சோர்வு, இழப்பு, அரவணைப் பின்மை, ஆலோசனைகள் இன் மையினால் இன்று எமது இளை யோர் சமூகம், தம்மைமாய்த்து கொள்ளும் அளவுக்கு தம்மை வழி நடத்திக்கொள்கின்றனர் இது தன்னம் பிக்கையற்ற நிலையேயாகும். எனவே தோல்விகள் நிரந்தரமா னவையல்ல. அது நனைந்த உடைக் குச் சமனாகும். காற்றும், வெயிலும் உடையில்படும் போது அது காய்ந்து உலர்ந்து போகும். அதேபோல தோல்விகள் எப்போதும் வேறு அனுபவங்களும், சந்தோசங்களும் எம்மை ஆட்கொள்ளும்போது அது ஓடி மறைந்து விடும்.

எனவே, எமது யாழ்ப்பாண இளையோர் சமூகத்துக்கு இன்று தன்னம்பிக்கையில் விழிப் புணர்வுடைய பல ஆலோசனைகளும், பல வழிகாட் டல்களும், பல வழி நடத்துதல்களும் வழங்கப் பட வேண்டும். இளையோர் சமூகத்தின் உணர்வுகளை மதிப்போடு ஏற்றுக் கொண்டு, அவர் களை நல்வழிப்படுத்தி, கௌரவப் படுத்தி, நல்லிணக்கத்தோடு, தன்னம்பிக்கை யைக் கொடுத்து, வளமுள்ள சமூகத்தை உருவாக்க உழைப்போம்.

கட்டுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வரலாற்றுத்துறை ஆசிரியர்.

# மக்கள் களரியின் 'வெண்கட்டி வட்டம்' நாடக ஆற்றுகை

அ.சாந்தன்

மக்கள்களரிநாடகக் குழுவினர் நமது மூத்த நாடகக் கலைஞர் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழி பெயர்ப்பான வெண்கட்டி வட்டம் என்ற நாடகத்தை தமிழ், சிங்களக் கலைஞர்கள் இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் ஆற்றுகை செய்யவுள்ளனர்.

மக்கள் களரி ஏற்கனவே கூடார அரங்கின் மூலம் யாழ்ப்பாணப் பார்வையாளர்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள். அந்த வகையில் மேற்படி வெண்கட்டி வட்டம் என்ற நாடகம் இந்த மாதம் 22 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

நாடகத்தைப் பிரபல நாடக் கலைஞர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் க.ரதிதரன் ஆகியோர் இணைந்து இயக்கியிருக்கிறார்கள். இந்த நாடகம் எல்லாப் பார்வையாளரும், மாணவர்களும் கண்டுகளிக்கக் கூடியது. குறிப்பாக நாடகத் துறை சார்ந்தோர் பேர்டோல்ட் பிறெக்ட்டின் அரங்கை விளங்கிக் கொள்ள இது உதவும். பிரபல நாடக இயக்குநர் பராக்கிரம நிரியெல்லவும் மக்கள் களரி குழுவினரும் கடந்த இரண்டு மாதங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து ஈடுபட்டு வருகிறார்கள். அது வெண்கட்டி வட்டம் என்ற பெயரால் அறியப்படுகிறது. இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற இலங்கையின் அனுபவமிக்க ஆளுமையான கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் மொழிபெயர்த்த, உலகப் பிரசித்திபெற்ற ஜேர்மன் நாடக ஆசிரியரான பேர்டோல்ட் பிறெக்ட்டின் 'தகோக்கேசியன் சோர்க் சேர்கள்' எனும் நாடகமாகும். மக்கள் களரியின் நிறுவகர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் நாடகத் தயாரிப்பாளர் க.இரதிதரன் ஆகியோர் மூன்று களப்பயிசிகளை நடத்தி இந்தத் தயாரிப்புக்கு தேவையான நடிகர், நடிகையரை தெரிவுசெய்தார்கள்.

ஐக்கிய நாடுகளின் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாசார அமைப்பினது, கலாசார மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் International Fund For Promotion of cultures of UNESCO செயற்றிட்டத்திற்கிணங்க மக்கள் களரி முன்னெடுக்கும் இந்த நாடகம் யாழ்ப்பாணம், கொழும்பு, மாத்தறை, கிளிநொச்சி, வவுனியா, ஹற்றன், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அரங்கேற்றப்படும். இந்த நாடகம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் நாடக அரங்கில் முதல் முதலில் அரங்கேறுகிறது. அதன் பின்25 ஆம் திகதி பி.ப 3 மணிக்கும் இரவு 7 மணிக்கும் கொழும்பு, அழகியற் கற்கைகளுக்கான பல்கலைக்கழகத்திலும், 27ஆம் திகதி மாத்தறை, றுகுணு பல்கலைக்கழகத்திலும், வெண்கட்டி வட்டம் அரங்கேற்றப்பட விருக்கிறது.

கே.சத்தியசீலன், அஜந்தன் சாந்தகுமார் , எஸ்.நித்திக்கா, கே.சாரங்கன்சர்மா, திலினி ரிமேசா, எஸ்.கோவற்சன், கே.கௌறீசன், சரத்பானகல, செல்வராஜ் லீலாவதி, சுமுது மல்லவாராச்சி, என் பிரபு, எம்.சிவரட்ணம், எஸ்.மகாலிங்கம், எம்.குமரசிவம், இநோக்காலங்காபுர, தியாகராசா சிவநேசன், றொனிக்கா சமாளின், அரோச தரங்கனி, இராசையா லோகானந்தன், வீ.றொபின்சன், எஸ். தேவராஜ், ஆர்.தர்சிக்கா, எஸ்.உமாகுலன், எஸ்.விதுசன், டபிள்யூ. சௌமி, மதிதீரா உதிசானி, ஆர்.சந்தோஷ் ஆகியோர் இந்த நாடகத்தில் பாத்திரமேற்று நடிக்கிறார்கள். பாலித்த அபேலா மற்றும் செல்வராஜ் லீலாவதி ஆகியோர் ஒப்பனை, சிவனேசன் அரங்க விதானிப்பு, சுவீனிதா பெறாரா ஆடை வடிவமைப்பு, கே.சத்தியசீலன் பிற்புற காட்சி அமைப்பு மற்றும் நாடக உபகரணங்கள், இராசையா லோகாநந்தன் இணை இயக்குநர் பணிகளைக் கவனிக்கின்றனர். இந்த நாடகத்தை மக்கள் களரி கலாசார மண்டபம் தயாரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவிகளுக்கு எப்பொழுதும் வேலைதான். அதனால் அவர்கள் வேலையை எளிதாகவும், விரைவாகவும் செய்து முடிக்க இங்கே சில குறிப்புகள்.

- தேங்காயை உடைத்தவுடன் கழுவி குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் அதன் மேல் ஏற்படும் பிசுபிசுப்பு ஏற்படாது.
- காய்கறிகள் வாங்கும்போது கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். புடலங்காய் கசப்பாக இருந்தால் அவை பாம்பு ஏறிய காய் என்பார்கள். ஆகவே சிறிது கிள்ளி சுவைத்துப் பார்த்து வாங்க வேண்டும்.
- புளியை அவ்வப்போது கரைத்துக் கொண்டிருப்போம். இதனால் மீதம் உள்ள புளி வீணாகும். இதனைத் தவிர்க்க புளி பேஸ்ட் தயார் செய்து வைத்துக் கொள்ளலாம்.
- உள்ளியை அவ்வப்போது உரித்துக் கொண்டிருந்தால் நேரம் வீணாகும். ஆகையால் உள்ளியைத் தண்ணீரில் ஊற வைத்து எடுத்தால் எளிதில் உரிந்து வந்து விடும்.

## குடும்பத் தலைவிகளுக்கான சமையல் குறிப்புகள்



- பலகாரம் செய்த பிறகு மீதமாகும் சுட்ட எண்ணெயில் வாழைக்காய், கருணைக் கிழங்கு வறுவல் செய்தால் சுவை மிகுதியாக இருக்கும்.
- பாகற்காயில் உள்ள கசப்புப் போக சிறிது உப்புச் சேர்த்துப் பிசைந்து 5 நிமிடம் வைத்துவிட்டுப் பிறகு கழுவி விட்டு சமைத்தால் கசப்புத் தன்மை குறைவாக இருக்கும்.
- வாழைக்காய் நறுக்கும் போது கறையாகும். இதனைத் தடுக்க சிறிது எண்ணெய் பூசிக்கொண்டால் கறை ஏற்படாது.
- வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு காலையில் நேரம் கிடைப்பதில்லை. இதனால் கிழங்கு போன்றவற்றை முதல் நாள் இரவே வேகவைத்துக் கொள்ளலாம்.
- முள்ளங்கி சமைக்கும்போது லேசாக வதக்கி சமைத்தால், எளிதில் சளி பிடிக்காது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 500 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 700 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | – | 650 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 400 | 300 | – |
| ஒரா | 400 | 400 | – | – | 300 | – | 370 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 150 | 350 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 120 | 40 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 140 | 120 | 100 | 100 | – | 70 |
| கரட் | 250 | 220 | 180 | 180 | 160 | 200 | – | 140 |
| மரவள்ளி | 120 | 100 | 100 | 80 | 90 | 100 | – | 50 |
| பயிற்றை | 140 | 120 | 160 | 160 | 120 | 80 | – | 80 |
| பாகல் | 180 | 200 | 280 | 240 | 200 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 200 | 120 | 140 | – | 120 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 100 | 120 | – | 100 |
| பூசணி | 200 | 130 | 140 | 150 | 70–80 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 180 | 180 | 160 | 160 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 140 | 120 | 80 | – | 50 |
| கீரை | 25 | 30 | 30 | 20 | 15 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 60 | 60 | – | 60 |
| கோவா | 160 | 160 | 80 | 160 | 40 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 160 | 120 | 80 | 80 | – | 80 |
| போஞ்சி | 180 | 160 | 120 | 180 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 180 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 140 | 120 | 80 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 240 | 300 | 600 | 240 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 250 | – | 200 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 350 | 300 | 600 | – | 300 |



## உருளைக்கிழங்கு வடை

**தேவையான பொருள்கள்:**

உருளைக்கிழங்கு – 4 [வேகவைத்துத் தோலுரித்தது]
கடலை மா – 1 கப்
அரிசி மா – அரை கப்
பச்சை மிளகாய் – 5
இஞ்சி – 1 துண்டு
பெருங்காயத் தூள் – 1 சிட்டிகை
கொத்தமல்லி – சிறிது
உப்பு – தேவையான அளவு
எண்ணெய் – பொரிப்பதற்குத் தேவையான அளவு

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேகவைத்துத் தோலை உரித்துக் கட்டியில்லாதவாறு மசித்துக் கொள்ளவேண்டும். பச்சைமிளகாய், இஞ்சி, கொத்தமல்லியை சிறிது சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் மசித்த உருளைக் கிழங்கைப் போட்டு கடலை மா, அரிசி மா மற்றும் உப்புச் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவேண்டும்.

சட்டியை அடுப்பில் வைத்து, அதில் 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பச்சை மிளகாய், இஞ்சி, பெருங்காயத் தூள் சேர்த்து வதக்கி இறக்கி, உருளைக்கிழங்குடன் சேர்த்து, கொத்தமல்லியைப் போட்டு, நன்கு பிசையவேண்டும். பிசைந்த மா தளர்வாக இருந்தால் சிறிது அரிசி மா, கடலை மா சேர்த்துக் கொள்ளவும்.

ஒரு அகன்ற சட்டியை அடுப்பில் வைத்து அதில் பொரிப்பதற்குத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பிசைந்து வைத்துள்ள மாவை வடைகளாகத் தட்டிப்போட்டு, பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

மொரமொரப்பான உருளைக் கிழங்கு வடை ரெடி.

## நாளை

ஆடி-06
வியாழக்கிழமை
-21.07.2016
திதி: துதியை
பி.இ.04.00 வரை
நட்சத்திரம்:
திருவோணம் பி.ப.05.37
ராகுகாலம்:
01.31-03.01 வரை
…பநேரம்:
07.31-09.01 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே இரவில் 2 லட்சம் பார்வைகளைக் கடந்த




ஹரிஸ் ஜெயராஜ் ஒரு காலத்தில் ஏ.ஆர்.ரகுமானுக்கு அடுத்து பரபரப்பாகப் பேசப்பட்டவர். இசைக் கோர்வைகளினால் அதிகம் ரசிக்கப்பட்ட அவருடைய பாடல்கள் ஒரு கட்டத்தில் ரசிகர்களுக்குப் வெறுப் பேற்றின. அவருடைய பாடல்களை அவரே பிரதியடித்ததால் வந்த விளைவு அது. கடந்த சில வருடங்களாக ஹரிஸ் ஜெயராஜால் பெரிய வெற்றிகளையும் கொடுக்க முடியவில்லை. இசையைப் பொறுத்தவரையிலும் துப்பாக்கி படத்துக்குப் பிறகு ஹரிஸ் பெரிய வெற்றிகள் எதையும் கொடுக்கவில்லை. கடந்த நான்கு வருடங்களில் வெறும் 9 படங்களுக்கு மட்டுமே அவர் இசையமைத்தார்.

ஹரிஸின் அந்த தோல்வி முகத்தை விரைவில் வெளிவர இருக்கும் இருமுகன் மாற்றி விடும் போலிருக்கிறது. அண்மையில் வெளியிடப்பட்ட இருமுகன் படத்தில் இடம்பெற்ற ஹலனா... பாடல் டீசர் ஒரே இரவில் யுரியூப்பில் 2 லட்சம் பார்வைகளைக் கடந்துள்ளது. விக்ரம், நயன்தாரா இருவரின் நெருக்கமான நடிப்பில், அற்புதமான ஒளிப்பதிவில் அருமையான படப்பிடிப்பு இடத்தில் நடந்த இந்த 25 வினாடி பாடலே ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறது என்றால் முழுமையான பாடல் வந்த பிறகு ரசிகர்களை நிச்சயம் கவரும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இருமுகன் படம் மூலம் ஹரிஸ் மீண்டும் எழுந்து வரட்டும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 8 | 4 | 2 | 1 | 6 | 7 |
| 4 | 6 | 8 | 7 | 1 | 5 | 2 | 9 | 3 |
| 1 | 2 | 7 | 9 | 3 | 6 | 8 | 4 | 5 |
| 7 | 4 | 2 | 1 | 6 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 1 | 9 | 3 | 5 | 7 | 6 | 2 | 4 |
| 3 | 5 | 6 | 4 | 2 | 8 | 9 | 7 | 1 |
| 9 | 8 | 1 | 6 | 7 | 4 | 5 | 3 | 2 |
| 6 | 7 | 5 | 2 | 8 | 3 | 4 | 1 | 9 |
| 2 | 3 | 4 | 5 | 9 | 1 | 7 | 8 | 6 |

அழகி @Lekhasri_g

மனசு மரத்துப் போறதுக்கு
நோயும் இறப்பும் தேவையில்லை,
ஏமாற்றமும் சில நம்பிக்கைத்
துரோகமும்போதும்...!

படித்ததில் பிடித்தது

கணவன்:
டார்லிங் உன்னோட பிறந்த நாளுக்கு நெக்லஸ் வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு.
மனைவி: ஒரு கார் வாங்கிட்டு வந்திருக்கலாமே
கணவன்: கார் கவரிங்கில வராதுடா டார்லிங்
மனைவி:?????



படிப்பைவிட அப்பா ஒசத்திதான்...
அதனாலதான் இன்சியல முதல்லயும், படிப்பை கடைசியிலும் எழுதுறோம்..!

facebook ல வந்து பாருங்க.
சேர்ந்தாப்பில 4 Like வாங்குறதுக்கு எவ்வளவோ கஷ்டப்படுறேன் எண்டு



சும்மா Like விழல, Like விழலனா, எப்டி விழும்



டேய் மச்சி, ஈவ்னிங் படத்துக்கு போகலாமா?
ம்ம் போகலாம் டா. ஆமா! என்ன படம்?
ஒரு சேஞ்சுக்கு மலையாள படம் பார்க்கலாம்.
சரி படத்தோட பேர் என்ன?
"லைபாய் சோப்பு கட்டி"
திலீப் நடிச்சது
முண்டம், அது "லைவ் ஒவ் ஜோஸ் குட்டி" டா



**மேடம்:** சுயநலம் மிக்க சிலர், உங்களிடம் நட்பு பாராட்டலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள், சிக்கனம் மூலம் செலவை சமாளிப்பர்.

**இடபம்:** எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு, புதிய இனங்களில் வீட்டுச் செலவு அதிகரிக்கலாம். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி, திருப்திகரமாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** பெருந்தன்மை மிக்கவராக செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவை தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** சிலரது பேச்சு, உங்களை சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**துலாம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போகும் சூழல் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்களை, சிலர் தவறாக புரிந்து கொள்ள நேரிடலாம். தொழில், வியாபார நடைமுறையில் குறுக்கீடு வந்து சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**தனுசு:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். துவங்கிய நற்செயல் அத்தனையும் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வருமானம் பெருகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** எதிலும் பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். புத்திரரின் செயற்பாடு, மனதுக்கு ஆறுதல் அளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** உற்சாகம் நிறைந்த மனதுடன் செயற்படுவீர்கள். வெகுநாள் திட்டமிட்ட செயல் இன்று நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். இலாபம் உயரும். நண்பர்களால் உதவி உண்டு.

**மீனம்:** மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சிறந்து, ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடாப்பிடியாக

விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்படவேண்டும். தமிழ் தேசிய இனம் அகிம்சைப் போராட்டங்களை மேற்கொண்டு வந்த வேளை வன்முறைப்போராட்டம் வெடித்ததில் அகிம்சை வழியில் போராடிய சிவா முதல் அனைவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற போர் முடிவடைந்ததும் ஆணவத்துடனும் அகங்காரத்துடனும் ஆட்சி நடத்திய ஆட்சியாளர் தூக்கி வீசப்பட்டார். நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தது.

இன்றைய தருணத்தில் நாம் எம்முடைய பிரச்சினைகள் என்ன என்ற தெளிவில்லாத சூழ்நிலையில் இருக்கின்றோம். தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நல்லாட்சி அரசினையும், அது ஏற்படுத்தித்தந்த சந்தர்ப்பத்தையும் சரியாகப்பயன்படுத்துகின்ற பொறுப்பு தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் உண்டு. இன்று நாம் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

இராணுவம் கையடக்கி வைத்திருக்கும் நிலங்களை விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை விடப்பட, தென்பகுதியில் உள்ளவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து தேசியப் பாதுகாப்புக்கு பாதகம் என்று தெரிவிக்கின்றனர். அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரும்போது, தென்பகுதிலுள்ள தீவிர அரசியல்வாதிகள் அரசியல் கைதிகள் எவருமில்லை, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய கைதிகளே சிறைகளில் இருப்பதாக கூறுகின்றனர். இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியான கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

போர்க்குற்றம் தொடர்பில் கூறுகின்றபோது, இராணுவம் அவ்வாறான குற்றங்களில் ஈடுபடவில்லை என்று தெற்கு கூறுகின்றது.

நடந்து முடிந்த போரில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அதற்குப் பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று தமிழ்த் தரப்புக்கள் அடம்பிடிக்கின்றன. தென்னாபிரிக்காவில் என்ன நடந்தது? இவ்வாறான மனித உரிமை மீறலுடன் தொடர்புடைய இராணுவத்தினருக்கு எதிராக சொற்ப விசாரணைகளே இடம்பெற்றன. பின்னர் அவர்களும் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர்.

இந்த விசாரணைகள் பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றன. இதுவரை இதற்கு தீர்வு காணப்படவில்லை. இந்தப்பிரச்சினை இன்றுநாளை முடிவடையக்கூடியதல்ல. வெள்ளைக்கொடி விவகாரம் மிகப்பெரிய தவறு. பன்னாட்டு சட்டங்களை மீறும் குற்றம். அந்தக் குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் கட்டளையை ஏற்று பல்லாயிரக்கணக்கான போராளிகள் சாவைத்தழுவியபோது, ஏனைய புலிகளின் தலைவர்கள் வெள்ளைக்கொடியுடன் வந்தனர். கடந்த கால அரசுகளுடன் புலிகள் பல தடவைகள் ஒப்பந்தங்களை மேற்கொண்டபோதும், ஒவ்வொரு தடவையும் மீறப்பட்டே வந்தன.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பேசித் தீர்க்கவேண்டிய பல விடயங்கள் உள்ளன. நாங்கள் பல உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் செய்திருந்தோம். அவற்றை எல்லாம் தேடி எடுத்து ஆராய்ந்து கொண்டிருக்கமுடியாது. சாத்தியப்படாத நிலையை விடுத்து, சாத்தியமான சாதனையை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும் - என்றார். (வ-4,108)

## யாழ்.

விரும்புவதாக அவர்கள் கூறுகின்றனர். எதிர்காலத்தில் இதுபோன்ற முரண்பாடுகள் தவிர்த்துக்கொள்ளப்படும் என்று மாணவர்கள் உறுதிமொழி வழங்கினர்.

இவ்வாறு தெரிவித்தனர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விஞ்ஞானபீடதமிழ் – சிங்களமாணவர்களுக்கிடையிலான குழப்பநிலை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர்கள் மூவர் அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கருணாரத்ன பரணவிதானகே, இராஜாங்க நிதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரே வந்திருந்தனர். அவர்கள் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளை நேற்று பிற்பகல் 2 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள், மாணவர்கள் என அனைவரையும் சந்தித்தோம். பல்கலை அசம்பாவிதங்கள் தொடர்பில் பேசினோம்.மாணவர்கள் அனைவரும் புரிந்துணர்வுடன் உள்ளனர். கல்வி நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்பதில் அக்கறையாகவுள்ளனர். விசாரணைகளை மேற்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை முன்வைக்கப்படும். அதன்பிரகாரம் குற்றமிழைத்த மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை பல்கலைக்கழக சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்கவிதிகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

இலங்கை ஒரு சிறிய நாடு. இங்கு பல்லின மக்கள் வாழ்கின்றனர். அவர்களிடையே ஒற்றுமையும் நல்லிணக்கமும் நிலவ வேண்டும். நல்லிணக்கத்தைப் பாதிக்கின்ற இவ்வாறான சம்பவங்கள் இனிவருங்காலங்களில் இடம்பெற இடம்தரக்கூடாது என்று அமைச்சர்கள் தெரிவித்தனர்.

சமயம்சார் கல்வி மாணவர்களிடையே முன்னெடுக்கப்படவேண்டும்.அதன் முக்கியத்துவம் உணரப்படவேண்டும். தொடர்பாடல் இடைவெளிகள் குறைவடைய வேண்டும். மாணவர்கள் ஒழுக்கவிதிகளை பின்பற்றுவது தொடர்பிலான கரிசனையை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். யாரையும் நாங்கள் குற்றம் சுமத்தவில்லை. சமூகத்தில் உள்ள அனைவரும் இந்த விடயங்கள் தொடர்பில் பொறுப்பணர்வுடன் செயற்படவேண்டும்.

பல்கலைக்கழகங்களில் கல்வியை கற்றுக்கொடுப்பதற்கும், அதனை கற்பதற்குமான முயற்சிகளே மேற்கொள்ளப்படவேண்டும். அதுதவிர்ந்து முரண்நிலைகளை, இடர்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கக் கூடாது. உண்மையில் என்ன நடந்தது என்பதும் யார் யார் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ளார்கள் என்பதும் விசாரணைகள் மூலம் கண்டறியப்படவேண்டும்.

பல்கலைக்கழகத்தினுள் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான அலகு ஒன்றினை ஏற்படுத்தலாம். தற்போது ஒரேயொரு சிங்கள விரிவுரையாளரே சிங்கள மொழிக் கற்கையை போதிக்கின்றார். தமிழ் மாணவர்கள் சிங்களம் கற்பதற்கும் சிங்கள மாணவர்கள் தமிழ் கற்பதற்குமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். கல்வி சார்ந்த விடயதானங்களைத் தாண்டி தமிழ் சிங்கள மாணவர்கள் இணைந்து செயற்படக்கூடிய கலாச்சார நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்படலாம்.

மிகப் பிரதானமாக அரசு விரைந்து அரசியல் தீர்வினை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை செய்ய வேண்டும்.அதற்கு முயற்சித்திருக்க வேண்டும் என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வ-4,ரி2)

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் தம்பிராஜா



நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல.74, ஸ்ரீ மகிந்த தர்மவீதி, தெமட்டகொடையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் தம்பிராஜா 15.07.2016 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - மீனாட்சி தம்பதிகளின் அருமைப் புதல்வியும், சிறுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - தண்டிகைப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் தம்பிராஜாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புஞ்சி பொரளை நீலா மலர்ச்சாலையில் இன்று (20.07.2016) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று மாலை 5 மணிக்குப் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. சுரேஸ் - மகன்
077 998 1515


மகன்மார்கள், மகள்மார்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

(11,17,18)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தேவராஜா

(வலி.தென்மேற்கு- அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய செயலாளர், சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கச் செயலாளர், சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு மற்றும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கோண்டவிலில் தற்போது வசித்தவருமாகிய கந்தையா தேவராஜா (இளைப்பாறிய கடற்றொழில் கல்லூரி போதனாசிரியர்) 18.07.2016 திங்கட்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தமணியரூபியின் (சங்குவேலி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களாகிய நடராசா (வீமன்காமம்), சிவராசா (காங்கேசன்துறை), நவமணி, குஞ்சுமணி மற்றும் இராசமணி ஆகியோரின் சகோதரரும் இராசரூபன், பகீரதி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வரதன் (நோர்வே), ஷிராணி(ஆசிரியை- வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரூஷாந், ஹரிணி (நோர்வே) மற்றும் மித்ரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2016) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மகன்**

011 258 2100, 071 6874576

## திருமதி பூரணம் ஆதிரைநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



பிறப்பு : 12.07.1936
இறப்பு : 19.07.2016

கொடிகாமம் வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் ஆதிரைநாதன் நேற்று (19.07.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- கதிராசுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் ஆதிரைநாதனின் அன்புத் துணைவியும் சரஸ்வதி, சிவயோகநாதன், சிவநாதன், சோதிநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற குலேந்திரராசா மற்றும் யசோதினி , மனோரஞ்சிதம், தயாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளையின் பாசமிகு சகோதரியும் குலரேவதி- நிரூபன், ஜீவாஞ்சனா, டுவாரகா கிருஷாந்த், கிருஷிகா, கிருஷனா, கிருஷயன், கம்ஷவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தம்ஷினியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடிகாமம் வடக்கு கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொடிகாமம் வடக்கு,**
**கொடிகாமம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 777 7612**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## 16ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
18
.
02
.
1944



மறைவு
05
.
07
.
2016

அமரர் கலாபூசணம்

### இலட்சுமணன் கெங்காதரன் (ஆச்சாரி)

கடந்த05.07.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.07.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் காங்கேசன்துறை வீதியிலுள்ள (மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகில்) அண்ணாமலையான் ஸ்ரீராகவேந்திரா மண்டபத்தில் (ASRமண்டபம்) நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

314.கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம். 021 222 8415 குடும்பத்தினர்.

## பதவிக்கான தேடல்

நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது American நிறுவனமானது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த ஆண்டு ஆரம்பிக்கவுள்ளது.

அனுபவம் அவசியமற்றது. வயதெல்லை 18-30

மேற்பார்வையாளர், விற்பனைப் பிரதிநிதிகள்.

தங்குமிடம் , உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 077 136 3797 0777 009 820

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
26
.
03
.
1963



மறைவு
20
.
06
.
2016

### அமரர் மனோன்மணி கனகலிங்கம்

கடந்த (20.06.2016) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த அமரர் மனோன்மணி கனகலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.07.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குருசுமதவடி,
ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 076 8704508, 077 4830212

## ரூ.16 கோடி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
3.20 மணிக்கு டுபாய் நோக்கிப் பயணிப்பதற்காக வருகைதந்த பெண்ணொருவரின் பயணப் பொதிகளை சோதனைக்கு உட்படுத்திய போதே இந்தப் பணத்தொகை பறிமுதல் செய்யப்பட்டது.

இதில் பல்வேறு நாட்டு நாணயங்களும் அடங்குவதாகக் கூறப்பட்டது.

இலங்கை நாணய செலாவணியின்படி, சாதாரண விமானப் பயணியொருவர் 5000 டொலர் பெறுமதியான பணத்தையே எடுத்துச்செல்ல முடியும். வங்கியொன்றினால் அனுமதிக்கப்படுமாயின் 10,000 டொலருக்கு சமமான வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டு செல்ல முடியும்.

அந்தத் தொகையைவிட கூடுதலான பணத்தைக் கொண்டு செல்லும்போது செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முழு அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் அவசியம்.

கைது செய்யப்படுள்ள பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணையின்போது, பணம் செலுத்துவதாக ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த வெளிநாட்டு நாணயங்களை டுபாய் நோக்கி எடுத்துச் செல்வதற்கு முன் வந்துள்ளமை தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட ஏனைய இரு சந்தேகநபர்களும் அந்த பெண்ணுக்கு உதவியாகச் சென்றவர்களாவர். (வ-4)


# NORTH LANKA IIT

தமிழ் மொழி மூலமான முதுகல்விமாணி MEd கற்கைநெறி 2016-2017 விண்ணப்பம்

## M.Ed Tamil Medium Programme 2016 - 2017

*கல்வியமைச்சின் அனுமதி
*பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி
*வடமாகாணக் கல்வியமைச்சின் அனுமதி

மேற்படி பாடநெறி எமது நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளது. தகைமை BEd or PGd in Ed பூர்த்தி செய்த அரச தனியார் பாடசாலை ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தை சுயமாகத் தயாரித்து 25.07.2016 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

விலாசம்
**North Lanka IIT, Top Floor,
People's Bank Building,
Stanley Road, Jaffna.**

தெரிவுமுறை: நேர்முகத்தேர்வு (சேவைமூப்பு அனுபவம் கஸ்டப்பிரதேச சேவைக்கு முன்னுரிமை)

நேர்முகத்தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளின் நலன் கருதி விரைவில்

கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு , தென் மாகாணம் - மாத்தறை
மேல் மாகாணம் - கொழும்பிலும் முதுகல்விமாணிப்பாடநெறி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்புகளுக்கு
**Dr.B.Thanabalan Ph.D
Dean of the Faculty of Education
North Lanka IIT
T.P: 0770681958**


## மரண அறிவித்தல்

### கதிரவேலு தங்கராசா

பிறப்பு
10
.
06
.
1922



இறப்பு
19
.
07
.
2016

யாழ்ப்பாணம் கோணாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கூழாவடி ஒழுங்கை, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தங்கராசா நேற்று (19.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை -நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், சுசிலா, ஸ்ரீதர், வக்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ராஜகுலசிங்கம் மற்றும் சுபத்திரா, சந்திரதஜன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அன்னலட்சுமி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரசாத், கௌதமன், பவித்திரன், அகிலன், பிரியங்கன், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07. 2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50/28, கூழாவடி ஒழுங்கை,
கொட்டடி.**

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 7797

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள்

மாணவனின் முறைப்பாட்டின் பிரகாரம், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உட்பட மூவரைக் கைது செய்ய பொலிஸார் அனுமதி கேட்டிருந்தனர். கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கையில் நேற்று பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்தச் சம்பவம் இனமுறுகலைத் தோற்றுவிக்கக்கூடாது என்ற கருத்துநிலை காணப்பட்டது. இது தொடர்பில், மாணவர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க , பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருடன் பேசினர். இதன்போதே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் மேற்படி தெரிவித்தனர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர்களிற்கான வரவேற்பு நிகழ்வில் இரு குழுக்களிற்கிடையில் ஏற்பட்ட கைகலப்பினால் பல மாணவர்கள் காயமடைந்தனர். அவர்களில் 4 பேர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் குறித்த சம்பவத்தில் தலையிட்டு சமரசம் செய்து நிலமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இதனை பல்கலைக்கழக நிர்வாகமே உடன் விசாரணை மேற்கொண்டு உரிய தீர்வை வழங்கும். அதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கத்திற்கு வந்துள்ளனர் என நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரிக்க 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் விசாரணையின் படி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணை வேந்தர் அறிவித்தார்.

பல்கலைக்கழகம் நிர்வாக ரீதியில் பொறுப்பேற்றுக் கொண்டதன் பெயரிலும் மாணவர்களின் ஒற்றுமை , இன ஒற்றுமையைக் கருத்தில் கொண்டே பொலிஸில் முறையிடாது தவிர்த்திருந்தோம். தற்போது சட்டம் தன் கடமையை செய்ய முற்படுகின்றபோது, ஒரு தரப்பு மட்டும் பாதிப்படையும் சூழல் ஏற்படுகிறது. அவ்வாறெனின் அமைச்சர்கள் , பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட அனைவரின் முயற்சி எந்தளவிற்கு நன்மை பயக்கும் எனக் கூறமுடியவில்லை. என்று மாணவர்கள் தெரிவித்தனர். (வ-4 -101)

## ஐ.நா.

றார். இவ்வாறு தெரிவித்தார் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி.

இலங்கைக்கு தனிப்பட்ட பயணமாக வந்துள்ள ஹரி ஆனந்தசங்கரி, 'உதயன் பத்திரிகை' அலுவலகத்திற்கு நேற்று வருகை தந்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் கனேடிய அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்த காலங்களில் பின்பற்றிய அதே நிலைப்பாட்டில்தான் கனடா இருக்கின்றது. ஆனால் அதைச் சொல்லும் விதத்தில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது. இராஜதந்திர ரீதியில் தனது நிலைப்பாட்டை கனடா இப்போது வெளிக்காட்டுகின்றது.

இலங்கைக்கு கனடா உள்ளிட்ட மேற்குநாடுகள் உதவி செய்வதற்கு காரணம், இலங்கை ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே. அந்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள், அதனை நடைமுறைப்படுத்த வைப்பதற்கு இலங்கைக்கு உதவி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

போர்க்குற்ற பொறிமுறையில் முக்கியமானதே வெளிநாட்டுநீதிபதிகளை விசாரணையில் உள்ளடக்குவதுதான். பாதிக்கப்பட்ட மக்களை நான் நேரில் சந்தித்தபோது, அவர்கள் தமக்கு பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு விசாரணையில் தேவை என்பதைக் குறிப்பிட்டனர் - என்றார்.

ஹரி ஆனந்தசங்கரி, நேற்றுக் காலை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மார்டின் வீதியிலுள்ள தலைமை அலுவலகத்திற்குச் சென்று அங்கு கலந்துரையாடல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## கொக்கிளாயில்

சிங்கள சம்மாட்டிமாரினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் கடல் நீரேரியிலேயே தொழில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நூறு மீற்றர் நீளமான கடற்கரைப் பிரதேசத்தை படகுகள் நிறுத்துவதற்கு அடையாளப்படுத்திக் கொடுத்தது. அவ்வாறு அடையாளப்படுத்திக் கொடுத்த இடத்தையும் சிங்கள சம்மாட்டிமார் விடுவிக்கவில்லை. இதனால் கடல் நீரேரியிலேயே எமது தொழிலைத் தொடர்ந்தோம்.

முல்லை மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான பாடுகள் மீளவும் அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு, கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட பிரதேசத்தில் வாடி அமைக்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டோம். ஆறு சிமெந்து தூண்கள் எழுப்பப்பட்டு கிடுகளும் வேயப்பட்ட நிலையில், சிங்கள சம்மாட்டிகள் மூவர் அந்த இடத்துக்கு வந்தனர். அங்கு வாடி அமைக்க வேண்டாம் என்று தெரிவித்தனர். முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் கொடுத்தனர். கொக்கிளாயில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையின் விகாராதிபதியும் அங்கு வந்தார். நாங்கள் எமது தரப்பு நியாயங்களை எடுத்துச் சொன்னோம். பொலிஸார், சிமெந்து தூண்களை அங்கிருந்து அகற்றி அதனை ஏற்றிச் செல்லுமாறு பணித்தனர் - என்றார். (வ-5)

---

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னலெட்சுமி சேனாதிராசா**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கேணியடி வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலெட்சுமி சேனாதிராசா நேற்று (19.07.2016) செவ்வாய் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சி.சேனாதிராசாவின் (தபால் அதிபர்-முரசுமோட்டை) அன்பு மனைவியும், வனிதா (ஆசிரியை-யாழ்சன்மார்க்கம் மகா வித்தியாலயம்), நந்தினி ஆகியோரின் தாயாரும் அருட்செல்வன், குமாரதேவன் (அப்பன் ஆட்டோ) ஆகியோரின் அன்பு மாமியாரும், திவாஹரி, உஜாவந்தி, ஜதுஷாங்கி, பிரணவன், தக்சாயினி, லுஜிசாந், மௌலிசாந் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்ற தர்மலிங்கம், கனகலிங்கம் (ஓய்வு பெற்ற F.A நெடுங்கேணி), வரதலட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை), Dr.சண்முகலிங்கம்(UK) ஆகியோரின் அன்பு சகோதரியும் திருமேனி (கனடா), மதிவதனா(அமெரிக்கா), வீரசிங்கம் (ஓய்வு நிலை அதிபர்), சந்திராதேவி(UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (21.07.2016) வியாழக்கிழமை பிற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்கள்

**அருட்திரு லாசா செபஸ்ரியன் குருஸ் (I.V.D)**



திருவுளச் சபைக் குருவாகிய அருட்திரு செபஸ்ரியன் குருஸ் கொச்சிக்கடை தோப்பு திருவுளச்சபை இல்லத்தில் பணியாற்றும் போது நேற்று (19.07. 2016) காலமானார்.

மக்கள் அஞ்சலிக்காக இவரது பூதவுடல் மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
077 4282738, 077 3515633, 077 6573002

தகவல்:
**திருவுளச் சபை மாகாண அதிபர்.**

---

**திருமதி**
**ஜெயலட்சுமி (பாக்கியம்) கனகசபை**



புங்குடுதீவு. 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி கனகசபை 18.07.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- நாகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், கனகாமிர்தம் (மலர்) ஜெயகுமாரி(குமாரி- பிரான்ஸ்), காலஞ்சென்ற ரோகினி மற்றும் உதயகுமாரி (சோதி -பிரான்ஸ்) ,வசந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், மருதலிங்கம் (மருதம் உணவகம்- சாவகச்சேரி), காலஞ்சென்ற முத்துக்குமார் மற்றும் நவராசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், சீவரத்தினம், சாந்தலிங்கம், சண்முகராஜா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, வசந்தா மற்றும் கமலாதேவி, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நடராசா, செல்லத்துரை, தங்கம்மா மற்றும் நேசம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ரமேஸ்குமார், வாணி, சர்மிளா, நித்தியானந்தன், சுரேஸ்குமார், தமிழினி, பிரமிளா, தயாளன், மேகலா, அபிராஜ், துஸ்யந்தன், தனுஷா, துஸ்யந்தி, துஷானா ஆகியோரின் பேர்த்தியும், பிரவீன், ஆருஷ், யதுர்ணா, மேகவி, விஷால், யருண், பிரணிஸ்காந் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 2227 0474**

---

## மரண அறிவித்தல்கள்

**திருமதி மனோன்மணி கதிர்காமநாதன்**



யாழ்.சரசாலை வடக்கு, சாவகச் சேரியைப் பிறப்பிடமாகவும், பெரிய நாவலடி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி கதிர்காமநாதன் 16.07.2016 சனிக்கிழமை கொடிகாமத்தில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், நல்லம்மா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னுச்சாமி, செல்வநாயகி மற்றும் செல்வராசா, நாகராசா, ஜெயராசா, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், கௌரிமாலா (பார்லின்), நகுலேஸ்வரன் (அமெரிக்கா), ஜெகதீஸ்வரன் (நீர்வேலி), நந்தினி (கனடா), ஜெயந்தினி (வரணி இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை), ஜெயகௌரி (வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் தென்மராட்சி ) ஆகியோரின் தாயாரும், சிற்றம்பலம் (பார்லின்), சறோ (அமெரிக்கா),சிவபாலன் (கனடா), அபிராமி, நந்தகுமார் (சக்திஸ்ரோர்ஸ் கொடிகாமம்), ஜெயக்குமார் (அஞ்சல் அலுவலகம் - கொடிகாமம்) ஆகியோரின் மாமி யாரும், கௌசிகா, குருபரன், கரிகரன், அட்சிகா, ஐஸ்வர், தட்சிகா, லிந்துஜா, விபுநந்தா, விபுலா, விஸ்னிகா, பிரதுஷன், லக்சிகா, ரிஷானுகா, ரிஷிகேசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2016) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரிய நாவலடி,**
**கொடிகாமம்.**

(J/3034)
(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 959 8647, 077 801 2258**

---

**இணுவையூர்**

**திருமதி இராஜேஸ்வரி குலசிங்கம்**
**(இரங்காதேவி, சக்திதேவி)**

மண்ணில்
26 . 12 . 1949



விண்ணில்
18 . 07 . 2016

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Fribourg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி குலசிங்கம் கடந்த (18.07.2016) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு- சரஸ்வதி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அஸ்டாங்க யோகி குலசிங்கம் (கருணா சாகர நரசிம்மதாஸ்) அவர்களின் அன்பு மனைவியும், கணதர்சினி, சிவதர்சினி (சுவிஸ்), கமலதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பஞ்சாட்சரம் (ஓய்வு நிலை அதிபர்), இராசலிங்கம், பரராஜசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதய ராஜன், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), சரவணகுமார் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அற்புதராணி, பரமேஸ்வரி, நிர்மலாதேவி (சுவிஸ்), முருகையா, கமலேஸ்வரி, காலஞ்சென்ற நாகலிங்கம், கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெனன், ஜெனீசன், அஜன், ஆரணி, அக்சியா, அபிராமி, ஹரிஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.07.2016) வியாழக்கிழமை சுவிஸ்லாந்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நா. குலசிங்கம்**
**+41786231237**

தகவல்:
**சி. பஞ்சாட்சரம்**
**சி. இராசலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1.7 மில்லியன் யூரோக்கு கார் வாங்கிய ரொனால்டோ

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ 1.7 மில்லியன் யூரோ செலவில் சொகுசு கார் ஒன்றை வாங்கியுள்ளார்.
நடப்பு வருட யூரோக் கிண்ணத் தொடரை போர்த்துக்கல் வென்றமையின் நினைவாகவே தான் இந்தக் காரை வாங்கியதாகவும், இது ஒரு நினைவுச் சின்னம் என்றும் ரொனால்டோ தெரிவித்தார். (ம)

## 10 இலக்குகளின் எதிரொலி; முதலிடம் பிடித்தால் யாசீர்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் பந்துவீச்சாளர்கள் வரிசையில் பாகிஸ்தானின் சுழல்பந்து வீச்சாளர் யாசீர் ஷா முதலிடம் பிடித்தார். இலங்கை வீரர் கள் எவரும் பட்டியலில் முதல் பத்துக்குள் இடம் பிடிக்க வில்லை.
தரப்படுத்தலின்படி யாசீர் ஷா முதலிடத்திலும், இந்திய சுழல் வீரர் அஸ்வின் இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்களான அண்டர்சன், புரோட் இருவரும் மூன்றாவது, நான்காவது இடத்திலும் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ஜடேயா (இந்தியா), போல்ட் (நியூசிலாந்து), ஹசில்வூட் (அவுஸ்திரேலியா), மோர்க்கல் (தென்னாபிரிக்கா), பிளன்டர் (தென்னாபிரிக்கா) ஆகியோர் உள்ளனர்.
இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் யாசீர் ஷா 10 இலக்குகளைக் கைப்பற்றி பாகிஸ்தானின் வெற்றிக்கு காரணமாக இருந்தார். இதனாலேயே இந்த முன்னேற்றம் கிடைத்துள்ளதாகக் கருதப்படுகிறது. (ம)





# ஆரம்ப வீரராக யார்? குழப்பத்தில் கோக்லி

இந்திய அணியின் ஆரம்ப வீரராக யாரைக் களமிறக்குவது என்ற சிக்கல் அந்த அணியின் தலைவரான கோக்லிக்கு ஏற்பட்டுள்ளது.
இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது. ஆரம்ப வீரராக முரளி விஜய் ஓர் முனையில் உறுதி செய்யப்பட்டிருக்கும் வேளையில், மற்றொரு வீரராக யாரைக் களமிறக்குவது என்ற சிக்கல் இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோக்லிக்கு ஏற்பட்டது.
தவான், லோகேஸ் ராகுல் இருவரும் தீவுகளுக்கு எதிரான தொடருக்காக தெரிவாகினர். இருவருமே ஆரம்ப வீரர்கள்தான்.
ஐ.பி.எல். தொடரில் தவான் சிறிது தடுமாறினாலும் தீவுகளில் நடை பெற்ற பயிற்சி ஆட்டத்தில் அரைச்சதம் விளாசியிருந்தார்.
லோகேஸ் ராகுல் கடந்த சில மாதங்களாகவே சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார். சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் சதத்தையும் பதிவுசெய்திருந்தார். எனவே இவர்களில் எவரை நீக்குவது? எவரை களமிறக்குவது? என்ற சிக்கல் கோக்லிக்கு ஏற்பட்டது.
விளையாடும் பதினொருவர் குழாமில் இருவரும் இணைத்துக்கொள்ளப்பட்டால், இடதுகை துடுப்பாட்ட வீரர் என்ற வகையில் தவானுக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் கும்ளேயும் தவானையே பரிந்துரைத்தார். (ம)

## யாழ். சம்பியன்

கரணவாய், ஜூலை 20
மாகாணமட்ட கரம் தொடரில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் யாழ். மாவட்ட அணிகள் சம்பியனாகின.
இந்தத் தொடரின் இறுதியாட்டங்கள், கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக அரங்கில் அண்மையில் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. இதில் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது யாழ். மாவட்ட அணி.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியும் வவுனியாமாவட்டஅணியும்மோதின. 2:0 என்ற நேர் செற் கணக்கில் யாழ். மாவட்ட மகளிர் அணி சம்பியனானது. (ம-108)

## செல்சியில் கன்டே



லெய்செஸ்டர் சிற்றியின் மத்திய கள வீரரான இன்கொலோ கன்டேயை ஐந்து வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது செல்சி.
பிரான்ஸ் லீக் அணியான கானிலிருந்து ஆறு மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ் களுக்கு கடந்த பருவகாலத்தில் லெய்செஸ்டருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார் கன்டே. லெய்செஸ்டரின் ஒப்பந்தம் முடிவுற்றதையடுத்து அவர் 30 மில்லியன் ஸ்டேர் லிங் பவுண்ஸ் களுக்கு செல்சியில் ஒப்பந்தமாகியுள்ளார்.
செல்சியின் ஒப்பந்தத்தை யடுத்து, ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரிய கழகங்களொன்றில் கைச்சாத்திட்டமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன். எனது கனவொன்று நனவாகியுள்ளது என கன்டே தெரிவித்தார். செல்சி அணியில் கன்டேயை இணைத்துக் கொண்டமை அணியை இன்னும் பலப்படுத்தும் விதமாக அமையும் என செல்சி நிர்வாகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ம)

# சவூதி அரேபிய அணியில் பெண்களுக்கு வாய்ப்பு

SAUDI ARABIA OLYMPIC COMMITTEE
اللجنة الأولمبية العربية السعودية

ரியோ ஒலிம்பிக் தொடருக்கான சவூதி அரேபிய அணியில் 4 பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இதில் 100 மீற்றர் ஓட்டம், 800 மீற்றர் ஓட்டம், ஜூடோ ஆகிய போட்டிகளுக்கே குறித்த வீராங்கனைகள் சவூதி அரேபிய அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.
ஒலிம்பிக் போட்டியில் சவூதி அரேபிய பெண்கள் கலந்துகொள்வது இது இரண்டாவது முறையாகும். ஆரம்பத்தில் இவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. நீண்ட பரிசீலனையின் பின்னரே இவர்கள் அணியில் உள் வாங்கப்பட்டனர்.
பிரேஸிலில் பரவியுள்ள சிகா வைரஸ் அச்சம் காரணமாக பல வீரர்கள் தொடரிலிருந்து விலகிச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



# ஊக்கமருந்து விவகாரம் ஆஸி. வீரருக்குத் தடை

ஊக்க மருந்து பயன்படுத்தியமைக்காக ஆஸ்திரேலிய வீரர் வினோத்குமார் என்பவருக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.
அல்ஜீரியாவில் நடந்த ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப் போட்டியில் வினோத்குமார் கலந்துகொண்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தமை கண்டறியப்பட்டது. இதனாலேயே இவருக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
*எவரெஸ்ட் வி.க. தொடர்*
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் வடமகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ்அணியைஎதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதவுள்ளது.

*இருதயராஜா வி.க. தொடர்*
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா அணியை எதிர்த்து ஆதிசக்தி அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது லூட்சியா

யாழ்ப்பாணம், ஜூலை 20
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அண் மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் சென். லூட்சியா அணி வெற்றிபெற்றது.

கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்னார் சென். லூட்சியா அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதியது. இதில் மன்னார் சென். லூட்சியா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# மாகாணமட்ட தடகளத் தொடரில் கவனிக்க வைத்த பாரதி வித்தி.

யாழ்ப்பாணம், ஜூலை 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றாமல் விட்டாலும் அதிகம் கவனிக்க வைத்த வரிசையில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்துக்கும் பிரதான இடமுண்டு.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினம் நிறைவடைந்தன. இதில் கலந்துகொண்ட பாடசாலைகளில் ஒன்றான முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம் 19 பதக்கங்களை அள்ளியது. இவற்றில் 13வெள்ளிப்பதக்கங்கள், 6வெண்கலப் பதக்கங்கள் என்பன அடங்குகின்றன. குறித்தபாடசாலையைப் பொறுத்தமட்டில் இந்தப் பெறுபேறு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாகும். கடந்த வருடம் 12 பதக்கங்களே கிடைத்தன.

15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 110 மீற்றர் தடைதாண்டலில் கலந்துகொண்ட யு.திவ்யா வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 800 மீற்றர், 1500 மீற்றர், 5000 மீற்றர் ஓட்டங்களில் கலந்துகொண்ட போ.மகிழ் நிலா அனைத்திலும் வெள்ளிப் பதக்கங்களையும், 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், 110 மீற்றர் தடைதாண்டல் ஆகியவற்றில் கலந்துகொண்ட பா.யாழினி மூன்றிலும் வெண்கலப் பதக்கங்களையும், நி.யாழிசை 400 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் தடைதாண்டல் இரண்டிலும் வெள்ளிப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும், உயரம் பாய்தலில் களமிறங்கிய நா.கிருஜா வெள்ளிப் பதக்கத்தையும், 400 மீற்றர் தடைதாண்டலில் களமிறங்கிய எஸ்.தேவயாழினி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் களமிறங்கிய ஆர்.கெவின் இரண்டிலும் வெள்ளிப் பதக்கங்களை வென்றார். குறித்த வயதுப்பிரிவு ஈட்டி எறிதலில் களமிறங்கிய ஆர்.தமிழ்வாணன் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர், 400 மீற்றர் அஞ்சலோட்ட அணிகள் வெண்கலப் பதக்கங்களையும், 21வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர், 400 மீற்றர் அஞ்சலோட்ட அணிகள் வெள்ளிப் பதக்கங்களையும் கைப்பற்றின.

பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் அதிக புள்ளிகளைப் பெற்ற வரிசையில் பாரதி வித்தியாலயத்துக்கு மாகாண ரீதியில் ஆறாவது இடமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடமும் கிடைத்தது. (ம-23)

## பூப்பந்தாட்டத் தொடர் விரைவில்

கரணவாய், ஜூலை 20
பூப்பந்தாட்டத் தொடர் ஒன்று மாகாண ரீதியில் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.
மன்னார் மாவட்ட உள்ளக அரங்கில் அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் இந்தத் தொடர் முன்னெடுக்கப்படவுள்ளது. 12 வயது, 15 வயது, 19 வயது, 40 வயதுக்கு மேற்பட்டோர், திறந்த வயதுப் பிரிவு என இரு பாலாருக்கும் இடையில் தொடர் நடைபெறவுள்ளது. பங்குபற்றவிரும்பும் பாடசாலை அணிகள் மற்றும் கழகங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் தமது பதிவுகளை விரைவில் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)

## வொலிகிங்ஸ், சரஸ்வதி அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 20
மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வொலிகிங்ஸ், சரஸ்வதி அணிகள் வெற்றிபெற்றன.
தொடர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி ஏ அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் அணி மோதியது. இதில் கச்சாய் வொலிகிங்ஸ் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாயன்மார்கட்டுபாரதிபி அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணி மோதியது. இதில் புத்தூர் சரஸ்வதி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாணமட்டப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றன...

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் சார்பாக களமிறங்கியப் பதக்கங்களைக் கைப்பற்றிய மாணவர்கள் இன்று குறித்த கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.
பாடசாலையின் பிரதான மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.
13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கலந்துகொண்ட எஸ்.செந்தீஸ் 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றினர். 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எஸ்.வனஜன் 200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எஸ்.சாஜித்தன் 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 400 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். இவர்களே இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.
(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் முதன் முறையாக..

உங்கள் எதிர்கால பல்கலைக் கழகத்திற்கான இலவசச் சுற்றுலா

Attention! After A/L Students

மலேசியா உயர்கல்வி கருத்தரங்கு

ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10.00 மணி

BCAS வளாகம், யாழ்ப்பாணம்
16, பருத்தித்துறை வீதி

இலவசம் ஆர்வமுள்ள அனைவருக்கும்
- விமான டிக்கட்
- போக்குவரத்து
- தங்குமிடம்

செல்லுமிடங்கள்...
- Manipal International University (MIU)
- Melaka-Manipal Medical College (MMMC)
- Kuala Lumpur City Tour

BCAS Campus வழங்கும் இலவச மலேசியா சுற்றுலா பயணத்தினால் மாணவர்கள் அடையும் பயன்கள்

- நீங்கள் தெரிவு செய்யப் போகும் மலேசியா பல்கலைக் கழகத்தை பற்றிய முழுமையான அறிமுகம்
- மலேசியா பல்கலைக் கழகங்களில் மாணவரின் வாழ்க்கை முறை மற்றும் கற்றல் வசதிகளை நேரடியாக அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம்
- பெற்றார்கள் தமது பிள்ளைகளின் எதிர் காலத்தைப் பற்றி முடிவெடுக்கும் அருமையான வாய்ப்பு

MEDICINE | BIOMEDICAL SCIENCE | BIO TECHNOLOGY | DENTAL
COMPUTER SCIENCE | CIVIL ENGINEERING | MECHANICAL ENGINEERING | BUSINESS MANAGEMENT
ENGINEERING FOUNDATION | SCIENCE FOUNDATION

மாணவர்களே, பெற்றோர்களே..!
உயர் கல்விக்கான எமது இலவச வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்து கொண்டு இப்பொன்னான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

CALL 077 960 3753 / 076 520 4503 / 077 311 4105
முன் பதிவு Type Name & NIC No. & Send to 077 960 3753

BCAS JAFFNA CAMPUS 16, point Pedro Road, Jaffna.
ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk




# துடுப்பாட்டத் தரப்படுத்தலில் ஆஸியின் சிமித் முதலிடம்

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரப் படுத்தலில் ஸ்ரீவ் சிமித் முதலிடத்தைப் பிடித்தார். இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் பத்தாவது இடத்தில் உள்ளார். இவரே இலங்கையின் சார்பாக இடம் பிடித்த ஒரேயொரு வீரர்.

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட் டங்களில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்று வெளி யிட்டது. ஆஸ்திரேலியாவின் தலைவர் ஸ்ரீவ் சிமித் முதலிடம் பிடித்தார். இரண்டாவது இடத்தில் நியூஸிலாந்தின் அணித்தலைவர் வில்லியம்சன், மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர் அம்லா, நான்காவது இடத்தில் இங்கிலாந்தின் ரூட், ஐந்தாவது இடத்தில் வில்லியர்ஸ் ஆகியோர் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே அடம்வோஜஸ்(ஆஸ்திரேலியா), யுனிஸ் கான் (பாகிஸ்தான்), டேவிட் வோர்ணர் (ஆஸ்திரேலியா), மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்), மத்தியூஸ் (இலங்கை) ஆகியோர் உள்ளனர். (ம)


SAAMSON Experts in English Training

மூன்றே மாதங்களில் SPOKEN ENGLISH ஷாம்சனிடம் பழகுங்கள்!

"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின் மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"

சனி,ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 23.07.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு2: 10.00-12.00
பிரிவு3: 01.00-03.00

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.

ஷாம்சன் ஆசிரியரின் வாரநாள் வகுப்புகள் : 21.07.2016
பிரிவு 1: காலை-10.00 - 12.00

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486



GATEWAY Language Centre

GATEWAY LANGUAGE CENTRE

CAMBRIDGE UNIVERSITY PRESS

Teaching Knowledge Test (TKT)
Module 1-3

For English Teachers, School leavers who are looking to enter into the field of education, Any teacher/person who wishes to add a teaching qualification to their repertoire

Duration 30 hours per module

*Module 1*
Language and background to language learning and teaching.

*Module 2*
Lesson planning & use of resources for language teaching.

*Module 3*
Managing the teaching and learning process.

Other Courses
1. Microsoft Office Management
2. ICDL
3. Photography
4. English for Teenagers & School Leavers
   - Foundation (Level A1)
   - Pre-Intermediate (KET/Level 1)
   - Intermediate (PET/Level 2)
   - Upper-Intermediate (FCE/Level 3)
   - Diploma (CAE/Level 4)
5. English for Kids from 6 to 12 years
   - Pre Starters
   - Super Starters
   - Mighty Movers
   - Flyers
   - Pre-Foundation

6 Months Per Course

Admission open for August Session
Deadline for Registration 30 July 2016

CISI | Gateway Language Centre | Gateway Kids | IPICT | ICDL International Computer Driving Licence | e-Citizen

# 133, NavalarRoad, Jaffna
( Infront of the NSB Bank - 2nd Branch)
Tel: 021 492 7456 Fax: 021 221 7780
Email: gatewayjfn@sltnet.lk | Web: www.gatewayworldwide.com | FB: www.facebook.com/jaffnagateway


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.